பக்கங்கள்: பதினான்கு

உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 7.00

சுடர்17 வள்ளுவர் ஆண்டு 2033 ஐப்பசி 30 சனிக்கிழமை (16-11-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:354

ஐந்து பொருளாதார வலயங்கள் சட்டமூலம் மாத இறுதியில் வரும்

வடக்கு-கிழக்கு வலயத்தில் 8மாவட்டங்கள்

கொழும்பு,நவ.16

நாட்டை ஐந்து பொருளாதார வலயங்களாகப் பிரித்து அபிவிருத்தி செய்வது தொடர்பான சட்டமூலம் இம்மாத இறுதியில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஒவ்வொரு வலயத்திற்கும் உரிய மாவட்டங்கள் வரையறுக்கப்பட்டு, அபிவிருத்தித் திட்டங்கள் வகுக்கப்பட்டிருக்கின்றன என்று இலங்கை முதலீட்டுச் சபையின் அதிகாரி ஒருவர் தெரிவித்திருக்கிறார்.

இதன்படி அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை, வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்கள் வடக்கு - கிழக்கு வலயத்துக்கு உட்பட்டவையாகும்.

ஏனைய வலயங்களில் அடங்கும்

(14ஆம் பக்கம் பார்க்க)

உபகுழுவின் இன்றைய கூட்டம் தெல்லிப்பழையில் நடக்காது!

முகமாலை சூனியப்பிரதேசத்திலேயே

யாழ்ப்பாணம்,நவ.16

அதி உயர் பாதுகாப்பு வலயம், பொதுமக்களின் மீள் குடியமர்வு என்பன தொடர்பாக ஆராய்வதற்காக விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளும் அரச பிரதிநிதிகளும் கலந்துகொள்ளும் உபகுழுக்கூட்டம் இன்று முற்பகல் 10 மணிக்கு முகமாலை சூனியப் பிரதேசத்தில் நடைபெறவுள்ளது.

ஓமந்தையில் கடந்த திங்களன்று நடைபெற்ற பாதுகாப்பு உப குழுவின் முதலாவது கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின்படி உப குழுவின் முதலாவது உப கூட்டம் கடந்த புதனன்று ஓமந்தையில் நடைபெற்றது. இன்று நடைபெறவிருக்கும் உப குழுவின் இரண்டாவது கூட்டம் தெல்லிப்

(14ஆம் பக்கம் பார்க்க)

நாடாளுமன்றத்தின் அதிகாரத்தைப் பலப்படுத்த

தேர்தலைச் சந்திப்பதற்கு அரசு எந்நேரமும் தயார்!

நேற்றுச் சபையில் பிரதமர் ரணில் சூளுரை

கொழும்பு,நவம்பர்16

நாடாளுமன்றத்தின் அதிகாரத்தைப் பலப்படுத்துவதற்கான மக்களின் ஆணையைப்பெற மக்கள் முன் மீண்டும் செல்ல ஐ.தே.க. தயார் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று நாடாளுமன்றத்தில் சூளுரைத்தார். மற்றொரு தேர்தலுக்கு முகம் கொடுப்பது குறித்து எந்த ஒரு சிக்கலும் கிடையாது என்றும் பிரதமர் கூறினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று ஆரம்பமான வரவு - செலவுத் திட்ட குழு நிலை விவாதத்தின் போது உரையாற்றுகையிலேயே பிரதமர் இவற்றைத் தெரிவித்தார்.

இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான பரவலான அதிகாரங்கள் 13 ஆவது அரசமைப்புச் சட்டத் திருத்தம் மூலம் நாடாளுமன்றத்திடம் ஏற்கனவே வழங்கப்பட்டிருக்கின்றன என்பதையும் அதனை எவரும் மாற்றிவிடவில்லை என்பதையும் பிரதமர் சுட்டிக் காட்டினார்.

பிரதமர் தொடர்ந்து பேசியதாவது:-

'மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஓர் அரசு எந்தக் கட்சியைச் சார்ந்ததாக இருந்தாலும் பெரும்பான்மை ஆதரவைக் கொண்டிருந்தால் கூடுதலான அதிகாரம் நாடாளுமன்றத்திற்கே உண்டு.

அமெரிக்காவிலும், பிரான்ஸிலும் ஜனாதிபதியும் பிரதமரும் ஒன்றாகவே இருந்து செயற்படுகின்றனர். ஆனால், இங்கு அப்படி இல்லை.

இதனால், அரசமைப்பு முறையில்

(14ஆம் பக்கம் பார்க்க)

இந்திய அக்கறையை புறக்கணிக்கக்கூடாது!

அரசுக்கு எதிரணி எச்சரிக்கை

இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண புலிகளுடன் பேச்சுநடத்தும் ஐக்கிய தேசிய முன்னணி அரசு, அண்டை நாடான இந்தியாவின் அக்கறையையும் கருத்தில் கொண்டே நடந்து கொள்ள வேண்டும். இப்படி ஜனாதிபதியின் தலையையிலான எதிரணி எச்சரிக்கை விடுத்திருக்கிறது.

இந்தியா தன்னுடைய நலன்களைக் காப்பாற்றிக் கொள்வதற்கு இலங்கையின் எதிர்காலத்தில் கவனம் செலுத்தவேண்டியுள்ளது. அதற்கு நாம் மதிப்பளித்து அந்த விடயத்தில மிகக் கூடுதலான கவனம் செலுத்த வேண்டும் என்றார் முன்னாள் வெளிநாட்டு அமைச்சரும் ஜனாதிபதியின் அரசியல் ஆலோசகருமாகிய லக்ஷ்மன கதிர்காமர்.

பிரச்சினையை சமாதானமாகத் தீர்ப்பதற்குப் பல்வேறு நாடுகளும் உதவ முன்வருவது வரவேற்கத் தக்கது. ஆயினும், அந்த நாடுகளாலோ அரசுகளாலோ அல்லது புலிகளாலோ பிரச்சினையைத் தீர்க்கமுடியாது. நாட்டுமக்கள் அனைவரும் ஒருமையாக ஈடுபட்டுத்தான் பிரச்சினையைத் தீர்க்கவேண்டும் என்றும் கதிர்காமர் சொன்னார். (ஒ)

உறவினர் ஒருவரைக் கண்டவுடன்

வீதிக்கு குறுக்கே ஓடிய சிறுவனை பந்தாடிக் கொன்றது லொறி!

ஆனைக்கோட்டையில் நேற்று அவலச் சம்பவம்

யாழ்ப்பாணம்நவ.16

வீதியின் மறுபக்கத்தில் உறவினர் ஒருவரைக் கண்டவுடன் வீதியைக் குறுக்கே ஓடிக் கடக்க முயன்ற எட்டு வயதுச் சிறுவனை வேகமாக வந்த லொறி ஒன்று மோதிக்கொன்றது.

இந்த அவலச் சம்பவம் நேற்று மாலை ஆனைக்கோட்டைப் பகுதியில இடம்பெற்றிருக்கிறது.

மோட்டர் சைக்கிளில் வந்த தனது உறவினர் ஒருவர் வீதியின் மறுபக்கத்தில் நிற்பதைக்கண்ட இச்சிறுவன் அவரிடம் செல்வதற்காக அதிவேக வீதியை ஓடிக் கடக்க முற்பட்ட வேளை லொறியினால் மோதுண்டான என்று கூறப்படுகிறது.

ஆனைக்கோட்டை, பொன்னையா லேனில் உறவினர் ஒருவரோடு தங்கி கல்வி கற்றுவந்த வைகுந்தநாதன் அர்ஜன் என்ற சிறுவனே உயிரிழந்தான். சிறுவனின் பெற்றோர் கோண்டாவில் மேற்கில் வசிக்கின்றனர்.

உயிரிழந்த சிறுவனின் சடலம் யாழ்ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டது.

இந்த அவல மரணச் சம்பவம் அப்பிரதேசத்து மக்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சியையும் வேதனையையும் ஏற்படுத்தியிருக்கிறது.

குடாநாட்டில் வீதி விபத்துக்களில உயிரிழப்புக்கள் அதிகரித்து வருகின்றன. வீதிகளில் நடமாடும் சிறுவர்களிடயத்தில் சாரதிகளும் பெற்றோர்களும் மிகுந்த அவதானமாக நடந்து கொள்ள வேண்டும் என்று பொலீஸ் வட்டாரங்கள் அறிவுறுத்திபுள்ளன.

(ஐ-4)

அமைச்சர்கள் நியமன விவகாரம்: இழுபறி நிலை தொடர்கிறது

கொழும்பு,நவ.16

ஏழு புதிய அமைச்சர்களையும் ஒரு பிரதியமைச்சரையும் நியமிக்கும் விடயத்தில் பிரதமருக்கும் ஜனாதிபதிக்கும் இடையே தொடர்ந்து கருத்து மோதல் நீடித்து வருகிறது.

இந்த நியமனங்களை விரைவில் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு பிரதமர் ரணில், ஜனாதிபதியைக் கோரி வருகின்ற போதிலும் ஜனாதிபதி சந்திரிகாவோ இந்த நியமனங்களால் அரச பணம் வீண் விரயமாகும் எனக் கூறி நியமனங்களை வழங்காதிருந்து வருகிறார்.

இந்த விவகாரத்தில் ஜனாதிபதியும் பிரதமரும் பரஸ்பரம் கடிதங்களைப் பரிமாறி வருகின்றனர்.

(ஒ)

புலிகள் தனிநாடு அமைக்க சாதகமான திசையில் பேச்சு!

ஜனாதிபதியின் கட்சி சார்பில் கதிர்காமர் கண்டனம்

கொழும்பு,நவ16

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே நடைபெற்றுவரும் சமாதானப் பேச்சுக்களில் விடுதலைப் புலிகளுக்கே கூடுதல் நன்மை கிடைக்கிறது என்று முன்னாள் வெளிவிவகார அமைச்சரான லக்ஷ்மன் கதிர்காமர் கூறுகிறார்.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று முற்பகல் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இதுவரை நடைபெற்ற சமாதானப் பேச்சுக்களில் கூடுதலான லாபங்கள் புலிகள் இயக்கத்துக்கு கிடைத்துள்ளன என்றும் -

நோர்வே அரசு நடுநிலையாகச் செயற்படவில்லை என்றும் -

கதிர்காமர் கூறினார்.

லக்ஷ்மன் கதிர்காமர் அங்கு மேலும் கூறியதாவது:-

ஐ.தே.முன்னணி அரசும் வேறு சில அரசுகளும் குறிப்பாக நேர்வே அரசும் விடுதலைப் புலிகளுடனான பேச்சுக்கள் சரியான திசையில் செல்கின்றன எனக் கூறுகின்றன. ஐ.தே.முன்னணியைப் பொறுத்தவரை புலிகளின் திசையில் மட்டுமே பேச்சுக்கள் செல்கின்றன

தனது ஆயுதப் படைகளை பெருக்குதல், கட்டாய வரிகள் மூலம் பணம் பறித்தல், ஆள்களைத் திரட்டுதல் போன்றவற்றில் புலிகள் சமீப நாள்களில் ஈடுபட்டிருக்கின்றன. வடக்கு - கிழக்கில் தனது அதிகாரத்தை புலிகள் இயக்கம் பலப்படுத்துகிறது என்பதையே இவை காட்டுகின்றன.

(14ஆம் பக்கம் பார்க்க)

கொழும்புக்கு அனுப்பிய சிசுவின் சடலம் பூனையின் சடலமாக மாறிய விந்தை!

கொழும்பு,நவ.16

கொழும்பு சட்ட வைத்திய அதிகாரி அலுவலகத்தில் பிரேத பரிசோதனை நடத்துமாறு மல்லாகம் நீதிவான் உத்தரவின் பேரில் பச்சிளம் சிசு ஒன்றின் சடலம் 'சீல்' வைக்கப்பட்ட பெட்டியில் கொழும்புக்கு அனுப்பப்பட்டது.

கொழும்பில் 'சீல்' வைக்கப்பட்ட அந்தப் பெட்டியைத் திறந்து பார்த்தபொழுது உள்ளே பூனை ஒன்றின் சடலமே இருந்தது என்று தெரிவிக்கப்படுகிறது.

பிரேத பரிசோதனை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு கோரி சிசுவின் சடலம் கடந்த 11ஆம் திகதி அனுப்பப்பட்டிருந்தது.

அதன்படி பிரேத பரிசோதனை நடத்த உதவி சட்டவைத்திய அதிகாரி டி.ஜ.எல்ரத்நாயக்க முன்னிலையில் சடலம் அடங்கிய பெட்டி சமர்ப்பிக்கப்பட்டது. பெட்டியைத் திறந்து பார்த்தபோது உள்ளே பூனையின் சடலமே இருந்தது. (ஒ)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

'ரி.ரி.என். அறிவுச் செல்வம் 2002' போட்டி

யாழ்.இந்து மகளிர் மாணவிக்கு முதல்பரிசாக ஒரு லட்சம் ரூபா

யாழ்ப்பாணம்.நவ.16

தமிழ்த் தொலைக்காட்சி இணையம் (ரி.ரி.என்)க்காக சுவிற்சர்லாந்து 'சிகரம்' நிறுவன ஆதரவில் 'டிஜிற்றல் மீடியா' இணைய நிறுவனம் யாழ்ப்பாணத்தில் நடத்திய 'அறிவுச்செல்வம் - 2002' போட்டியில் யாழ்.இந்து மகளிர் கல்லூரி மாணவி ராதிகா முருகையா முதலாம் பரிசான ரூபா ஒரு லட்சத்தை வென்றார்.

யாழ்.பாடசாலைகளைச் சேர்ந்த ஜி.சீ.ஈ.உயர்தரப் பரீட்சைக்கு 2004 ஆம் ஆண்டு தோற்றவுள்ள மாணவர்களிடையே நடத்திய இப்போட்டியின் இறுதிச் சுற்று நேற்று யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றது. இப்போட்டியில் 208 மாணவர்கள் பங்கேற்றிருந்தனர். இதிலேயே யாழ்.இந்து மகளிர் மாணவி முதற் பரிசைத் தட்டிச் சென்றார்.

இரண்டாம் பரிசான ரூபா 50 ஆயிரம் யாழ்.மத்திய கல்லூரி மாணவன் நவரட்னம் பிரதீபனுக்கும் - மூன்றாம் பரிசான 25 ஆயிரம் ரூபா யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி மாணவி லாவண்யா சண்முகதாஸுக்கும் வழங்கப்பட்டன.

பரிசுகளை வென்ற மேற்படி மாணவ, மாணவிகளின் பெயரில் இலங்கை வர்த்தக வங்கியின் யாழ். கிளையில் சேமிப்புக் கணக்குகள் ஆரம்பிக்கப்பட்டு அவர்களது பரிசுத் தொகைகள் அவரவரின் கணக்குகளில வைப்பிலிடப்படும் என்று நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை, மாவட்ட மட்டத்தில் நடத்தப்பட்ட 'பாடும் சுரங்கள்' இசைப் போட்டியில் சண்டிலிப்பாய் கல்வளைப்பிள்ளையார் கோவிலடியைச் சேர்ந்த மா.இசையமுதன் முதலாம் இடத்திற்கு தெரிவானார். எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதி சுவிற்சர்லாந்தின் பேர்ன் நகரில் இடம்பெறவுள்ள வருடாந்த நிகழ்வான மிலேனியம் பாடகர் விருதுக்கான போட்டியில் கலந்துகொள்ளும் வாய்ப்பு மா.இசையமுதனுக்கு வழங்கப்படும் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (ஒ)

அறிவுச் செல்வம் போட்டியில் (இடமிருந்து வலமாக) முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்றவர்களைப் படத்தில் காணலாம்.

காஞ்சிரங்குடா மரணங்கள்:

துப்பாக்கிச் சூட்டினால் ஏற்பட்டவை என்று மரண விசாரணையில் தீர்ப்பு!

காரைதீவு.நவ.16

காஞ்சிரங்குடா சம்பவத்தில் மரணித்த ஏழு பேரின் மரணங்கள் துப்பாக்கிச் சூட்டின் விளைவாக ஏற்பட்ட மரணங்களாகும். இம்மரணங்கள சம்பந்தமாக எந்தவிதக் குற்றச் செயல்களும் நடைபெறவில்லை.

- இவ்வாறு காஞ்சிரங்குடா சம்பவம் தொடர்பான மரணவிசாரணைத் தீர்ப்பில் அக்கரைப்பற்று மஜிஸ்திரேட் எம்.வை.எம்.இர்ஸதீன் குறிப்பிட்டார்.

இறுதிக்கட்ட விசாரணைகள் கடந்த புதன்று அக்கரைப்பற்று மஜிஸ்திரேட் நீதிமன்றில் நடைபெற்றன.

காஞ்சிரங்குடாச் சம்பவத்தில் படுகொலை செய்யப்பட்ட ஏழு பேரின் சார்பாக அவர்களது தாய், தந்தை, மனைவி ஆகியோரிடம் வாக்கு மூலங்கள் முதலில் பெறப்பட்டன.

மனித உரிமைகள் நிலையத்திற்கும் அபிவிருத்திக்குமான பிரபல சட்டத்தரணி கே.எஸ்.இரத்தினவேல் கொழும்பிலிருந்து சென்று பாதிக்கப்பட்டவர் சார்பில் ஆஜராகியிருந்தார். மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கல்முனைப் பிராந்திய இணைப்பாளர் இரா.மனோகரனும் மன்றில் சமுகமளித்திருந்தார்.

சம்பவத்தின்போது காயப்பட்ட ஒருவரின் வாக்குமூலமும் பெறப்பட்டது. மூன்றாவதும் இறுதியுமான இவ்விசாரணையின்போது நீதிவான் இர்ஸதீன் தீர்ப்பு வழங்கினார்.

அதிரடிப்படையினர் வேண்டுமென்று செய்த குற்றச்செயலை நியாயப்படுத்துவதாக இதுவரை வெளிவந்த இரு தீர்ப்புகளும் அமைந்ததாக சட்டத்தரணி இரத்தினவேல் தனது அதிருப்தியை வெளியிட்டார். (எ)

யாழ்.பல்கலைக்கழகத்தில் நேற்று இடம்பெற்ற தமிழிலக்கிய கருத்தரங்கின் போது எடுக்கப்பட்ட படங்கள்.

உயர் கல்வி நிலையங்களில்

ஈழத்து தமிழ் இலக்கியங்களுக்கு உரிய இடம் கொடுக்கப்படவில்லை

குற்றஞ்சுமத்துகிறார் பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை

இலங்கையிலுள்ள உயர்கல்வி நிறுவனங்களிலும் நூலகங்களிலும் ஈழத் தமிழ் இலக்கியங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை. இந்த நிலைமை மாறவேண்டும் - மாற்றி அமைக்கப்படவேண்டும்.

- இவ்வாறு யாழ்பல்கலைக்கழகத துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை தெரிவித்தார்.

இலங்கை கலாசாரத் திணைக்களத்தின் ஏற்பாட்டில், நேற்று யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் ஆரம்பமான 'ஈழத்து நவீன தமிழ இலக்கிய விழா' பற்றிய கலந்துரையாடலின் முதல்நாள் நிகழ்வில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

துணைவேந்தர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

ஈழத்து தமிழ் இலக்கியங்கள் கடந்த 50 வருடங்களாக மிகவும் நல்ல முறையில் வளர்ச்சி அடைந்து வருவதுடன் வளர்ச்சிப் பாதையை நோக்கியும் நகர்ந்து செல்கின்றன.

இலங்கையில் உள்ள பல்கலைக் கழகங்களில் மட்டுமல்லாது பாடசாலைகளிலும் உயர் வகுப்பு மாணவர்களுக்கும் ஈழத்தமிழ் இலக்கியம் ஒரு பாடவிதானமாக இருந்து வருகின்றது.

ஆனால், அவை உரியமுறையில் போதிக்கப்படுவதில்லை. தற்போது பல்கலைக்கழக தமிழ்த்துறை விரிவுரைகளின் போது தமிழ் இலக்கிய விரிவுரைகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது. ஆனால், ஈழத்தமிழ் இலக்கியங்களுக்கு முதன்மை கொடுக்கப்படுவதில்லை.

இதனால், அத்துறையில் கல்வி கற்போர் அதனைப்பற்றி முழுமையாக விளங்கிக் கொள்ளமுடியாத சூழ்நிலை இருந்துவருகின்றது.

இதனை நிவர்த்தி செய்யும் வகையில் இன்றைய கருத்தரங்கு அமையும் என நான் எதிர்பார்க்கின்றேன். நவீன இலக்கியம், நாவல், சிறுகதை மற்றும் பண்டைத்தமிழ் இலக்கியங்கள் என பலவேறு வகையாக வளம்படுத்தி விரிவுபடுத்துவதற்கு நாம் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றோம்.

இதேபோல, பேராதனைப் பல்கலைக்கழகத்திலும் சப்பிரகமுவா, கிழக்கிலங்கை, தென்கிழக்குப் பல்கலைக கழகங்களிலும் உள்ள தமிழ்த்துறை ஈழத்தமிழ் இலக்கியங்களுக்கு முன்னுரிமை வழங்கவேண்டும்.

கொழும்புப் பல்கலைக்கழகத்தில் இருந்த தமிழ்த்துறை அங்கு ஏற்பட்ட வெளிவாரிப்பிரிவு மாற்றத்தினால் இல்லாது போய்விட்டது. அதேபோல, ஜெயவர்த்தனபுர பல்கலைக் கழகத்தில் பேராசிரியர் சிவத்தம்பி பணியாற்றிய போது தமிழ் இலக்கியத்துறை சிறப்பாகச் செயற்பட்டு வந்தது. அவர் அங்கிருந்து வெளியேறியதும் அங்கும் அது மலையேறிவிட்டது.

எனவே, இவ்விரு பல்கலைக்கழகங்கள் உட்பட அனைத்துப் பல்கலைக கழகங்களிலும் தமிழ்த்துறையை ஆரம்பித்து ஈழத்தமிழ் இலக்கியங்களைப் போதிப்பதற்கு தமிழ்ப்புலமை மிக்கவர்களும், பேராசிரியர்களும் நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.

கடந்த இரண்டாயிரத்து 500 ஆண்டு ஈழத்தமிழர் பண்பாட்டு வாழ்வியல் விழுமியங்களை தேடிக்கண்டு பிடித்து அவை தொடர்பான உண்மையான ஈழத்தமிழ் இலக்கியம் ஒன்றை படைப்பதற்கு அனைவரும் முன்வர வேண்டும் என்றார்.

தமிழ்இலக்கியக் குழுத்தலைவர் பேராசிரியர் க.அருணாசலம் தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் பேராசிரியர் தி.தில்லைநாதன், பேராசிரியர் அ.சண்முகதாஸ், சப்பிரமுவா பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி கந்நாகேஸ்வரன் ஆகியோரும் இக்கலந்துரையாடலில் உரையாற்றினர். (எ-5)

அனுருத்த, இரு புதல்வர்கள் உட்பட 15 எதிரிகளும் பிணையில் விடுவிப்பு

கொழும்பு.நவ.16

உடத்தலவின்னவில் பத்து முஸ்லிம் இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பான வழக்கின் 15 எதிரிகளும் நேற்று பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர். கொழும்பு மேல்நீதிமன்றம் அவர்களை தலா ஐந்து லட்சம் ரூபா பிணையில் செல்ல அனுமதித்தது.

முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த, அவரது புதல்வர்களான லொஹான், சானுக்க உட்பட 15 எதிரிகள் நேற்று கொழும்பு மேல்நீதிமன்றத்தில் ஆஜராகினர்.

மூன்று நீதிபதிகள் அடங்கிய நீதிமன்றம், எதிரிகள் அனைவரதும் கைவிரல் அடையாளங்களைப் பதிவு செய்யுமாறு பொலீஸாருக்கு உத்தரவிட்டது.

அனுருத்த ரத்வத்த மீது 31 குற்றச்சாட்டுக்களும் லொஹான், சானுக்க ஆகியோர் மீது 35 குற்றச்சாட்டுக்களும் சுமத்தப்பட்டிருக்கின்றன.

மேல் விசாரணைகள் எதிர்வரும் ஜனவரி 20 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டன. (ஒ)

கிரிக்கெட் பயிற்சி சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு இன்று நடக்கிறது

யாழ்ப்பாணம்.நவ.16

ஸ்ரீலங்கா கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் செயற்பாட்டுப் பணிப்பாளர் பந்துலவர்ணபுர தலைமையிலான குழுவினர் யாழ்ப்பாணத்தில் நடத்திய பயிற்சி வகுப்பில் கலந்து கொண்டு சித்தியடைந்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு இன்று காலை 9.30 மணிக்கு சிங்கர் நிறுவனத்தின் யாழ்கிளை அலுவலகத்தில இடம்பெறவுள்ளது.

இந்தப் பயிற்சி வகுப்பில் சித்தியடைந்தவர்களின் விவரம் வருமாறு:-

ஏ.எஸ்.நிசாந்தன், எஸ்.லட்சுமிகாந்தன், ஏ.எஸ்.முகுந்தன், எம்.அன்பழகன், விக்குமணன், எஸ்.தயாளன், எம்.ஆர்.மோகனதாஸ், ஈ.சுரேஷ்மோகன், என்.சிவராசா, எஸ்.கோகுலன், எஸ்.சகாயராஜா, கே.செல்வராஜா ஆகியோரே தேர்ச்சி பெற்றவர்களாவர்.

சிங்கர் நிறுவனம் ஸ்ரீலங்கா கிரிக்கெட் சபையின் வேண்டுகோளுக்கிணங்க இந்த நிகழ்ச்சிக்கும் பயிற்சி முழுவதற்கும் அனுசரணை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ-3)

கலந்துரையாடல்

சண்டிலிப்பாய்.நவ.16

கிராம அலுவலர் பிரிவு மட்டத்தில் பிரதேச செயலர்களால் அமைக்கப்படவிருக்கும் புனரமைப்பு அபிவிருத்தி திட்டக் குழுக்களில் சன சமூக நிலையங்களின் பங்களிப்பை பெற்றுக்கொள்வதற்கான கலந்துரையாடல் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணிக்கு பண்டத்தரிப்பு பொது நூலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலகப்பிரிவில் உள்ள சன சமூக நிலையங்களின் தலைவர், செயலாளர்களை இக்கலந்துரையாடலில் தவறாது கலந்துகொள்ளுமாறு சன சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் வே.கந்தசாமி கேட்டுள்ளார்.

தமது நிலையப் பகுதியின் குடிதண்ணீர், மலசலகூடம், வீதிகள் ஆகியன தொடர்பான தேவைகளை இக்கலந்துரையாடல் கூட்டத்தில் சமர்ப்பிக்குமாறும் சனசமூக நிலையங்களை அவர் கேட்டுள்ளார். இது தொடர்பான படிவங்கள் சனசமூக நிலையங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. (ம-135)

'விடுதலையின் ஒலி' நாடகவிழா

யாழ்ப்பாணம்.நவ..16

யாக்கோபு ஆலய வாலிபர்கள் வழங்கும் 'விடுதலையின் ஒலி' நாடக விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு சுண்டுக்குளி மகளிர் கல்லூரிமண்டபத்தில் வாலிபர் சங்கத் தலைவர் ரி.இராஜ்குமார் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இதில் வண.பிதா ஏ.ஜீவாபோல் அருளுரை வழங்குவார். இதனைத் தொடர்ந்து ஆலய வாலிபர்களின் நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

இறுதியாக கலாபூஷணம் நவாலியூர் நா.செல்லத்துரையின் நெறியாளகையில் உருவாகிய 'எங்கள் கிராமத்தின் இந்தக் கோலங்கள்' என்ற சமூக நாடகமும் சிறப்பு நிகழ்ச்சியாக நடைபெறவுள்ளது. (ம-5)

சமய சந்நிதிகளில்

வலிகாமம் தெற்கு.நவ.16

ஸ்ரீ சக்ர பிரதிஷ்டா தினத்தை முன்னிட்டு இணுவில் ஸ்ரீ கண்ணகா பரமேஸ்வரி அம்மன் ஆலய காயத்ரி பீடத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை முதல் மூன்று தினங்களுக்கு ஸ்ரீ சக்கரத்துக்கு விசேட அபிஷேக ஆராதனைகள் நடைபெறவுள்ளன.

மேற்படி நாள்களில் ஸ்ரீ சக்கர பூஜை நடைபெற்று, 108, 300, 1008 என்ற கணக்கில் அர்ச்சனைகள் இடம்பெறும்.

19 ஆம் திகதி காலை ஒவ்வொரு ஆவரண தேவர்களுக்கும் கும்பங்கள் ஸ்தாபிக்கப்பட்டு 108 கலச அபிசேகமும் நடைபெறும்.

இக்கிரியைகள் யாவும் தினமும் காலை 9 மணியளவில் இருந்து நண்பகல் 12 மணிவரை நடைபெறும். (ஐ-152)

* * *

யாழ்ப்பாணம்.நவ.16

அகில இலங்கை சபரிமலை ஸ்ரீ சாஸ்தாபீடம் நடத்தும் மகர ஜோதிப் பெருவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 5.30 மணிமுதல் கொழும்பு கொச்சிக்கடை தம்பையா முதலியார் சத்திரம், ஸ்ரீசித்திவிநாயகர் ஆலயத்தில் நடைபெறவுள்ளது. (ஒ-4)

* * *

வலிகாமம் தெற்கு.நவ.16

கோண்டாவில் கிழக்கு ஐயப்பன் ஆலயத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை மண்டல மகர ஜோதிப் பெருவிழா நடைபெறவுள்ளது.

இன்று முதல் ஜனவரி 14 ஆம் திகதி வரையான விரதகாலங்களில் ஐயப்ப சுவாமிக்கு விசேட பூஜைகள், 18 படி பூஜைகள், விசேடநாம பஜனை என்பன நடைபெறும். (ஒ-152)

சீனத் தலைமைத்துவம் இளையோர் கைகளில்!

பீஜிங்,நவ.16

சீனாவின் ஆட்சி அதிகாரம் புதியவர்கள் கைகளுக்கு மாறியுள்ளது. நாட்டை ஆண்டுவரும் கம்யூனிஸ்ட் கட்சியின் துணைத் தலைவராக இருந்த ஹு ஜின்டாவ் (வயது 59) புதிய தலைவராகப் பொறுப்பேற்றுக்கொண்டுள்ளார்.

கமயூனிஸக் கட்சியின் மாநாடு வியாழனன்று முடிந்தது. 356 பேரைக் கொண்ட மத்தியகுழுவுக் கான தேர்தல்களும் 9பேரைக் கொண்ட கட்சியின் அதியுயர்பீடத்துக்கான தேர்தல்களும் நடத்தப்பட்டன.

கட்சியின் அதியுயர்பீடத் தலைவராக ஹு ஜின்டாவ் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். அவருடன் மேலும் 8பேர் இந்த அதியுயர்பீட நிர்வாகிகளாகத் தெரிவாகியுள்ளனர். இந்த அதியுயர் பீடமே நாட்டை அடுத்துவரும் 5 ஆண்டுகளுக்கு நிர்வகிக்கும்.

இம்முறை நிர்வாகக் குழுக்களில் புதியவர்களுக்கு அதிக இடங்கள் வழங்கப்பட்டுள்ளன. கடந்த பல ஆண்டுகளில் சீன அரசியலில் ஏற்படும் பெரும் மாற்றம் இதுவாகும். தற்போதைய அதிபர் ஜியாங் ஷெமின் (வயது76), பிரதமர் ஜு ரோங்ஜி (வயது74), நாடாளுமன்றத் தலைவர் லி பெங் (வயது 74), லீ ரூய்ஹான் (வயது 68), வீ ஜியாங்ஜிங் (வயது 71), லி லாங்குயிங் (வயது 70) ஆகிய மூத்த தலைவர்கள் அதியுயர் பீடத்தில் இருந்து விலகியுள்ளனர். அவர்களது இடத்துக்கு புதியவர்கள் தெரிவாகியுள்ளனர். அத்துடன் மத்திய குழுவுக்குத் தெரிவாகியுள்ள 356 பேரில் 180 பேர் புதியவர்கள்.

நாட்டின் நிர்வாகத்தை இளைஞர்களிடம் ஒப்படைப்பது என்று மூத்த தலைவர்கள் எடுத்த தீர்மானத்தின் விளைவே இந்த சடுதியான அரசியல் மாற்றம் என்று கூறப்படுகின்றது.

பதவியில் இருந்து விலகிக் கொண்டபோதும் அதிபர் ஜியாங் ஷெமின் கட்சியின் அதியுயர் பீடத்தின் மீது குறிப்பிடத்தக்களவு செல்வாக்கைத் தக்கவைத்துள்ளார். அவரது ஆதரவாளர்கள் ஐவர் கட்சியின் அதியுயர் பீடத்துக்கு தெரிவாகியுள்ளனர்.

அத்துடன் நாட்டின் பலம்வாய்ந்த இராணுவ ஆணைக்குழுவின் தலைவராகவும் அவர் மீண்டும் தெரிவாகியுள்ளார். இந்த ஆணைக்குழுவே ஆயுதப் படைகள் முழுவதையும் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும்.

புதிதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள கட்சியின் அதியுயர்பீடத்தைச் சேர்ந்த அங்கத்தவர்கள் 9 பேரும்

ஹு ஜின்டாவ்

நேற்று தலைநகர் பீஜிங்கில் உள்ள புகழ்பெற்ற மண்டபத்தில் செய்தியாளர்களைச் சந்தித்து பேசினர். "நாட்டின் புதியதோர் அத்தியாயம் ஆரம்பமாகும் ஒரு தருணத்தில் நாம் இங்கு நின்றுகொண்டிருக்கின்றோம்" - என்றார் புதிய தலைவர் ஹு ஜின்டாவ்.

முன்னதாக, வியாழனன்று கட்சியின் மாநாடு நிறைவடைந்தபோது நிகழ்த்திய உரையில் கட்சியின் ஆட்சி அதிகாரம் பழையவர்களின் கைகளில் இருந்து சுமுகமாகப் புதியவர்களின் கைகளுக்கு மாறுவதற்கு ஹு ஜின்டாவ் அதிபர் ஜியாங் ஷெமினுக்கு நன்றி தெரிவித்துக்கொண்டார்.

ஆனால், கட்சி மற்றும் நாட்டின் ஆட்சி அதிகாரம் மாற்றப்பட்ட போதும் புதிய நிர்வாகத்திலும் ஜியாங் ஷெமினின் செல்வாக்கு அதிகம் இருக்கும் என்று சொல்லப்படுகின்றது. சீனாவின் அரசியலில் ஷெமினைத் தாண்டி புதியவர்களால் பெரியளவில் மாற்றங்களைக் கொண்டுவரமுடியப்போவதில்லை என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது. (ம)

அதியுயர் பீட உறுப்பினர்கள் ஒன்பது பேரும் பீஜிங் மண்டபத்தில் செய்தியாளர்களுக்கு 'போஸ்' கொடுத்தபோது....

2 சி.ஐ.ஏ. உளவாளிகளைக் கொன்ற பாகிஸ்தானியருக்கு மரண தண்டனை!

விஷஊசி செலுத்தி நிறைவேற்றப்பட்டது

வேர்ஜினியா,நவ.16

அமெரிக்க உளவு அமைப்பான சி.ஐ.ஏயின் இரு ஊழியர்களைச் சுட்டுக்கொன்ற பாகிஸ்தான் நபர் ஒருவருக்கு நேற்றுமுன்தினம் இரவு அமெரிக்காவில் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

அமில் கான் கன்ஸி (வயது 38) என்ற அந்த நபருக்கே மரணதண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது. வேர்ஜினியா மாகாணத்தில் உள்ள ஓர் இடத்தில் வைத்து விஷ ஊசி போடப்பட்டு அவரது மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது.

இவர் 1993ஆம் ஆண்டு சி.ஐ.ஏ ஊழியர்கள் இருவரை வேர்ஜினியாவில் சுட்டுக்கொன்றார். அதன் பின்னர் ஈரான் வழியாக அவர் பாகிஸ்தானுக்குத் திரும்பினார். 4 ஆண்டுகளுக்குப் பின்னர் பாகிஸ்தானின் மத்திய பகுதியில் உள்ள ஹோட்டல் ஒன்றில் வைத்து இவர் சி.ஐ.ஏ அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டார்.

விஷ ஊசி செலுத்தப்பட்டு மரண தண்டனை நிறைவேற்றப்பட்ட பாகிஸ்தானியர்.

பின்னர் அவர் விசாரணைக்காக அமெரிக்காவுக்கு அழைத்துச் செல்லப்பட்டார். வேர்ஜினியாவில் விசாரணைகள் நடந்தன. குற்றத்தை உறுதி செய்த நீதிபதிகள் அவருக்கு மரண தண்டனை விதித்தனர்.

அவரது தண்டனையைக் குறைக்கவேண்டும் என்று அமெரிக்காவில் உள்ள இஸ்லாமிய அமைப்புக்களும் பாகிஸ்தானில் உள்ள அமைப்புக்களும் கோரிக்கை விடுத்து வந்தன. இதற்காக பாகிஸ்தானில் எதிர்ப்புப் போராட்டங்கள் பலவும் நடத்தப்பட்டன. ஆனால், அமெரிக்கா அவற்றை எல்லாம் உதாசீனம் செய்துவிட்டு மரண தண்டனையை நிறைவேற்றியது.

உலகில் இன்றும் மரண தண்டனையை நிறைவேற்றும் ஒருசில நாடுகளில் அமெரிக்காவும் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

ஈராக் செல்வதற்காக சைபிரஸில் கூடும் ஐ.நா. கண்காணிப்பாளர்கள்

லர்னாகா,நவ.16

ஆயுதக் கண்காணிப்பாளர்களை நாட்டுக்குள் அனுமதிப்பதற்கு ஈராக் அனுமதியளித்ததைத் தொடர்ந்து பக்தாத் திரும்புவதற்கு ஆயத்தமாக கண்காணிப்பாளர்கள் சைபிரஸ் நாட்டில் ஒன்றுசேர்ந்து வருகின்றனர்.

கண்காணிப்புக் குழுத் தலைவர் ஹன்ஸ் பிலிக்ஸ் செய்தியாளர்களிடம் உரையாடுகிறார்.

ஹன்ஸ் பிலிக்ஸ் தலைமையிலான கண்காணிப்புக் குழுவினர் எதிர்வரும் திங்கட்கிழமை பக்தாத் திரும்பவுள்ளனர். அவர்களை ஏற்றிச் செல்வதற்காக லர்னாகா நகர விமான நிலையத்தில் ஐ.நா. எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட சி-130 போக்குவரத்து விமானம் தயாராகவுள்ளது.

பக்தாத்தில் தமது பணிகளை உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்க இருவாரங்களுக்கு முன்னரே அதற்கான பூர்வாங்க ஏற்பாடுகளைக் கவனிப்பதற்காக அவர்கள் அங்கு செல்லவுள்ளனர்.

ஈராக் தலைநகரில் 1998 இல் மூடப்பட்ட ஐ.நா.ஆயுதக் கண்காணிப்பாளர்கள் அலுவலகத்தை மீண்டும் திறக்க வேண்டும்; அங்கு கணனி உபகரண வசதிகள் மற்றும் தொலைத்தொடர்பு வசதிகளை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் போன்ற பணிகள் அவர்கள் முன்னுள்ளன.

ஈராக்கில் ஆயுதசோதனைகளை நடத்துவதற்காக ஹெலிகளைப் பயன்படுத்துவதற்கு கண்காணிப்பாளர்கள் ஏற்கனவே முடிவு செய்துள்ளனர். (ம)

நேபாளத்தில் 30 படையினர் பலி!

நேபாளத் தலைநகர் காத்மண்டுவுக்கு அருகே மாவோயிஸ்ட் கிளர்ச்சியாளர்களுக்கும் அரச படையினருக்கும் இடையில் ஏற்பட்ட புதிய மோதல்களில் குறைந்தது 30 படையினர் கொல்லப்பட்டுள்ளனர். இந்தச் சண்டையில் 50 தீவிரவாதிகளும் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கோர்கா மாவட்டத்தில் உள்ள பொலீஸ் நிலையம் ஒன்றை இரவு நேரத்தில் கிளர்ச்சியாளர்கள் தாக்கியதை அடுத்து இந்தப் புதிய சண்டை ஏற்பட்டது. பொலீஸ் நிலையம் மீதான தாக்குதலில் குறைந்தது 22 பொலீஸார் கொல்லப்பட்டனர்.

இந்தத் தாக்குதலை அடுத்து இந்தப் பகுதியில் உடனடியாக இராணுவ நடவடிக்கை ஒன்று ஆரம்பிக்கப்பட்டது.

மலைப்பகுதியான கலங்கா நகரில் நடைபெற்ற மற்றுமொரு மோதலில் 13படையினர் கொல்லப்பட்டனர். அந்தச் சண்டையில் 50இற்கும் மேற்பட்ட கிளர்ச்சியாளர்களைக் கொன்றதாக படை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அதேசமயத்தில், வடமேற்கு மாவட்டமான ஜம்லாவில் நூற்றுக்கணக்கான கிளர்ச்சியாளர்கள் பொலீஸ் நிலைகளையும் அரசாங்க கட்டடங்களையும் தாக்கினர். ஆனால், உயிரிழப்புக்கள் ஏதும் ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

ஆயுதக் கிளர்ச்சிக்கு முடிவுகட்டுவதற்கான அழைப்பை துணைப் பிரதமர் பத்திரி பிரசாத் மண்டல் விடுத்த சிலநாள்களின் பின்னர் இந்தப் புதிய தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. அந்த அழைப்பில் மாவோயிஸ்ட் கிளர்ச்சியாளர்களை சமாதானப் பேச்சுக்கு வருமாறு துணைப் பிரதமர் அழைத்திருந்தார். அதற்கு கிளர்ச்சியாளர்களும் சாதகமான பதிலைத் தெரிவித்திருந்தனர். "வன்முறைகள் மேலும் மேலும் தொடர்வதற்கு இடமளிக்கக்கூடாது" - என்று துணை அதிபர் தெரிவித்திருந்தார்.

மீண்டும் ஒஸாமா பின்லேடன் அச்சுறுத்தல்!

லண்டன்,நவ.16

அமெரிக்காவில் நடந்த செப்ரெம்பர் 11 தாக்குதலின் முக்கிய சூத்திரதாரியும் அல்கெய்டா தீவிரவாத அமைப்பின் தலைவருமான ஒஸாமா பின்லேடன் உயிருடன் இருக்கிறாரா இல்லையா என்பது தெளிவாகத் தெரியாத நிலையில் அவர் பற்றிய செய்திகள் அடிக்கடி வெளியாகி மேற்குலக நாடுகளை மிரட்டிவருகின்றன.

தற்போதும் அப்படியான ஒரு செய்தி வெளியாகியுள்ளது. பின்லேடன் உரையாற்றும் ஒளிநாடா ஒன்றை கட்டாரைத் தளமாகக் கொண்டு இயங்கும் அல்-ஜெஸீரா தொலைக்காட்சி ஒளிபரப்பியுள்ளது. ஆனால், அந்த ஒளிநாடா எப்படிப் பெறப்பட்டது என்று அந்த நிறுவனம் தெரிவிக்கவில்லை.

ஒளிபரப்பப்பட்ட ஒளிநாடாவில் பின்லேடன் மேற்கு நாடுகளை கடுமையாக விமர்சித்துள்ளார். அத்துடன் உலகெங்கும் நடத்தப்பட்ட தீவிரவாதத் தாக்குதல்களை நியாயப்படுத்தியும் கருத்து வெளியிட்டுள்ளார்.

இந்த ஒளிநாடாவில் பின்லேடன் தனது சகாக்களுடன் இணைந்து பேசுவதாகக் காட்சிகள் அமைந்திருக்கின்றன. ஆனால், ஒளிநாடாவில் இருந்து வெளிவரும் குரல் பின்லேடனுடையதைப் போன்று இருந்தாலும் அது அவருடையதுதானா என்பதை உறுதி செய்யமுடியவில்லை என்று அமெரிக்க அதிகாரிகள் கூறுகின்றனர். அதேசமயம் அந்தக் குரல் பின்லேடனுடையதுதான் என்று அரபுலகப் பத்திரிகைகள் பல தெரிவித்துள்ளன.

பின்லேடன் உரை

அந்த ஒளிநாடாவில் பின்லேடன் தெரிவித்துள்ளதாவது:-

ஈராக் மக்கள் மீது அமெரிக்கா குண்டுகளை வீசிவருகின்றது. அதன் நட்பு நாடான இஸ்ரேல் முதியவர்களையும் பெண்களையும் குழந்தைகளையும் அமெரிக்க விமானத்தைப் பயன்படுத்தி குண்டு வீசிக் கொன்று வருகின்றது.

பலஸ்தீனச் சகோதரர்கள் கடந்த ஒரு நூற்றாண்டாகப் படுகொலை செய்யப்பட்டும் சித்திரவதைசெய்யப்பட்டும் வருகின்றார்கள்.

ஆனால், தீவிரவாதத்துக்கு எதிரான போர் என்ற போர்வையில் அமெ

ரிக்கா முஸ்லிம்களுக்கு எதிராக உலகநாடுகளை அணிசேர்த்து வருகின்றது.

எதற்காக உலக நாடுகள் அமெரிக்காவுடன் அணிசேர வேண்டும்? வெள்ளை மாளிகையில் உள்ள கிரிமினல்களுடன் உலக நாடுகளின் அரசுகள் இணைந்து என்ன செய்யப் போகின்றன? அங்கு உள்ளவர்கள் கொலைகாரக் கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்பதை உலக நாடுகள் அறியவில்லையா?

அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் ரொனால்ட் ரம்ஸ்பீல்ட் ஒரு வியட்நாமியப் படுகொலைகாரர். 20 லட்சம் மக்களைக் கொன்று குவித்துள்ளார். அவருக்கு அவர் பதில் சொல்லியாகவேண்டும்.

எச்சரிக்கை

ஆப்கானிஸ்தானில் எங்களை அமெரிக்காவுடன் சேர்ந்து தாக்கினீர்களே என்ன நடந்தது? குறிப்பாக பிரிட்டன், அவுஸ்திரேலியா, பிரான்ஸ், இத்தாலி, ஜேர்மனி, கனடா ஆகிய நாடுகளைக் கேட்கின்றேன்.

அமெரிக்காவுடன் அணிசேராதீர்கள் என்று அவுஸ்திரேலியாவுக்குச் சொன்னோம். ஆனால், அவர்கள் கேட்கவில்லை. எனவே, பாலித் தீவில் குண்டு வீசப்பட்டது.

டுனிசியா, கராச்சி, மொஸ்கோ, பாலி, அம்மான் ஆகிய இடங்களில் உயிர்ப்பலிகள் இடம்பெற்றமை உங்களுக்கு அதிர்ச்சி அளிக்கின்றதா? அப்படியென்றால் பலஸ்தீனத்திலும், ஈராக்கிலும் தினமும் குழந்தைகளும் பெண்களும் பலியாவதை நினைத்துப் பாருங்கள்.

"எப்போது கொலை செய்வது என்பது எங்கள் பங்கு. எப்படிப் பாதுகாப்பது என்பது உங்கள் கவலை. நீங்கள் எங்களைக் கொலை செய்தால் உங்களை நாங்கள் கொலை செய்வோம். எங்கள் மீது குண்டுகள் வீசப்பட்டால் நாங்களும் உங்கள் மீது குண்டு வீசுவோம். எங்கள் மதத்திற்காகவும் எங்கள் குறிக்கோளில் வெற்றி பெறவும் புனித யுத்தம் தொடரவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்" - என்று பின்லேடன் அந்த ஒளிநாடாவில் தெரிவித்துள்ளார்.

இது உண்மையிலேயே பின்லேடனால் பதிவுசெய்யப்பட்ட ஒளிப்பதிவு நாடாவா? அதில் பேசுவது பின்லேடன்தானா? என்பன குறித்து அமெரிக்க புலனாய்வாளர்கள் ஆராய்ந்து வருகின்றனர். (ம)

இந்திய ஜோதிடர் யாழ்.விஜயம்

ஸ்ரீ சோடாநிகரை பகவதி அம்மன் அருள்பெற்று ஸ்ரீ வெட்டுடைய காளி அம்மன் வாக்குப்பெற்ற இந்திய பரம்பரை ஜோதிடர் யாழ்.வருகை தந்துள்ளார். கைரேகை, ஜாதகம், எண்கணிதம், மகப்பேறு, குடும்பப் பிரச்சினையா? கல்வி, வெளிநாடு செல்லத்தடையா? தொழிற்பிரச்சினையா? காதல் பிரச்சினையா? திருமணப் பிரச்சினையா? தீராத நோயா? எவ்வித பிரச்சினைகளுக்கும் தக்க பரிகாரம் மூலம் தீர்வு காணலாம்.

ஒருமுறை விஜயம் செய்து பாருங்கள்!

மணிசாமி

யாழ். உல்லாசப் பயணிகள் விடுதி

இல.54, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம் (வெலிங்டன் சந்தியருகில்).

பார்வையிடும் நேரம்: காலை 9மணிமுதல் மாலை 4மணிவரை (வியாழக்கிழமைகளில் விடுமுறை)

(10618)

ஓம்

நன்றி நவிலல்

மலர்வு 18 - 05 - 1917

உதிர்வு 17 - 10 - 2002

அமரர் திருமதி செல்லையா முதலியார்

அமரசிங்கம் இராசலட்சுமி (நேசம்)

எமது பாசமிகு அன்புத் தாயாரின் மறைவுச் செய்தியறிந்து எமக்கு ஆறுதல் வார்த்தைகளை தபால், தந்தி, தொலைபேசி மூலம் அறிவித்த உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் அன்னாரின் இல்லத்திற்கு வருகை தந்து கிரியைகளில் பங்கேற்றவர்களுக்கும் மலர்வளையம் அனுப்பியவர்களுக்கும் மற்றும் பல வழிகளில் உதவியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை அந்தியேட்டி வீட்டுக்கிருத்தியத்தில் பங்குபற்றி சிறப்பித்த அனைவருக்கும் எமது உள்ளம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

(C/24885)

இல.25, பிரம்படி லேன், கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

மக்கள், மருமக்கள் குடும்பத்தினர், சகோதரர்.

மாகாண கல்விச் செயலர் மேலதிகச் செயலராக பதவியுயர்வு

திருகோணமலை,நவ.16

வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் க.சண்முகலிங்கம் நாளை மறு தினம் திங்கட்கிழமைமுதல் கிழக்கு அபிவிருத்தி முஸ்லிம் விவகார அலுவல்கள் அமைச்சின் மேலதிகச் செயலாளராகப் பதவிஉயர்வு பெற்றுச் செல்கின்றார்.

இவர் கடந்த 32 வருடங்களாக இலங்கை நிர்வாக சேவையில் பல்வேறு உயர் பதவிகளையும் வகித்து வந்தவர். அதேவேளை, வடக்கு - கிழக்கு மாகாண சபையில் கடந்த 6 வருடங்களாக் பல்வேறு அமைச்சுக்களில் செயலாளர் பதவி வகித்தவர்.

இவரது இடத்துக்கு பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளராகத் தற்போது கடமையாற்றி வரும் திருமதி கமலா சிவசிதம்பரம் நியமனம் செய்யப்படவுள்ளார் என மாகாண அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன. (எ-12)

அர்ஜுன, பிரசன்ன விடுதலை

கொழும்பு,நவ.16

கொழும்பு, மருதானை அசோகா வித்தியாலய மாணவர்களைத் தாக்கினர் என்று அர்ஜுன ரணதுங்க, அவரது சகோதரர் பிரசன்ன ரணதுங்க ஆகியோர் மீது தொடரப்பட்ட இரண்டாவது வழக்கில் இருந்தும் அவர்கள் இருவரும் விடுதலை செயயப்பட்டனர்.

மாளிகாவத்தை நீதிவான் நீதிமன்றத்தில் இவ்வழக்கு நேற்று முன் தினம் மீண்டும் விசாரணைக்கு எடுக்கப்பட்டபொழுது நீதிவான் சரோஜினி குசலா வீரவர்த்தன எதிரிகள் இருவரையும் விடுதலை செய்தார்.

காயமடைந்த மாணவர் ஒருவர் வழக்கை வாபஸ்பெற்றதையடுத்தே அவர்கள் இருவரும் விடுதலை செய்யப்பட்டனர்.

முதல் வழக்கிலிருந்து இவர்கள் இருவரும் ஏற்கனவே விடுதலை செய்யப்பட்டது தெரிந்ததே. (எ)

4ஆம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 16 - 10 - 1972

உதிர்வு 16 - 11 - 1998

செல்வி ரெறன்ஷியா காந்திமதி பீரிஸ்

எங்கள் அன்பின் மதியே!
அன்பு என்னும் சொல்லுக்கே உன் வாழ்வில்
உயிர் கொடுத்தாய்! ஆனால்
காய்ச்சல் என்னும் கொடியவன் உன் உயிரை
எடுத்தானோ?
பாசம் என்னும் கயிற்றால் எம்மைக் கட்டினாய்!
ஆனால் நீ இல்லாமல் பாசக்கயிற்றை அவிழ்க்க
முடியாமல் தவிக்கின்றோமே அம்மா!
எம் வீட்டின் ஒளி விளக்கே இன்று ஒளி இழந்து
தவிக்கின்றது! மதி என்று சொன்னால் கூட
பதினைந்து நாள்கள்தான் பிரிந்திருப்போம்; ஆனால்
நாம் உம்மை இழந்து நான்கு ஆண்டுகள்
தவிக்கின்றோமே அம்மா! அன்று நீ எம் உயிரைக்
காக்காவிட்டால் இன்று நாம் இப்படித் துன்பப்படத்
தேவையில்லை அம்மா! நீ ஆற்றிய சேவை
என்றுமே நெஞ்சை விட்டகலாத சேவையம்மா!

15/1, டேவிற் வீதி, யாழ்ப்பாணம்.

பிரிவால் துயருறும்: தாய், சகோதரங்கள், பெறாமக்கள்.

(10641)

கேள்வி அறிவித்தல் - 2003

சாவகச்சேரி பிரதேச சபை

சாவகச்சேரி பிரதேச சபையால் பின்வருமாறான கேள்விகள் கோரப்படுகின்றன.

1. வரணிச் சந்தையில் கட்டப்பட்ட கடைக் கட்டடங்களின் உரிமையை குத்தகைக்கு விடுவதற்கான கேள்வி.
2. இறைச்சிக்கடைகளுக்கான 01.01.2003 - 31.12.2003 வரை குத்தகைக்கான கேள்வி.

கேள்விப்பத்திரம் வழங்கும் இறுதித்திகதி	:	22.11.2002 ந.ப. 12.00 மணி.
கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி	:	25.11.2002 ந.ப. 12.00 மணி.
கேள்விகள் திறக்கப்படும் திகதி	:	25.11.2002 பி.ப. 2.00 மணி.

கேள்வி அறிவித்தல் அட்டவணை

குத்தகை விவரம்	ஆகக் குறைந்த கேள்வித் தொகை	கேள்வி பிணைப் பணம்	கேள்வி பத்திரப் பணம்
1. வரணிச் சந்தை கடை இல. 01.	100,000.00	1,000.00	100.00
2. வரணிச் சந்தை கடை இல. 02.	100,000.00	1,000.00	100.00
3. கொடிகாமம் சந்தை மாட்டிறைச்சிக்கடை	40,000.00	500.00	100.00
4. கொடிகாமம் சந்தை ஆட்டிறைச்சிக் கடை	10,000.00	250.00	100.00
5. கொடிகாமம் சந்தை கருவாட்டுக் கடைஇல. 01	3,100.00	150.00	100.00
6. கொடிகாமம் சந்தை கருவாட்டுக் கடைஇல. 02	3,100.00	150.00	100.00
7. வரணிச் சந்தை மாட்டிறைச்சிக் கடை	10,000.00	250.00	100.00
8. கைதடிச் சந்தை மாட்டிறைச்சிக் கடை	25,000.00	400.00	100.00
9. கைதடிச் சந்தை ஆட்டிறைச்சிக் கடை	15,000.00	300.00	100.00
10. மிருசுவில் சந்தை மாட்டிறைச்சிக் கடை	5,000.00	200.00	100.00

1. மாத வாடகைகள் விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தின் மதிப்பீட்டிற்கமைவாக அறவிடப்படும்.
2. கேள்விப்பத்திரப்பணம், கேள்வித்தொகை, வாடகை என்பனவற்றிக்கு பெறுமதி சேர்க்கப்பட்ட வரி (VAT) 20% அறவிடப்படும்.
3. சபையால் பணிக்கப்படும் கொல்களங்களில் மட்டும் விலங்குகள் அறுத்தல் வேண்டும். இது சம்பந்தமாக மேலதிக விவரங்ளை தலைமையலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

ந.பாலச்சந்திரன்
செயலாளர்,
சாவகச்சேரி பிரதேச சபை.

அன்ரன் பொன்னையா (J.P.)
தலைவர்.
சாவகச்சேரி பிரதேச சபை.

சாவகச்சேரி பிரதேச சபை.

14.11.2002.

(C/24883)

ஓம் விராட் விஷ்வப் பிரம்மனே நம!

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 17 - 02 - 1920

மறைவு 27 - 11 - 2001

அமரர் நாகமணி இராசதுரை

திதி: 16.11.2002

ஆண்டொன்று ஆனாலும்
அணையாத உங்கள் நினைவில்
அலை கடலாய் எம் உள்ளமதை
ஆறாத் துயரில் ஆழ்த்திவிட்டு
எமைப் பிரிந்து சென்றதுதான் ஏனோ?

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

3/3, பத்திரகாளி கோயிலடி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

(10989)

மரண அறிவித்தல்

திருமதி கந்தையா நாகம்மா

யாழ்ப்பாணம், ஸ்ரான்லி வீதியைப் பிறப்பிடமாகவும் ஆஸ்திரேலியாவைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கந்தையா நாகம்மா கடந்த (11.11.2002) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஜோர்ச் கந்தையாவின் அன்பு மனைவியும், ஜேசுராஜா (பவா - ஆஸ்திரேலியா), அல்ஸ் (சாந்தி - ஆஸ்திரேலியா), அன்ரன் றெஜினோல்ட் (ஆஸ்திரேலியா), அலன் ஜெபநேசன் (லண்டன்), கென்றி ஜோன்சன் (ஆஸ்திரேலியா), சாள்ஸ் றொபின்சன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், அருள்மேரி (ஆஸ்திரேலியா), ஏட்றியன் (ஆஸ்திரேலியா), சுகந்தி (ஆஸ்திரேலியா), பாமினி (லண்டன்), ஜெயந்தினி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமியாரும் வேலாயுதம், காலஞ்சென்ற ஆறுமுகம் மற்றும் சண்முகம், யோகம்மா, வைத்திலிங்கம் (மணியம்), மகேஸ்வரி, முத்துலிங்கம், அம்பலவாணர் (ICRC), சரஸ்வதி (ஹற்றன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஆஸ்திரேலியாவில் உள்ள ஜெனிபர், றொசானி, லஷ்சினி, சுதர்னா மற்றும் லண்டனிலுள்ள மேரி ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் அவரது இல்லத்திலிருந்து இன்று (16.11.2002) சனிக்கிழமை காலை 11 மணியளவில் புனித அடைக்கலமாதா தேவாலயத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின் பூதவுடல் யாழ்.கொஞ்சேஞ்சி, மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

105,ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(10626)

தகவல் வைத்திலிங்கம் (மணியம்)

உதயன்

ஜனாதிபதியின் யோசனைக்கு அமைச்சர் பீரிஸின் பதிலடி!

இன நல்லிணக்கம் மற்றும் நிலையான சமாதானத்துக்கான விடயங்களை ஆராய்ந்து முடிவெடுப்பதற்கு விடுதலைப் புலிகளையும் உள்ளடக்கிய தேசியக் குழு ஒன்று அமைக்கப்படவேண்டும்.

- இவ்வாறு முன்மொழிந்திருக்கின்றார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க. தான் ஜனாதிபதியாகப் பதவியேற்று எட்டு ஆண்டுகள் பூர்த்தியாவதை ஒட்டி நடந்த நிகழ்வின்போது நாட்டு மக்களுக்கு அவர் உரையாற்றினார். அப்போது அவர் வெளியிட்ட ஆலோசனைகளில் ஒன்றே மேற்படி தேசியக் குழு பற்றிய முன்மொழிவாகும்.

"சுற்றிச் சுற்றி சுப்பரின் கொல்லைக்குள்" என்ற ஒரு பழமொழி பேச்சு வழக்கில் உள்ளது. ஜனாதிபதி சந்திரிகாவின் புதிய யோசனை இந்தப் பழமொழியை நினைவுபடுத்துவதாகவே உள்ளது.

★ 1983 ஜூலையில் தமிழர்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்ட இனக் கலவரத்தினால் சர்வதேச அழுத்தம் இலங்கை அரசுக்கு எதிராகத் திரும்பியது. அதனால் 1983 ஒக்ரோபரில் அப்போதைய ஜனாதிபதி சர்வகட்சி மாநாடு ஒன்றைக் கூட்டினார். - இனப்பிரச்சினைத் தீர்வுக்கான வழிவகைகளைக் கண்டுபிடிக்க.

★ 1989 - 1990 காலப்பகுதியில் விடுதலைப் புலிகளுடன் சமரசப் பேச்சு நடத்த முன்வந்த ஜனாதிபதி பிரேமதாஸாவின் அரசு பதினான்கு அரசியல் கட்சிகளைக் கொண்ட சமாதானக் குழுவை அமைத்தது. இலங்கையின் ஐக்கியத்தையும் ஒருமைப்பாட்டையும் பேணும் அதேசமயம் வடக்கு - கிழக்கு மக்களின் அபிலாஷைகளைத் தீர்ப்பதற்கான திசையில் பணியாற்றுவதற்காகவும் இந்தச் சமாதானக் குழு அமைக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டது.

★ ஜனாதிபதி சந்திரிகாவின் முதலாவது அரசும் தனது பதவிக்காலத்தின் பிற்பகுதியில் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான அதிகாரப் பரவலாக்கல் விடயங்களை அடக்கியது என்று தெரிவிக்கும் அரைவேக்காட்டு அரசமைப்பு மறுசீரமைப்பு நகலைக் கொண்டுவரமுயற்சித்தது. அதையொட்டியும் சர்வகட்சிப் பிரதிநிதிகள் கூட்டங்கள் நடத்தப்பட்டன.

ஆனால், இவைபோன்ற சர்வகட்சிக் கூட்டங்கள், வட்ட மேசை மாநாடுகள் அனைத்தும் பயன் தராமல் சம்பிரதாயபூர்வ அமர்வுகளாகக் கழிந்ததுதான் நாட்டின் சரித்திரம்.

அதன் பின்னர்தான் இலங்கைத் தமிழர்களின் ஏகப்பிரதிநிதிகளான விடுதலைப் புலிகளுடன் பிரதமர் ரணிலின் அரசு நேரடியாகப் பேச்சுக்களை இப்போது தொடங்கியிருக்கின்றது. இனப்பிரச்சினைத் தீர்வுக்குக் காரணமான அடிப்படை விடயங்கள் குறித்து ஆராய்வதற்கு அரசுத் தரப்பும் புலிகள் தரப்பும் இணைந்து 'அரசியல் உபகுழு' ஒன்றை அமைக்கும் அளவுக்கு விக்கினம் ஏதுமின்றி இந்த அமைதி முயற்சிகள் முன்னேறியுள்ளன.

இந்தநிலையில்தான், அந்தப் பேச்சுக்களினதும் அமைதி முயற்சிகளினதும் முக்கியத்துவத்தைப் பின்தள்ளிச் செயலிழக்கச் செய்யும் வகையிலான ஆலோசனை ஒன்றை இப்போது முன்வைக்க முயல்கின்றார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

தீர்வு குறித்து ஆராய்வதற்கு பல அரசியல் கட்சிகளையும் கொண்ட பிரதிநிதிகள் குழு ஒன்றை அமைக்கும்படி ஜனாதிபதி கோருவது - தீர்வுக்கான சமாதான முயற்சிகள் ஏற்கனவே இவ்வளவு தூரம் முன்னேற்றம் அடைந்தபின்னர் கோருவது - இந்த சமாதான நடவடிக்கைகளைக் குழப்பும் நோக்கம் கொண்ட முயற்சி என்றே கருதவேண்டும்.

இன்றைய நிலையில் எதிர்க்கட்சித் தரப்புக்குத் தலைவர் ஜனாதிபதிதான்.

"லியன்பொக்ஸ் உடன்பாட்டின்படி சமாதான முயற்சிகளின் முன்னேற்றம் குறித்து எதிர்க்கட்சித் தரப்புக்கு உரிய வேளையில் உரிய தகவல்கள் தெரிவிக்கப்படும். மற்றப்படி சமாதானப் பேச்சுக்களில் முடிவெடுக்கும் பங்கு, பணி ஏதும் எதிரணித் தரப்புக்கு வழங்கப்படமாட்டாது." - இப்படித் திட்டவட்டமாக அரசின் நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தியிருக்கின்றார் அரசின் பேச்சாளர் அமைச்சர் ஜி. எல். பீரிஸ்.

சமாதான முயற்சிகளை முன்னேற விடாது மீண்டும் 'சுற்றிச் சுற்றி சுப்பரின் கொல்லைக்குள்' வீழ்த்துவதற்கு வழிசெய்யும் விதத்தில் ஜனாதிபதி தெரிவித்த யோசனையை நேரடியாகக் குறைகூறாமல் சுற்றிவளைத்துக் கொடுக்கப்பட்ட பதிலடி இது.

சாவகச்சேரி ஆஸ்பத்திரி 'வார்ட்டு'களை இயக்கக் கோரி போராட்டத்துக்கு முஸ்தீபு

தென்மராட்சி,நவ.16

சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலை 'வார்ட்டு'களை இயக்குவதற்கு காலதாமதமேற்படுவதை ஆட்சேபித்து சாவகச்சேரி நகரில் உள்ள பொது அமைப்புக்கள் விரைவில் மறியல் போராட்டம் நடத்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தென்மராட்சிப் பிரதேசத்தின் பிரதான வைத்தியசாலையான சாவகச்சேரி வைத்தியசாலையில் 'வார்ட்டு'கள், பிரசவ விடுதிகள் அமைப்பதற்கான கட்டட வசதிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் இவற்றினை இயக்குவதற்கு சுகாதாரத் திணைக்களத்தினர் பின்னடித்து வருவதாகக் கூறப்படுகின்றது. இதனை ஆட்சேபித்தே மறியற்போராட்டம் நடத்தவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

'வார்ட்டு'கள் அமைக்கக்கூடிய கட்டடங்கள், அம்புலன்ஸ் விடும் கொட்டகை, சமையலறை, வெளிநோயாளர் தங்குமிடம் போன்றவை புனரமைக்கப்பட்டும் புதிதாக அமைக்கப்பட்டும் செயற்படக்கூடிய வகையில் உள்ளபோதிலும் பிரதேசத்தில் 90 வீதமான மக்கள் மீளக்குடியமர்ந்துள்ள இவ்வேளையில் ஆஸ்பத்திரி 'வார்ட்டு'கள், பிரசவ விடுதி ஆகியவற்றை மீண்டும் இயக்குவதற்கு காலதாமதம் காட்டப்படுவதாகவும் - ஆஸ்பத்திரியில் கடமையாற்றும் டாக்டர் ஒருவரை பளை ஆஸ்பத்திரிக்கு இடமாற்றம் செய்ததையும் கண்டித்து இம்மாத இறுதியில் மறியல் போராட்டம் நடத்தவுள்ளதாகவும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை -

சாவகச்சேரி நகர்ப் பகுதியைச் சேர்ந்த பொது அமைப்புக்கள் வைத்தியசாலையில் 'வார்ட்டு'க்கள், பிரசவ விடுதி ஆகியவற்றை உடனடியாகத் திறக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளுமாறு வடக்கு - கிழக்கு மாகாண சுகாதாரப் பணிப்பாளரை மகஜர்கள் மூலம் கோரியுள்ளன.

(ம-117)

ஆசிரியர் தகைமைத்திறன் மதிப்பீடு அடுத்த ஆண்டுமுதல் முழுமையாக அமுல்

அச்சுவேலி,நவ.16

ஆசிரியர் தகைமைத்திறன் மதிப்பீடு அடுத்த வருடத்தில் இருந்து பாடசாலைகளில் முழுமையாக நடைமுறைப்படுத்தப் படவுள்ளது.

ஆசிரியர்களுக்கான பதவி உயர்வுகள், வருடாந்தச் சம்பள உயர்ச்சிகள் என்பன தகைமைத்திறன் மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டே இனி வழங்கப்படவுள்ளன.

ஆசிரியர் பொதுத் தகைமைத்திறன் மதிப்பீடு தொடர்பான செயற்பாடுகள் இந்தவருட நடுப்பகுதியில் இருந்து நடைமுறைப்படுத்தப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும், அது முழுமையாக நடைமுறைப்படுத்தப்படாமல் பரீட்சார்த்த ஏற்பாடாகவே மேற்கொள்ளப்பட்டன.

அடுத்த வருடத்தில் இருந்து சகல ஆசிரியர்களும் தவணைக்கு ஒரு தடவை வீதம் வருடத்தில் மூன்று தடவைகள் பொதுத் தகைமைத்திறன் மதிப்பீட்டிற்கு உள்ளாக்கப்படவுள்ளனர்.

தகைமைத்திறன் மதிப்பீட்டின் ஊடாகப் பெறப்படும் தரவித்தியாசம் சம்பந்தப்பட்ட பாடசாலையிலோ, கல்விக் கோட்டத்திலோ அல்லது வலய மட்டத்திலோ மாகாண மட்டத்திலோ ஏற்ற வழிவகைகள் செய்யப்பட்டு சீர்படுத்தப்படுவதுடன், தேசிய மட்டத்தில் தீர்க்கப்படவேண்டிய பிரச்சினைகள் பற்றி கல்வி அமைச்சிற்கு தெரியப்படுத்தப்படவேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதிபர் அல்லது அதிபரால் நியமிக்கப்படும் தகைமை வாய்ந்த சிரேஷ்ட ஆசிரியர்குழு தகைமைத்திறன் மதிப்பீட்டினை மேற்கொள்ளும்.

ஒவ்வொரு ஆசிரியரும் பத்து விடயத் தலைப்புக்களில் - 104 அம்சங்களில் - மதிப்பீடு செய்யப்படவுள்ளனர்.

ஒவ்வோர் அம்சத்திற்கும் பொருத்தமான மட்டத்திற்கு கூடியது. பொருத்தமானது, பொருத்தமானதுக்கு குறைவானது என்ற ரீதியில் முறையே மூன்று, இரண்டு, ஒன்று என புள்ளி வழங்கப்பட்டு, மொத்தப் புள்ளி சதவீதப் படுத்தப்பட்டு மதிப்பீட்டின் இறுதிமுடிவு பெறப்படவுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-11)

மீளக்குடியமர அனுமதிக்கக் கோரி

எழுதுமட்டுவாழ் மக்கள் மறியற்போர் நடத்த ஏற்பாடு!

யாழ்ப்பாணம்,நவ.16

தென்மராட்சிப் பகுதியின் எழுதுமட்டுவாழ் வடக்கு மற்றும் தெற்கு கரம்பகம் பகுதி மக்கள் தம்மை சொந்த இடங்களில் மீளக்குடியமர அனுமதிக்கவேண்டும் எனக்கோரி மறியற் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

அரசாங்கத்திற்கும், புலிகளுக்கும் இடையில் இடம்பெற்ற புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி மேற்படி இடங்களில் தம்மை மீளக்குடியமர அனுமதிக்காமை கவலையளிப்பதாகவுள்ளது என்றும் அவர்கள் அறிவித்துள்ளனர்.

எழுதுமட்டுவாழ் வடக்கு மற்றும் தெற்கு, கரம்பகம் பகுதிகளில் வசித்துவந்த 947 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 3 ஆயிரம் பேர் இடம்பெயர்வு காரணமாகப் பல்வேறு கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர் என்றும் -

இதனால், இந்தப் பகுதிகளுக்கே உரியதான பயன்தரும் பனை, தென்னை மற்றும் விவசாயப் பயிர்கள் முற்றாக அழிவடைந்துவிடும் நிலை உருவாகிவருகின்றது என்றும் - பொது மக்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

எனவே, தம்மை மீளக்குடியமர அனுமதிக்காத பட்சத்தில் மறியல் போராட்டத்தில் ஈடுபடுவது தவிர்க்கமுடியாததாகிவிடும் என்றும் - பொதுமக்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (எ-180)

அடுத்த ஆண்டுக்கான

ஒரு தொகுதி பாடநூல்கள் திங்களன்று லொறிகளில் வரும்

யாழ்ப்பாணம்,நவ.16

யாழ்.மாவட்ட பாடசாலை மாணவர்களுக்கான 2003ஆம் ஆண்டுக்குரிய இலவச பாடநூல்களின் முதல்தொகுதி நூல்கள் நாளைமறுதினம் திங்கட்கிழமை 5 லொறிகளில் எடுத்து வரப்படவுள்ளதாக யாழ்.கல்வி வலய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கடந்த காலங்களில் கப்பல்மூலம் எடுத்துவரப்பட்ட பாடநூல்கள் இம்முறை தரைவழிப்பாதையூடாக எடுத்துவரப்படவுள்ளன. எடுத்துவரப்படும் நூல்கள் ஒவ்வொரு கல்விக் கோட்டங்களுக்கும் நேரடியாகவே கையளிக்கப்படவுள்ளன.

அதன்படி தற்பொழுது எடுத்துவரப்படவுள்ள பாடநூல்கள் யாழ்ப்பாணம், சண்டிலிப்பாய், உடுவில், தெல்லிப்பழை மற்றும் பருத்தித்துறை ஆகிய 5 கல்விக் கோட்டங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படவுள்ளன. அடுத்த தொகுதி பாடநூல்களும் விரைவில் எடுத்துவரப்பட்டு ஏனைய கோட்டங்களுக்கு வழங்கப்படும் பட்சத்தில் ஜனவரி மாதம் பாடசாலைகள் முதலாம் தவணைக்கு ஆரம்பமாகும்போது மாணவர்களுக்கு அவற்றை வழங்கக்கூடியதாக இருக்கும் எனவும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

மேற்குறிப்பிட்ட 5 கல்விக் கோட்டங்களையும் 19ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலையில் பாடநூல்களைப் பொறுப்பேற்பதற்குத் தயாராக இருக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த பல ஆண்டுகளாக யாழ்.மாவட்ட மாணவர்களுக்குத் தாமதமாகவே கிடைத்து வந்த இலவச பாடநூல்கள் இம்முறை உரிய நேரத்தில் வழங்கப்படவுள்ளதாக கல்வி வெளியீட்டுப் பிரிவின் பிரதி ஆணையாளர் ஹச்சி முஹமட் தெரிவித்துள்ளார். (ம-10)

நாளை

கார்த்திகை 01
ஞாயிற்றுக்கிழமை
(17.11.2002)
திதி : திரயோதசி
பின்னிரவு 3.55 வரை.
நட்சத்திரம்: ரேவதி
பிற்பகல் 1.08 வரை
பிரதோஷ விரதம்
கரிநாள்
சுபநேரம் : 9.08 - 10.38
ராகுகாலம்: 4.38 - 6.08
(பழைய நேரப்படி)

உதயவாக்கு

அன்பின் மூலமாகச் செயலாற்றப்படும் ஒவ்வொரு காரியமும் ஆனந்தத்தைக் கொண்டுவந்தே தீரும்.

பேச்சுக்களில் சிங்கள மக்களின் பிரதிநிதிகளும் இருக்கவேண்டுமாம்

வீரவிதான அமைப்பு அரசுக்குக் கடிதம்

கொழும்பு,நவ.16

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் அடுத்த மாதம் 2ஆம் திகதிமுதல் நடக்கும் மூன்றாம் கட்டப் பேச்சுக்களில் சிங்கள மக்களின் பிரதிநிதி ஒருவரையும் சேர்த்துக் கொள்ளவேண்டும் என்று சிங்கள வீரவிதான அமைப்பு அரசைக் கோரியுள்ளது.

அரசுசார்புப் பிரதிநிதிகள் பேச்சில் கலந்துகொள்வது போன்று எதிர்க்கட்சியான பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் பிரதிநிதியும் பேச்சில் சேர்க்கப்படவேண்டும் என்றும் அந்த அமைப்பு அரசைக் கேட்டுள்ளது.

தமிழ்மக்கள் சார்பில் விடுதலைப் புலிகள் அமைப்பின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கமும் அதன் தளபதி கருணா ஆகியோர் பங்குபற்றுகின்றனர். முஸ்லிம் மக்கள் சார்பில் ரவூப் ஹக்கீம் பங்குபற்றுகின்றார். ஆனால், சிங்கள மக்கள் சார்பில் போதிய பிரதிநிதிகள் பேச்சுகளில் பங்குபற்றவில்லை. எனவே, சிங்கள மக்களின் பிரதிநிதி ஒருவரும் அடுத்த பேச்சில் இணைக்கப்பட வேண்டும் என்று வீரவிதான அரசுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் கேட்டுள்ளது. (ம-3)

ஜீ.ஜீ.பொன்னம்பலத்தின் சிலை யாழ்.நூலகத்தில்!

நிறுவ அனுமதி கேட்கிறார் விநாயகமூர்த்தி எம்.பி.

யாழ்ப்பாணம்,நவ.16

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் ஸ்தாபகத் தலைவர் அமரர் ஜீ.ஜீ.பொன்னம்பலத்தின் வெண்கலச் சிலையை யாழ்.நூலக வளாகத்தில் நிறுவுவதற்கு இடம் ஒதுக்கித் தருமாறு யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி யாழ்.மாநகரசபையிடம் கோரியுள்ளார். இது தொடர்பாக யாழ்.மேயருக்கு அவர் ஒரு கடிதத்தையும் எழுதியுள்ளார்.

அமரர் ஜீ.ஜீ.பொன்னம்பலத்தின் ஜனன நூற்றாண்டின் நிறைவினையொட்டியே நூலகத்தில் இந்தச் சிலை நிறுவப்படவுள்ளதாக அக்கடிதத்தில் அவர் தெரிவித்துள்ளார்.

யாழ்நூலக வளாகத்தில் ஜ.ஜ.பொன்னம்பலத்தின் சிலையை நிறுவுவதற்கான அனுமதி ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளது என்றும் -

அதற்குரிய ஆவணங்கள் யாழ்.மாநகரசபையிடமே இருப்பதால் தற்போது சிலையை நிறுவுவதற்கான இடத்தை வழங்க வேண்டும் என்றும் -

விநாயகமூர்த்தி எம்.பி. தனது கடிதத்தில் மேலும் கூறியுள்ளார். (ம)

2ஆம் மாத நினைவஞ்சலி

வைத்திய கலாநிதி ஏ.உமாகாந்தன்

(உரிமையாளர், நாயன்மார்கட்டு வைத்தியசாலை)

இவரது 2ஆம் மாத ஆத்மசாந்திப் பிரார்த்தனைப் பூஜை இன்று (16.11.2002) சனிக்கிழமை துவாதசி. இறந்த திதியில் மனைவி, மக்கள், அன்பர், நண்பர், ஊழியர், நோயாளர் அனைவரும் அவரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்தனை செய்கிறோம். அவரது விருப்பம்போல் தொடர்ந்து நடக்கும் வைத்தியசாலையிலும் அன்று பிரார்த்தனை செய்வோம்.

மனைவி, மக்கள்.

நாயன்மார்கட்டு வைத்தியசாலை,
நாயன்மார்கட்டு.

(10623)

நெஞ்சைவிட்டு அகலாத
இரண்டாம் ஆண்டு நினைவாக...

தோற்றம் 04 - 10 - 1955

மறைவு 08 - 11 - 2000

திருமதி இராசகாந்தன் தங்கராணி

(யாழ்ப்பாணம் - வடமராட்சி - வட அல்வைசேர்)

திதி: 16.11.2002

எங்கள் குடும்பத்தின் குலவிளக்காய் ஒளி தந்து
எமையெல்லாம் வாழவைத்த அன்புத் தெய்வமே!
எம்மைப் பிரிந்து ஈராண்டுகள் சென்றாலும்
என்றும் உங்கள் நினைவுதனைச் சுமந்துநிற்கும்
எம்மிதயக் கோயில் தனில் உமைவைத்து
என்றும் புசிப்பதுவே எமது கடனாகும்.

கணவர் - இராசகாந்தன்,
மகன் - ரமேஸ் *(லண்டன்)*,
மருமகள் - கௌதினி *(லண்டன்)*.

"எழிலகம்",
அல்வாய் வடக்கு, அல்வாய்.

(10966)

மாதம் ஒன்று ஆகியதோ அப்பா!
31ஆம் நாள் விழிநீர் அஞ்சலியும் நன்றி நவிலலும்

இகம் 29 - 11 - 1926

பரம் 17 - 10 - 2002



அமரர் மாணிக்கம் கந்தப்பு

(ஆசிரியர் - சின்னராசா)

17.10.2002 வியாழக்கிழமை கொழும்பில் இறையடி எய்திய எங்கள் இதய தெய்வத்தின் இறுதிக்கிரியைகளில் நேரில் கலந்துகொண்டவர்களுக்கும், மலர்வளையங்கள் வைத்தும் மலர் தூவியும், மலர் அஞ்சலி செலுத்தியவர்களுக்கும், உள்ளூர், வெளிநாடுகளிலிருந்து அனுதாபச் செய்திகள் அனுப்பி வைத்தவர்களுக்கும், கொழும்பு பெரியாஸ்பத்திரி பல் வைத்திய கலாநிதிகளுக்கும், கொழும்பு (கொள்ளுப்பிட்டி) டேடன் வைத்தியசாலை டாக்டர் கலாநிதி W.S.சாந்தராஸ் அவர்களுக்கும், அவருடன் உதவியாயிருந்த டாக்டர்கள், தாதிமார், ஊழியர்களுக்கும் மேலும் பல்வேறு வழிகளில் உதவிகள் நல்கியவர்களுக்கும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது துன்ப மத்தியில் நன்றி நவில்கின்றோம்.

கு.கந்தப்பு
31/3, நெல்சன் பிளேஸ்,
வெள்ளவத்தை.
01-362384

பாசமுள்ள மனைவி:
திருமதி குணமணி கந்தப்பு (ரீச்சர்),
பிள்ளைகள்.

(C/24784)

பிரதம தபாலக ஆலோசனை குழுக் கூட்டம்

குருநகர்,நவ.16

யாழ்.பிரதம தபாலக ஆலோசனைக் குழுவின் முதலாவது கூட்டம் இன்று சனிக்கிழமை மு.ப 10மணிக்கு யாழ்.பிரதம தபாலகத்தில் தபாலதிபர் சி.பூ.இராசதுரை தலைமையில் நடைபெறவுள்ளது. (எ-51)

தாதியர் பயிற்சிப் பாடசாலை போதனாசிரியர்களுக்கு ரூ.750 அலவன்ஸ்

யாழ்ப்பாணம்,நவ.16

நாட்டில் உள்ள சகல தாதியர் பயிற்சிப் பாடசாலை போதனாசிரியர்களுக்கும் 2002ஆம் ஆண்டு ஜனவரி முதல் 750ரூபா அலவன்ஸாக வழங்குமாறு சுகாதார அமைச்சு சுற்றறிக்கை மூலம் தாதியர் பயிற்சிப் பாடசாலைகளுக்கு அறிவித்துள்ளது.

தாதிய பயிற்சிப் பாடசாலை போதனாசிரியர்களுக்கான பற்றாக்குறையினை அடுத்தே இந்த அலவன்ஸ் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளதாகவும் - போதனாசிரியர்களுக்கான வெற்றிடம் நிரப்பப்படும்வேளை மேற்படி அலவன்ஸ் வழங்கப்படமாட்டாது என்றும்.- சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு மற்றும் சகல தாதியர் பயிற்சி பாடசாலைகளுக்கும் சுற்றறிக்கை அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (எ-139)

ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம் 24 - 09 - 1953

மறைவு 27 - 11 - 2001

திருமதி அருள்ராஜலிங்கம் ரேவதிதேவி *(கிளி)*

திதி: பூர்வபக்கத் துவாதசி 16.11.2002

ஆண்டொன்று சென்றாலும் அணையாத
திருமுகமே கிளியே!
காலங்கள் ஓடினாலும் உன் நினைவலைதான்
ஓடிடுமா கிளியே?
கரணியிலே எம்மைத் தனியாக விட்டு
பறந்தாயோ கிளியே?
உன் நினைவில் நாளும் வாடும்
எங்கள் மனம் உங்கள் சாந்திக்காக நித்தமும் வேண்டும்!
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

சிங்கம் வீதி,
உடுவில்.

உங்கள் பிரிவால் தினமும் துயருறும்:
கணவர், தாய், சகோதரி குடும்பத்தினர், சகோதரன் குடும்பத்தினர் மற்றும் சிங்கராசாவும் பிள்ளைகளும்.

(10961)

யாழ் மக்களின் நன்மதிப்பைப் பெற்ற ஓர் உன்னத ஆயுர்வேத தயாரிப்பு.

மூவ்பாம்

தசைவலி, தசைப்பிடிப்புகளிலிருந்து உடனடித்தீர்வு
முட்டு வலிகளிலிருந்து உடனடி நிவாரணம்
விளையாட்டின்போது ஏற்படும் அனைத்து வலிகளுக்குமான முழுமையான நிவாரணி
இடுப்பு, முதுகு வலிகளிலிருந்தும் நிவாரணமளிக்கிறது

ஏக விநியோகஸ்தர்:-
PHARMCO MARKETING SERVICES (PVT) LTD.
JEGHAN PHARMACY
No.462/B, Hospital Road, Jaffna. Tel.021-2194, 3191

CIMA

- தகுதியும் திறமையும் வாய்ந்த கல்வியாளர்களின் விரிவுரைகள்,
- ஒவ்வொரு பாடத்திற்கும் இலவசமான மூலப்பாடக்குறிப்புக்கள்,
- CBA வசதித்திட்டம்,
- திறமை அடிப்படையில் 100% SCHOLARSHIP வழங்கப்படுகின்றது,
- குளிரூட்டப் பெற்ற வசதியான விரிவுரை மண்டபங்கள்,

தலைநகரில் பேசப்படும்.....
திருவாளர்கள் லஷ்மணராஜ்
எம்.எச்.எம்.பைசர், அஜந்தா
மதுரப்பெருமா, வெங்கட்ரமணா,
ராஜ்குமார், ரமணன் உட்பட கல்விமான்கள்
பலரின் விரிவுரைகள்.

FOUNDATION பகுதிநேர விரிவுரைகள் நவம்பர் முதல் வாரத்திலும், ஏனைய விரிவுரைகள் டிசெம்பர் 5 இலும் ஆரம்பம்.

Mercury INSTITUTE OF MANAGEMENT

AS UNIQUE AS MERCURY
MERCURY INSTITUTE OF MANAGEMENT (PTE) LTD.
25 1/1, Mile Post Avenue (facing Duplication Road),
Colombo - 03, Sri Lanka.
Tel.: 370643, 370644 Fax: 336325
E-mail: mercury 1@ sltnet.lk

(C/24780)

ஆட்சியைக் கைப்பற்ற பொ.ஐ.மு.இரகசியத்திட்டம்: தமிழ்க்கூட்டமைப்பு ஒரு போதும் ஆதரவளிக்காது!

விநாயகமூர்த்தி எம்.பி.அடித்துக் கூறுகிறார்

"ஆட்சியை மீண்டும் பிடிப்பதற்கு ஜனாதிபதி தலைமையிலான பொ.ஐமு. இரகசியத்திட்டம் தீட்டிவருகிறது. அதனை அனுராபண்டாரநாயக்கா வெளிப்படையாகவே கூறியிருக்கிறார். ஆனால், பொ.ஐ.மு ஆட்சிபீடம் ஏறினால் தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பு நிச்சயம் அந்த அரசுக்கு ஆதரவு வழங்காது."

- இப்படிக் கூறினார் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தலைவர் அ.விநாயகமூர்த்தி.

வரவு - செலவுத் திட்டம் தொடர்பான விவாதம்மீது பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:-

ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க நாட்டின் ஜனாதிபதியாகத் தொடர்ந்து பதவிவகிக்க விரும்பினால் இப்போது இருப்பதுபோலவே வைபவரீதியான ஜனாதிபதியாக இருந்து கொள்ளட்டும்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் புலிகளின் தலைவர் பிரபாகரனும் மிகவும் நேர்த்தியாக சமாதான நடவடிக்கைகளை முன்னெடுத்துச்செல்கிறார்கள். இவர்கள் இருவரும் உண்மையிலேயே நோபல் பரிசு பெறுவதற்கு சிபாரிசு செய்யப்படக்கூடியவர்கள்.

படைப்பிரிவுகளில் ஒரு தொகுதியினர் சமாதானத்துக்கு எதிராகச் செயற்படுவதால் உயர் பாதுகாப்பு வலயம் என்ற விடயம்மூலம் வடக்கில் சில இடங்கள் இன்னமும் வழமைநிலைக்குத் திரும்பவில்லை.

தென்மராட்சி, வலி.வடக்கு பகுதிகளில் மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்படவில்லை. மண்டைதீவு பிரதான வீதியில் ஒன்றரைக் கிலோ மீற்றர் பகுதி தொடர்ந்து படையினர் வசமுள்ளது. அதற்காக பிறிதொரு வீதி மக்கள் போக்குவரத்துக்கு அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

மண்டைதீவில் முதலாம், இரண்டாம், மூன்றாம், நான்காம், ஐந்தாம் வட்டாரங்கள் உயர்பாதுகாப்பு வலயமாகவே பிரகடனப்படுத்தப்பட்டிருக்கின்றன. ஆறாம், ஏழாம் வட்டாரங்களிலுள்ள பொதுக்கட்டடங்களில் மிகவும் வசதியற்ற நிலையில் மக்கள் வாழ்ந்துவருகிறார்கள்.

தென்மராட்சி, வரணி, கடம்பன் குறிச்சி பகுதிகளில் பல வீடுகள் இராணுவத்தினர் ஆக்கிரமிப்பிலுள்ளன. அங்கு சுமார் 50 குடும்பங்கள் மீளக் குடியமர அனுமதியளிக்கப்படவில்லை.

வலி.வடக்கில் 45கிராமசேவகர் பிரிவுகளில் இதுவரை 28 கிராம சேவகர் பிரிவுகளில் மட்டுமே மக்கள் மீளக குடியமர அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

கைதடி மத்திய மருந்தகத்தை ஒரு வைத்தியசாலையின் ஓர் அலகாக தரம் உயர்த்தும்படி சுகாதார அமைச்சரைக் கேட்டுக்கொள்கிறேன். இம்மருந்தகம் கைதடி, நாவற்குழி, மறவன்புலோ, கோகிலாகண்டி போன்ற கிராமங்களிலுள்ள மக்களுக்கும் சேவையாற்றிவருகின்றது. மேலும் அரியாலை, நுணாவில் பகுதிகளைச் சேர்ந்தவர்களும் இம்மருந்தகத்தில் சேவையைப் பெற்றுக்கொள்கின்றார்கள்.

நிதிஅமைச்சின் செயலாளர் சரித்த ரத்வத்த வழங்கியுள்ள சுற்றறிக்கை மூலம் வடக்கு - கிழக்கில் புதிய நியமனங்களும் செய்யமுடியாதுள்ளது. உள்ளூர் திணைக்களத் தலைவர்களை ஒரு சுகாதாரக் கூலியாளரைக்கூட நியமிக்கமுடியாததாகவுள்ளது. இச்சுற்றறிக்கையின் செயற்பாட்டினை வடக்கு - கிழக்கில் தற்காலிகமாக நிறுத்தி

வைக்க சரித்த ரத்வத்தவைக் கேட்டுள்ளேன்.

தான் இதுபற்றி பிரதமரின் செயலர் பிரட்மன் வீரக்கோனின் கவனத்துக் கொண்டு வந்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

வடக்கு - கிழக்கில் சில புதிய நியமனங்கள் செய்யப்படும் வகையில பிரதமர் இச்சுற்று நிருபத்தில் மாற்றஞ் செய்யவேண்டும்.

எமது தலைவர் அமரர்குமார் பொனம்பலம் கொலை தொடர்பாக 'சண்டே லீடர்' பத்திரிகை வெளியிட்ட விடயங்களை வைத்து சட்டமா அதிபர்-எந்தவித அரசியல் தலையீடும் அற்ற-செம்மையான - விசாரணைக்கு உத்தரவிடவேண்டும். குற்றவாளிகள் சட்டத்தின்முன் கொண்டுவரப்படவேண்டும் எனக்கோரியிருந்தேன்.

2000ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் குற்றப்புலனாய்வுப் பணியகப் பணிப்பாளர் ஷோ.விக்கிரமசிங்க இக்கொலையில் சம்பந்தப்பட்டவர்கள் தொடர்பான விவரங்கள் கொண்ட கடிதம் ஒன்றை ஜனாதிபதிக்குச் சமர்ப்பித்திருந்தார். அவரே இந்த விசாரணைகளும் பொறுப்பாக இருந்தவர்.

ஜனாதிபதி இந்த விடயத்தில் உகந்த நடவடிக்கை எதனையும் இதுவரையில் எடுக்கவில்லை.

இவை பற்றி சிரத்தையுடன் ஆராய்ந்து தக்க நடவடிக்கை எடுக்காவிடில் சமாதான முயற்சிகள் அர்த்தமற்றதாகிவிடும்.

நாட்டின் பாதுகாப்பு என்ற விடயத்தில் இரு சமாந்தரமான - ஒன்றுக்கொன்று எதிர்ப்பு உணர்வு மிக்க - நிர்வாகங்கள் இருக்கமுடியாது. இதுவும் நாட்டின் பாதுகாப்புக்கும் சமாதான முயற்சிகளுக்கு குந்தகமாகவே அமையும்.

சமாதான முயற்சிகளை தான் எதிர்க்கவில்லை என்று ஜனாதிபதி அறிவிப்பான சமுதாயத்திற்கு வேண்டுமானால் கூறட்டும்.

ஏனெனில், புலிகளின் தீவிர பங்களிப்பின்றி இந்நாட்டில் சமாதானம் என்பது சாத்தியமாகாது என்பதை மறந்து தினமும் புலிகளை விமர்சித்து வருகிறார் ஜனாதிபதி - என்றார் அவர்.

வடக்கு–கிழக்குப் பகுதிகளுக்கு இந்த பட்ஜட்டால் என்ன பயன்?

இரா.சம்பந்தன் காட்டமான கேள்வி

"நிதி அமைச்சரின் வரவு-செலவு திட்டம் சமாதானம், அபிவிருந்தி என்பவற்றை அடிப்படையாகக்கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது. ஆனால், எமது வடக்கு-கிழக்கு பிரதேச அபிவிருத்திக்கு அதன்மூலம் என்ன கிடைக்கப் போகிறது?"

- இப்படி கேள்வி எழுப்பினார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் திருகோணமலை மாவட்ட எம்.பியான இரா.சம்பந்தன்.

வரவு - செலவுதிட்ட உரைமீதான இறுதிநாள் விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய இரா.சம்பந்தன் எம்.பி. மேலும் கூறியதாவது:-

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தொடர்பாக சர்வதேச மத்தியஸ்தத்துடன் நடைபெறும் சமாதானப் பேச்சுக்கள் மக்கள் மத்தியில் பெரும் நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளன. இரண்டு கட்டமாக நடைபெற்ற முதற் சுற்றுப் பேச்சுக்கள் அரசியல் முக்கியத்துவம்பெற்ற நிகழ்வாகும். நாம் சமாதானத்தையே விரும்புகின்றோம். அதிவிரைவில் இறுதித் தீர்வுகாணப்படும் என்று நம்புகிறோம். ஆனால் இப்படியான நிலையிலும் எமது மக்கள் இராணுவத்தின் கெடுபிடிகளுக்கு தொடர்ந்தும் உள்ளாக்கப்பட்டு வருகின்றார்கள்.

அதியுயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் பயன்தரும் வயல்கள் அபகரிக்கப்பட்டுள்ளன. புதிதாகப் பல முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன. யுத்தநிறுத்தம் செய்யப்பட்டிருந்தாலும் இராணுவ முகாம்கள் விஸ்தரிக்கப்பட்டுள்ளன.

எமது பிரதேசத்தில் ஐம்பது வீதமான காணிகள் இராணுவத்தினர் வசமே இருக்கின்றன. விவசாயம் செய்ய முடியவில்லை. மக்கள் மீண்டும் தமது சொந்த இடங்களுக்குச் சென்று குடியேற முடியவில்லை. அங்கெல்லாம கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டுள்ளன.

இந்த அபாயநிலை நீக்கப்பட வேண்டும். பாதுகாப்புப் பள்ளயினரின் கெடுபிடிகள் தளர்த்தப்படவேண்டும். மீண்டும் எமது மக்கள் சொந்த இடங்களில் குடியேற வழிவகுக்கப்படவேண்டும்.

இப்பொழுது வடக்கு - கிழக்கில் திட்டமிட்டு பொருளாதாரம் முடக்கப்பட்டுள்ளது. தொழில் வாய்ப்புக்கள் இல்லை. சுதந்திரமாக விவசாயம் செய்யவும் முடியவில்லை.

எனவே, இரண்டு பெரும் அரசியல கட்சிகளும் குறுகிய அரசியல் நோக்கங்களைக் கைவிட்டு பாகுபாடுகளை மறந்து ஒன்றுபடவேண்டும். நாட்டில் சகல இனமக்களும் சுதந்திரமாகவும் சமாதானமாகவும் வாழும் ஒரு நிலையை ஏற்படுத்தவேண்டும். - என்று இரா.சம்பந்தன் எம்பி கூறினார். (ஐ)

நாட்டு மக்களின் அபிலாஷைகளை நிறைவுசெய்யும் அதிகாரப்பகிர்வு

சபையில் அமைச்சர் பீரிஸ் விளக்கம்

நாட்டு மக்களின் அபிலாஷைகளை நிறைவு செய்யும் வகையிலான அதிகாரப் பரவலாக்கமே இங்கு அறிமுகப்படுத்தப்படும். அரசும் புலிகளும் இணைந்து அமைக்கும் அரசியல் குழுவே இந்த அமைப்பு எப்படி இருக்கும் என்பதைப் பரிந்துரை செய்யும். இக்குழுவின் முடிவுகள் நாடாளுமன்றத்திற்கும் அறிவிக்கப்படும். ஆனால், இந்தியாவைப்போன்ற அல்லது தென்னாபிரிக்காவைப் பின்பற்றியதான ஓர் அதிகாரப் பரவலாக்கலாக இது அமையாது.

அரசியல் விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் நாடாளுமன்றத்தில் இவ்வாறு கூறினார்.

வரவு - செலவுத்திட்ட உரை மீதான இறுதிநாள் விவாதத்தில் உரையாற்றும்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். எதிர்க்கட்சி உறுப்பினர் றொனி டி மெல் சமாதானப் பேச்சுக்களின்பின் வடக்கு - கிழக்கில் நாடாளுமன்றத்தின் அங்கீகரம் இன்றி மூன்று உபகுழுக்கள் அமைக்கப்பட்டிருப்பதாகக் குறைகூறினார். இப்படியான நடைமுறை எந்தவொரு நாட்டிலும் இல்லை. அனுபவமிக்க உறுப்பினர் ஒன்றும் தெரியாதவர்போல் பேசுகிறார்.

இனப்பிரச்சினை தொடர்பாக அரசும் புலிகளும் செய்துகொண்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தம் உணர்வு பூர்வமானது. அது இன்று பெரும் பயனை அளித்துள்ளது.

புலிகள் தரப்பில் பேச்சுக்களில் கலந்துகொண்டவர்கள் இடைக்கால நிர்வாகத்தையே மறந்து சட்டங்களையே வலியுறுத்தவில்லை. நேரடியான அரசியல் தீர்வையே விரும்புகின்றனர்.

தாய்லாந்தில் நடைபெற்ற இரண்டு சுற்றுப் பேச்சுக்களுமே வெற்றிகரமாக நடைபெற்றன. பேச்சு ஆரம்பித்தவுடனேயே பயன்கிடைக்கவில்லை என்று அலட்டிக் கொள்வது விவேகமற்ற ஒரு செயல்.

இப்பேச்சின் பின்னரே அரசும் புலிகளும் இணைந்த மூன்று உபகுழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இப்பிரதேசத்தில் சமுகநிலையை ஏற்படுத்தி, அபிவிருத்தியை மேற்கொள்வதே இக்குழுக்களின் பொறுப்பு. இக்குழுவினரே தேவையான விடயங்

இரண்டு வாரங்களின் முன்னரே இக்குழுக்கள் அமைக்கப்பட்டன முகாமையிலும் ஓமந்தையிலும் இக்குழுவினர்கூடி மிகவும் பயனுள்ள தீர்வுகளை மேற்கொண்டுள்ளனர்.

இப்பொழுது அங்கே குண்டு வெடிப்புகள் இல்லை. தற்கொலைத் தாக்குதல்கள் இடம்பெறவில்லை. அங்கே பூரண அமைதி ஏற்பட்டுள்ளது. எனவே, இலங்கைக்கு வழங்கும் நிதி பயனுள்ள வகையில் உபயோகப்படுத்தப்படும் என்று ஜப்பானியக்குழு சிபாரிசு செய்துள்ளது.

இலங்கையின் சரித்திரத்தில் முதன்முறையாக ஜப்பானிய அரசு அதன் விசேட பிரதிநிதி ஒருவரை இங்கு அனுப்பி உட்கட்டமைப்பு அபிவிருத்தி விடயமாக ஆய்வுகளை மேற்கொண்டு உதவிகளையும் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சமாதானப் பேச்சுக்களின்பின் சர்வதேச உதவிகள் பெருமளவு கிடைத்துள்ளன. அவை பேச்சோடு நின்றுவிடவில்லை செயலிலும் காட்டியுள்ளன. ஆஸ்திரேலியா 90லட்சம் ஆஸ்திரேலிய டொலர்களை அபிவிருத்தி நிதியாக வழங்கியுள்ளது.

கனடாவுடன் கடந்த வாரம் அபிவிருத்தி தொடர்பான ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டது. ஜப்பானிய அரச அபிவிருத்தி நட்வடிக்கைகளுக்குத் தேவையான தொகையில் 45 வீதத்தை வழங்க முன்வந்துள்ளது. இதேபோன்று அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் சர்வதேச நாடுகளும உதவிவழங்க முன்வந்துள்ளன.

ஒஸ்லோவில் நடைபெறும் உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் பிரதமர் தலைமையிலான குழுவினர் பங்குபற்றுகின்றனர். அங்கு பெருந்தொகையான உதவிகள் கிடைக்கும். இக்கூட்டத்தில் சர்வதேச நாடுகளின் தலைவர்கள் நேரடியாகக் கலந்துகொள்கின்றனர். இவர்கள் பிரதமரின் சமாதானத்திட்டத்தை வரவேற்றுள்ளார்கள்.

ஒஸ்லோ மாநாட்டின்மூலம் கிடைக்கும் உதவிகள்மூலம் வடக்கு-கிழக்கு மாவட்டங்களில் மட்டுமல்லாமல் தென்பகுதிகளிலும் அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

வீதி, வீடமைப்பு, சுகாதாரம், தொழில்வாய்ப்பு, கைத்தொழில் அபி

அபிவிருத்தி செய்யப்படும். இவ்விடயங்கள் தொடர்பாகப் பிரதமர் வெள்ளை அறிக்கை ஒன்றை வெளியிடுவார்.

எவர் எத்தகைய விமர்சனம் செய்தாலும் நாம் எமது சமாதானத் திட்டத்தைக் கைவிடப்போவதில்லை. சமாதானத்தை முன்னெடுத்துச் செல்ல நாட்டு மக்கள் எமக்கு ஆணை வழங்கியுள்ளனர். யுத்தநிறுத்தம் முறிந்துவிடக்கூடாது. சமாதானம் நிலைத்து நிற்க வேண்டும். எனவே, இனப்பிரச்சினைத் தீர்வுக்கு அனைத்து மக்களும் ஏற்றுக்கொள்ளும் வகையில் ஐக்கிய இலங்கைக்குள் நிரந்தரமான ஒரு தீர்வை ஏற்படுத்துவோம் - என்று உறுதி அளித்தார் அமைச்சர் பேராசிரியர் பீரிஸ். (ஐ)

அரசு-புலிகள் பேச்சுக் குறித்து

லியன் பொக்ஸ் உடன்பாட்டின்படி எதிர்க்கட்சியினருக்கு விளக்கம்

அமைச்சர் பீரிஸ் கூறுகின்றார்

கொழும்பு,நவ.15

சமாதானப் பேச்சுக்கள் தொடர்பாக எதிர்க்கட்சியினருக்கு லியன் பொக்ஸ் உடன்படிக்கையின் அடிப்படையில் விளக்கப்படும் பேச்சு மேசையில் எடுக்கப்படும் தீர்மானங்கள் மற்றும் முன்னேற்றங்கள் குறித்து இந்த உடன்படிக்கைப்படி எதிர்க்கட்சியினருக்கும் ஜனாதிபதிக்கும் அவ்வப்போது தகவல் தெரிவிக்கப்படும்.

- இவ்வாறு கூறினார் அரசப் பேச்சாளர் அமைச்சர் ஜி.எல்.பீரிஸ்.

அரசுத் தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் கூட்டத்திலேயே அவர் இவ்வாறு கூறினர்.

ஜனாதிபதி சந்திரிகாவின் அரசு ஆட்சியில் இருந்தபோது அப்போதைய எதிர்க்கட்சித் தலைவரும் தற்போதைய பிரதமருமான ரணில் விக்கிரமசிங்கவுக்கும் ஜனாதிபதி சந்திரிகாவுக்கும் இடையில் பிரிட்டிஷ் பிரதி வெளிவிவகார அமைச்சர் லியம் பொக்ஸின் ஏற்பாட்டில் ஒப்பந்தம் ஒன்று செய்துகொள்ளப்பட்டது.

இதன்படி புலிகளோடு நடத்தும் சமாதானப் பேச்சுக்களுக்கு அரசுத் தரப்பில் ஸ்ரீ.ல.சு.கட்சி, ஐக்கிய தேசியக்கட்சியில் யார் இருந்தாலும் எதிர்த தரப்பு ஒத்துழைப்பு வழங்கவேண்டும். அதேபோன்றுதான் பேச்சுக்களின் விவரங்கள் மற்றும் முடிவுகளை அரசுத் தரப்பு எதிரணித் தலைவருக்கு விளக்கவேண்டும்.

இந்த உடன்பாட்டின்படியே தற்போதைய பேச்சு விவரங்கள் எதிரணித் தரப்புக்கும் அதன் தலைவரான ஜனாதிபதிக்கும் விளக்கப்படும் என்றார் அரசுத் தரப்புப் பேச்சாளரான பேராசிரியர் பீரிஸ்.

நாட்டு மக்களுக்கு ஜனாதிபதி அண்மையில் ஆற்றிய உரை குறித்துக் கேட்கப்பட்போதே அவர் இப்படிச சொன்னார்.

அந்தப் பேச்சில் தேசியக் குழுக்கள் சில அமைக்கப்படவேண்டும் என ஜனாதிபதி பிரேரித்திருப்பது குறித்து கருத்துக்கூற பேராசிரியர் பீரிஸ் விரும்பவில்லை.

சமாதானப் பேச்சுக்களின் மூலம் கிட்டும் இறுதித் தீர்வு குறித்து நாடாளுமன்றத்துக்கு மாத்திரமல்ல மக்களுக்கும் விளக்கப்படும்.தேவையானால் சர்வஜன வாக்கெடுப்புக்குச் செல்லவும் நாம் தயார்- என்றார் ஜி.எல்பீரிஸ். பேச்சுக்கள் நடைபெறுவது அரசுத் தரப்புக்கும புலிகளுக்கும் இடையில் தான் எதிர்க்கட்சிகளுக்கு உரிய தகவல்களை உரிய சந்தர்ப்பத்தில் தெரியப்படுத்துவது எமது கடமை அதை நாம் செய்வோம். இது விடயத்தில் பொ.ஐ.மு.அரசுக் காலத்தில் என்ன நடைமுறை பின்பற்றப்பட்டதோ அதை நாமும் செய்வோம் - என்றார் அவர்

அமைச்சரவை விஸ்தரிப்பு குறித்து அவரிடம் கேட்கப்பட்டது.

ஆனால், அது குறித்து தமக்கு எதுவும் தெரியாது எனக் கூறி சிக்கல்களைத் தவிர்த்துக்கொண்டார் பேராசிரியர் பீரிஸ் (ஐ)

சின்னஞ்சிறு விளம்பரம்

விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள NEC VERSA, Windows 98, லப்டொப் கொம்பியூட்டர், C.D ROM, Floppy disk drive and battery உடன் விற்பனைக்கு. தொடர்பு:-171, 2ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (10617)

கோப்பாய் சந்திக்கு மிக அருகில் சகல வசதிகளுடன் கூடிய 2பரப்புக் காணியுடன் அமைந்த வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு:- S.தயாபரன், கிராம அலுவலர், கோப்பாய் தெற்கு. (10469)

புதிய Panasonic VVSJ (200) டெக்(Deck) விற்பனைக்குண்டு தொடர்பு:- தி.செந்தூரன், 72/29, பனிக்கர்வளவு திருநெல்வேலி. T.P:- 0777 110093 கிழமை நாள்கள்:- எந்நேரமும் சனி,ஞாயிறு பி.ப3.00- மாலை 7வரை பார்வையிடலாம். (10619)

டாசோன் ஆண் நாய்க்குட்டி (2வயது) கூட்டுடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- 235/7 பருத்தித்துறைவீதி, ஆனைப்பந்தி. (10622)

கலர் மீன்கள், பல இனக் குருவிகள், மீன்தொட்டிகள், அதற்குரிய அழகுப் பொருள்கள் என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 55A, அரசடி றோட், தட்டாதெருச் சந்தி, யாழ்ப்பாணம். (10511)

94றீஜ தொடர் இலக்கமாகக் கொண்ட CD 125 TWIN ரக மோட்டார் சைக்கிளும் 52-ஐ தொடர் இலக்கமாகக் கொண்ட NISSAN கபறூப ரக வானும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: Pastor A.Antony, நல்ல சமாரியன் சேஜ், கோண்டாவில் கிழக்கு. T.P. 021-222 2488.(10987)

7 மாதங்கள் நிரம்பிய அல்சேன் பெண் நாயும் 16 மாதங்கள் நிரம்பிய கறுப்பு நரை பொம்மேரியன் ஆண் நாயும் விற்பனைக்குண்டு. தொடர்பு:- நடராசா, செல்வநாயகம் ஒழுங்கை, கோண்டாவில் கிழக்கு பலாலி றோட் சந்திப் பிள்ளையார் கோயில் அருகில். (10638)

வளர்ப்பு மீன்கள், மீன்தொட்டி உபகரணங்கள், Air Pump என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (10639)

VAN விற்பனைக்கு

சகல ஆவணங்களுடன் நல்ல நிலையிலுள்ள 50சிறி தொடர் இலக்கமுடைய L.3 Hundred Van (டீசல்), 4சிறி ஒஸ்ரிக் கேம்பிறிஜ் கார் (பீனா) விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ராஜீவ், ஆனைக்கோட்டை சந்தி. T.P. 3529, 2867. (10993)

காணி விற்பனைக்கு

17/43, 17/44, நல்லூர் வடக்கு நித்தியானந்தம் வீதி, பண்டாரக்குளம் மேற்கு ஒழுங்கையில் கிணறு, கழிவறை, வாகனத்தரிப்பிடத்துடன் கூடிய சேதமடைந்த சிறிய வீட்டுடன் கூடிய ஒரு பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு:-க.தியாகராசா, 346, கோவில் வீதி, நல்லூர். (10996)

சாவகச்சேரி தபாற்கந்தோர் வீதியில் 10 பரப்புக் காணி நல்ல தண்ணீர்க் கிணற்றுடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: த.வேலாயுதம் சடத்தரணி, சாவகச்சேரி. திங்கட்கிழமைகளில் தொடர்புகொள்ளவும். (10632)

மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள பெண்களுக்கேற்ற SUZUKI-50 [AUTOMATIC GEAR WITH SELF STARTER MODEL], VESPA [ITALY] மோட்டார்சைக்கிள்கள் விற்பனைக்குண்டு தொடர்பு:- க.இராஜரட்ணம், 84/3, தபாற்கந்தோர் ஒழுங்கை, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். (10601)

நல்ல நிலையிலுள்ள News Mat Yamaha -50, Honda Charly மோட்டார் சைக்கிள்கள், பெண்களுக்கான புதிய ஹுமலா துவிச்சக்கரவண்டி என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு: செல்வா, 18, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். T.P.24229, 3252. (10496)

வீடற்றவன்

"வீடற்றவன்" நாவலின் விளக்கமும் விமர்சனமும் எல்லாவகை இலக்கியங்களும் படைத்த தாராளியூர் ந.சுந்தரம்பிள்ளை எழுதியது இந்த நூலைப்படித்தால் வீடற்றவனில் வரக்கூடிய எல்லா வினாக்களுக்கும் விடை எழுதலாம். ரூபா-25/= (10992)

இறைச்சிக்கோழி விற்பனைக்கு

இறைச்சிக்கோழி புறோயிலர் 2½, 3Kg அளவு நிறையுடையவை இன்றும், நாளை ஞாயிற்றுக்கிழமையும் உடன் விற்பனைக்குண்டு விலை 1Kg - 100/- மட்டுமே. சுத்தம் செய்யப்படமாட்டாது. தொடர்பு: இல.141, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.(10634)

Prima, Broiler மற்றும் இறைச்சிக்கோழிகள் சுகாதார முறைப்படி சுத்தம்செய்து உங்களுக்குத் தேவையான நிறைகளில் நியாயமான விலையில் தினமும் பெற்றுக்கொள்ளலாம். 19 முருகேசர், ஒழுங்கை முத்திரைச் சந்தையடி, நல்லூர். (10640)

புறோயிலர் இறைச்சிக் கோழிகள் விற்பனைக்கு உண்டு. 1Kg 100/, சுத்தம் செய்யப்பட்ட இறைச்சி 1Kg 180/- சனி, ஞாயிறு தினங்களில் சுத்தம் செய்து பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு இல.85, செம்மணி வீதி நல்லூர். (கல்விக்கந்தோருக்கு அருகில்) (10648)

புறொயிலர் இறைச்சிக் கோழிகள் விற்பனைக்கு உண்டு. 1Kg 100/, சுத்தம் செய்யப்பட்டது 1Kg 180/- வேண்டிய நிறைகளில் பெற்றுக கொள்ளலாம். தொடர்பு: சிவா, பருத்தித்துறை வீதி (வட்டக்குளம் முன்பாக), கட்டப்பிராய். (10646)

வீடு விற்பனைக்கு

கொழும்புத்துறையில் நாற்புறமும் மதிலோடு கூடிய நவீன வசதிகள் கொண்ட வீடு விற்பனைக்குண்டு தொடர்பு:- எஸ்.ஏ.தர்மலிங்கம், இல. 344, கண்டிவீதி புங்கன்குளம்சந்தி, யாழ்ப்பாணம். (10985)

மானிப்பாய் மத்தியசந்தைக்கு முன் ஒழுங்கையில் 3 1/4 பரப்புக் காணி, வீடு கிணற்றுடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ஆ.சிவராஜா, கூழாவடி தபாற்கந்தோருக்கு அருகில், 4ஆம் கட்டை, ஆனைக்கோட்டை. (10328)

கோழிநோய் தடுப்பு மருந்து

Gampura, Raniket மருந்துகள ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் காலை 8 மணிக்கும் CRD சளி மருந்து புதன்கிழமை காலையும் வழங்கப்படும். இல.19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (10547)

தவறிவிட்டது

மாவத்தை, சுதுமலை தெற்கு, மானிப்பாயைச் சேர்ந்த லோகேஸ்வரன் செந்தூரன் என்பவரின் தே.அ.அ.இல. (810793538V), வி.அ.அ. இல. (0905003214) என்பன தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேலுள்ள முகவரியில் ஒப்படைக்கவும். (10650)

கண்டெடுக்கப்பட்டுள்ளது

பிறவுண் வீதியில் 04-11-2002 புதிய லுமாலா பெண்கள் துவிச்சக்கரவண்டி கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர் ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளவும். தொடர்பு: சிறி லஷ்மி நகை மாளிகை, 9/1, ஆடிய பாதம் வீதி, திருநெல்வேலி. (10635)

பை மாறிவிட்டது

இல.586, வரணன், அச்சுவேலியைச் சேர்ந்த தம்பிராசா பாக்கியம் என்பவரது பையொன்று வவுனியாவிலிருந்து வரும்போது வட்டுக்கோட்டையைச் சேர்ந்த தியாகராசா கமலா தேவியிடம் மாறிவந்துவிட்டது. எனவே, வட்டுக்கோட்டை மூளாய் வீதியுள்ள லீலா ஸ்ரோர்ஸ் அரியபுத்திரனிடம் வந்து பையை மாற்றிக்கொள்ளவும். (10636)

வீடு வாடகைக்குத் தேவை

யாழ்.மாநகர சபை, நல்லூர் பிரதேச சபை எல்லைக்குள் கண்ணியமான தொழில்செய்யும் குடும்பம் ஒன்றுக்கு வீடு தேவை. 1000/-முதல் 2000/- வரை வாடகை செலுத்தப்படும். விளம்பர இல. 1698, C/o உதயன். (10633)

யாழ்.மாநகரசபை எல்லைக்குள் 2அறை கொண்ட வீடு அல்லது அனெக்ஸ் அலுவலக பாவனைக்குத் தேவை தெருவோர வீடு விரும்பத்தக்கது. கவர்ச்சிகரமான வாடகை கொடுக்கப்படும். தெடர்பு:- T.P:-021-222 2554 (10608)

யாழ்.மாநகர சபை எல்லைக்குள் 4பேர் கொண்ட குடும்பத்துக்கு வீடு வாடைக்குத் தேவை. தகுந்த முற்பணம் வழங்கப்படும். தொடர்பு: நா.சி.சங்கர், 72/6, பிரம்படி வீதி, கொக்குவில். (10637)

கடை தேவை

யாழ்.நகர் ஸ்ரான்லி வீதியில் ஒருகடை தேவை. வாடகைக்கோ அல்லது விற்பனைக்கோ இருப்பின் தொடர்புகொள்ளவும். கேதீஸ். T.P. 222 2901. (10548)

வகுப்புகள்

O/L Paper Class English, Maths 10 நாள்களுக்குள். இது வரையும் சித்தியடையாதவர்களுக்கும், A,B,C பெறுபேறடையவும் தொடர்ந்து 15 வருடங்கள் O/L பரீட்சை விடைத்தாள் திருத்திய அனுபவமுள்ள ஆசிரியரால் கற்பிக்கப்படும். இல.85, சிவன் கோயிலடி (சிவன் கோயில் பின்புறம்), திருநெல்வேலி. (10564)

கரோல் நிகழ்ச்சி

நவீட் பாடசாலையின் கிறிஸ்மஸ கரோல் நிகழ்ச்சிகள் இன்று சனிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு சென்.ஜோன்ஸ் கல்லூரி பீற்றோ மண்டபத்தில் நடைபெறவுள்ளன. (எ-ரி)

31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அன்னையின் மடியில்
19 - 03 - 1978

இறைவனின் அடியில்
17 - 10 - 2002

செல்வி விஜி கதிரமலை (வள்ளி)

எமது பாசத்தின் உறைவிடமே!
நேசத்தின் ஒளிவிளக்கே!
குடும்பத்தின் குலவிளக்கே
விஜி! உன் பிரிவால் எம்மனம்
ஆறுதலில்லையம்மா; அமைதியில்லையம்மா!
உன் நினைவுடன் உலவிடும் நாம்

எமது அன்பு மகள் 17.10.2002இல் அமரத்துவம் அடைந்த செய்திகேட்டு நேரில்வந்து அஞ்சலி செலுத்தியோருக்கும் ஆறுதல் கூறியோர்களுக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்வதோடு, இன்று (16.11.2002) சனிக்கிழமை நடைபெறும் வீட்டுக்கிருத்தியத்திலும், மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நிரந்தர முகவரி: கைதடி நாவற்குழி தெற்கு, கைதடி.
தற்காலிக முகவரி: நவாலி கிழக்கு, மானிப்பாய். (10645)
தாய், தந்தை, சகோதரர்கள்.

மாபெரும் இசை நிகழ்ச்சி

எதிர்வரும் புதுவருடப் பிறப்பன்று (01.01.2003) யாழ். மாவட்டத்தில் முன்னணி கலைஞர்களை ஒன்றிணைத்து நடத்தப்படவுள்ள இசை நிகழ்ச்சியில் இலைமறைகாயாக இருக்கும் பாடகர்கள், வாத்தியக் கலைஞர்கள், அறிவிப்பாளர்களை வெளிக்கொணரும் முகமாக நடத்தப்படவுள்ள இந்நிகழ்ச்சியில் கலந்துகொள்ள விரும்பும் ஆண், பெண் இருபாலாரையும் தங்கள் பெயர், முகவரி அடங்கிய விண்ணப்பங்களையும் நீங்கள் பாடவிரும்பும் பாடல்களையும் எதிர்வரும் 30.11.2002 இற்கு முன்பாக கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

முக்கிய குறிப்பு :- இசைக்குழுக்களில் பாடுகின்ற கலைஞர்கள் இந்நிகழ்ச்சியில் பங்குபற்ற முடியாது.

விளம்பர அன்பளிப்பு:
கௌரி அழகுமாடம்
இல.316, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம். (10612)

முகவரி:
சி.வரதன்
முத்தநயினார் கோவிலடி,
ஆனைக்கோட்டை.

சமாதான நீதிவான்களுக்குப் பாராட்டுவிழா

சமீபத்தில் சமாதான நீதிவான்களாகப் பதவிப் பிரமாணம் செய்துகொண்ட

திரு.எஸ்.பத்மராஜா B.A. - கல்வி டிப்ளோமா ஆசிரியர், வைத்தீஸ்வராக் கல்லூரி.
திரு.கு.அருள்நாயகம் - களஞ்சியப் பொறுப்பாளர் - நல்லூர் பலநோக்கு கூ.சங்கம்.
திரு.எஸ்.இரத்தினசபாபதி - இளைப்பாறிய பொலீஸ் உத்தியோகத்தர்.

ஆகியோரைக் கௌரவிக்கும் பாராட்டுவிழா
நாளை (17.11.2002) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.00மணிக்கு
திருநெல்வேலி கிழக்கு,
வாலையம்மன் சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெறும்.

தலைவர் :- லயன் வல்லிபுரம் பரமசிவம் ஜே.பி.
பிரதம விருந்தினர் :- கலாநிதி எஸ்.சிவலிங்கராஜா
யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறை
முதுநிலை விரிவுரையாளர்.
கௌரவ விருந்தினர் :- திரு. பெ.கனகசபாபதி
தலைவர், நல்லூர் பலநோக்கு கூ.சங்கம்.

கௌரவிக்கப்படுவோர் சார்ந்த அமைப்புக்களின் உறுப்பினர்களும், நண்பர்களும், ஆர்வலர்களும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

வாலையம்மன் சனசமூக நிலையம்,
இராமலிங்கம் வீதி,
திருநெல்வேலி கிழக்கு. (10593)

செ.செல்வகுமாரன்
-செயலாளர்-

ANTENNA

"We bring the world to your home"

செய்மதி தொலைக்காட்சித் துறையில் 15 வருட அனுபவமிக்க Sats-Tech நிறுவனம் தற்போது உயர் தொழில்நுட்பத்துடன் கூடிய DISH Antenna களை உங்கள் கைக்கடக்கமான விலையில் விற்பனை செய்கிறது.

UN beatable Priees

8' டிஸ்அன்ரனா	Rs. 6999/-இல் இருந்து
10' டிஸ்அன்ரனா	Rs. 9999/-இல் இருந்து
8' டிஜிரல் சிஸ்டம்	Rs. 21999/-இல் இருந்து
10' டிஜிரல் சிஸ்டம்	Rs. 25999/-இல் இருந்து
10' டிஜிரல் மோட்டார் சிஸ்டம்	Rs. 39999/-இல் இருந்து

மற்றும் அனைத்து உபகரணங்களும் உங்களுக்கேற்ற விலையில்.

☆ "Sats - Tech... is The Trusted name in this field"
☆ "Quality & Reliability is our motto

மேலதிக விவரங்களுக்கு:
SATS - TECH ENGINEERS
M/s National Video centre
182, k.k.s. Road (Near Kulapitty Church)
Kokuvil - Phone: 077 7710785
(10644)

மரண அறிவித்தல்

செல்லையா தம்பிராசா

கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் நீர்வேலியை வதிவிடமாகவும் கொண்ட செல்லையா தம்பிராசா அவர்கள் (13.11.2002) புதன்கிழமை காலமானார்.

இவர் காலஞ்சென்றவர்களான செல்லையா-சின்னம்மா தம்பதியரின் மூன்றாவது புதல்வரும் இராசாங்கம் அவர்களின் அன்புக் கணவருமாகிய திருமதி பொன்னம்பலம் மனோன்மணி, திருமதி முத்துத்தம்பி தங்கரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் சாந்தமலர் (கனடா), வர்ணகுமார் (கனடா), உதயகுமார் (கனடா), ஜெயக்குமார் (கனடா), காலஞ்சென்ற இந்திரகுமார் மற்றும் சுகந்திமலர் ஆகியோரின் அன்புத் தந்தையும் குணசிங்கம் (கனடா), ரவிக்குமார் (கனடா), சத்தியபாமா, சகுந்தலாதேவி, பகீரதி ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.11.2002) சனிக்கிழமை நீர்வேலியிலுள்ள அன்னாரது இல்லத்தில் பிற்பகல் 11.00 மணிக்கு நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
த.இராசாங்கம் (மனைவி)
த.சுகந்திமலர் (மகள்)
ந.ஜெயக்குமார் (கனடா)

நீர்வேலி தெற்கு,
நீர்வேலி. (10651)

உள்ளூர் கலைஞர்கள்

எஸ். சிதம்பரநாதன்

க. பரமேஸ்வரி

சி. அகிலன்

ரி. என். பாலமுரளி

எஸ். தர்ஷனன்

ரி. றொபேட்

கொழும்பு கம்பன் கழகம் நடத்தும் இசைவேள்வி

யாழ்ப்பாணம்,நவ.16

கொழும்பு கம்பன் கழகம் வருடந்தோறும் நடத்திவரும் 'ஸ்ரீராமநாம கானாமிர்தம்' இசைவேள்வி நேற்று வெள்ளிக்கிழமை வெள்ளவத்தை இராமகிருஷ்ணமிஷன் மண்டபத்தில் ஆரம்பமாகியது.

நேற்று ஆரம்பமான இந்த விழா எதிர்வரும் 20ஆம் திகதி புதன் கிழமை வரை தினமும் மாலை 5 மணிமுதல் நடைபெறும்.

உயர் நீதிமன்ற நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் தலைமையில் நடை பெற்ற முதலாம் நாள் நிகழ்வில் உள்ளூர்க் கலைஞர் சி.அகிலனின் இசையரங்கும் தமிழகக் கலைஞர் நெய்வேலி சந்தான கோபாலனின் சிறப்பு இசையரங்கும் நடைபெற்றன.

இரண்டாம் நாள் நிகழ்வு இன்று சனிக்கிழமை கிழக்கு பல்கலைக் கழக சுவாமி விபுலானந்தா நுண்கலைப் பிரிவு விரிவுரையாளர் ஏ.கே. கருணாகரன் தலைமையில் நடைபெறும். உள்ளூர்க் கலைஞர் ரி.என். பாலமுரளியின் வயலின் சோலோவும் தமிழகக்கலைஞர் ஒ.எஸ். தியாகராஜன் வழங்கும் சிறப்பு இசையரங்கும் இடம்பெறும்.

நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் மூன்றாம்நாள் இசைவேள்வி இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் க.பரமேஸ் வரன் தலைமையில் நடைபெறும். உள்ளூர்க் கலைஞர் செல்வி பர மேஸ்வரி கணேசனின் இசையரங்கு, தமிழகக்கலைஞர் திருமதி பூஷணி கல்யாணராமனின் சிறப்பு இசையரங்கு என்பன சிறப்பு நிகழ்வு களாக இடம்பெறும்.

நான்காம் நாள் நிகழ்வு நாளைமறுதினம் திங்கட்கிழமை எழுத்தாளர் நா.சோமகாந்தன் தலைமையில் ஆரம்பமாகும். இந்த நிகழ்வில் உள் ளூர்க் கலைஞர்களான ஸ்ரீ.தர்சனனின் இசையரங்கு, எஸ்.சிதம்பரநாதன், என்.கவிதாஸ் குழுவினர் வழங்கும் நாத இசையரங்கு என்பன இடம் பெறும்.

ஐந்தாம் நான் நிகழ்வு எதிர்வரும் 19ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கொழும்பு ஸ்ரீ பொன்னம்பலவானேஸ்வரர் ஆலய அறங்காவலர் டி.எம். சுவாமிநாதன் தலைமையில் நடைபெறும். இந்த இசைவேள்வியில் உள்ளூர்க் கலைஞர் ரி.றொபேட் குழுவினர் வழங்கும் இசையரங்கும் தமிழகக்கலைஞர் பம்பாய் ஜெயஸ்ரீ ராம்நாத் குழுவினரின் சிறப்பு இசையரங்கும் இடம்பெறும்.

இறுதிநாள் நிகழ்வு எதிர்வரும் 20ஆம் திகதி புதன்கிழமை வெள்ள வத்தை ஸ்ரீமயூராபதி தேவஸ்தான அறங்காவலர் பொ.வல்லிபுரம் தலைமையில் நடைபெறும். நிகழ்வின் ஆரம்பத்தில் அமரர் கலை மாமணி கே.கணேசபிள்ளையின் உருவப்படத திறப்பு விழாவும் அஞ்சலி உரையும் இடம்பெறும்.

தொடர்ந்து நாதஸ்வர வித்துவான்களான ஆர்.சுந்தரமூர்த்தி, எம்.பி. பாலகிருஷ்ணன் ஆகியோரின் நாத இசையும் தமிழகக்கலைஞர் மதுரை ரி.என்.சேஷகோபாலன் குழுவினரின் சிறப்பு இசையரங்கும் இடம்பெறும்.(எ)

தமிழக கலைஞர்கள்

பூஷணி கல்யாணஇராமன்

ஒ. எஸ். தியாகராஜன்

பம்பாய் ஜெயஸ்ரீ ராம்நாத்

நெய்வேலி ஆர். சந்தானகோபாலன்

மதுரை ரி. என். சேஷகோபாலன்

வலிகாமம் கல்விவலய

கணித - விஞ்ஞான போட்டி முடிவுகள்

வலிகாமம் கல்வி வலயத்துக் குட்பட்ட பாடசாலை மாணவர்களி டையே கணித - விஞ்ஞானம் தொடர் பான அறிவுப் போட்டிகள் அண்மை யில் நடத்தப்பட்டன.

தரம் 6 தொடக்கம் தரம் 11 வரை யிலான வகுப்பு மாணவரிடையே இப் போட்டிகள் நடத்தப்பட்டன. கோட்ட மட்டத்தில் நடத்தப்பட்ட போட்டிக ளில் இருந்து தெரிவுசெய்யப்பட்ட வர்கள் வலய மட்டப் போட்டிகளில் பங்குபற்றினர். வகுப்பு ரீதியாக முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாண வர்கள் விவரம் வருமாறு:-

தரம் 6

பா.துஷ்யந்தன் - மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை, க.கோகுலன் - மகாஜனக் கல்லூரி, வி.கோகுலன் - யூனியன் கல்லூரி,

தரம் 7

பா.நிதுஜன் - மகாஜனக் கல்லூரி, இ.தனுசன்-அருணோதயாக் கல் லூரி, ரி.மிதிலா - யாழ்ப்பாணக் கல் லூரி,

தரம் 8

ந.சாகினி - இளவாலை கன்னியர் மடம் ம.வி., வி.விநோதினி - சுதுமலை சிந்மயபாரதி வித்தி., பா.பாலவரதன்- வசாவிளான் ம.ம.வி.

தரம் 9

இ.ஜெகபரன் - மல்லாகம் ம.வி., கோ.செல்வபவன் - பண்ணாகம் மெய் கண்டான் ம.வி., ஆர்.அரவிந்தன்-விக் டோரியாக் கல்லூரி.

தரம் 10

பிரகாச மகா வித்தியாலயம், ச.சர்வகுமார் - மல்லாகம் ம.வி., என். மகிந்தகுமார் - யாழ்ப்பாணக் கல்லூரி.

தரம்11

ச.தாசன் - பண்ணாகம் மெய்கண் டான் ம.வி., மு.குகலிங்கம்-பண்ணா கம் மெய்கண்டான் ம.வி., நா.பஞ்ச கரன் - யாழ்ப்பாணக் கல்லூரி.

(எ-152)

மறைக்கல்வி பரீட்சை

இலங்கை தேசிய கத்தோலிக்க மறைக்கல்வி நிலையத்தால் மறைக் கல்வி ஆசிரியர்களுக்காக வரு டாந்தோறும் நடத்தப்படும் தேசிய கத்தோலிக்க மறைக்கல்விப் பரீட்சை எதிர்வரும் 23ஆம் திகதி சனிக்கிழமை இலங்கை பூராகவும் அமைந்துள்ள மறைக்கல்வி நிலையங்களில் நடை பெறவுள்ளது.

யாழ்ப்பாணப் பகுதியில் இருந்து இப்பரீட்சைக்குத் தோற்ற உள்ளவர் களுக்கான முன்னோடிப் பரீட்சை இன்று சனிக்கிழமை யாழ்.மறைக் கல்வி நிலையத்தில் நடைபெறவுள் ளது என யாழ்.மறைக் கல்வி நிலை யம் அறிவித்துள்ளது. (எ-51)

நாவாந்துறையில் தண்ணீர்த்தாங்கி அமைப்பு

நாவாந்துறை சூரிய வெளியில் வசிக்கும் மக்களின் குடிதண்ணர்த் தேவையைப பூர்த்திசெய்யும் நோக்கு டன் தணணீர்த் தாங்கியொன்று யாழ். மாநகரசபையால் அமைக்கப்பட்டுள்ளது.

சுமார் ஆயிரம் லீற்றர் குடிதண்ணி ரைச் சேகரித்து வைக்கக்கூடிய இத் தண்ணீர்த்தாங்கி அமைப்பதற்கான நிதியை, நாவாந்துறைக்கான யாழ். மாநகரசபை உறுப்பினர் அ.யேசு தாசன் தனது ஒதுக்கீட்டு நிதியில் இருந்து வழங்கியுள்ளார். (எ-51)

யாழ். பொது நூலகம் ஜனவரியில் திறப்பு!

அமைச்சர் ஜயலத் அறிவிப்பு

கொழும்பு,நவ.16

புனரமைக்கப்பட்ட யாழ்.பொது நூலகம் அடுத்த வருடம் ஜனவரி மாதம் வைபவ ரீதியாகத் திறந்து வைக் கப்படும் என புனர்வாழ்வு, அகதிகள் மீள்குடியேற்ற அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன நேற்றுமுன்தினம் அவரது அமைச்சில் நடந்த பத்தி ரிகையாளர் மாநாட்டில் தெரிவித் தார்.

யாழ்.பொது நூலகம் வடக்கில் வாழும் மக்களின் சொத்து மட்டு மல்ல; அது இந்த நாட்டின் தேசிய சொத்தாகும். தென்கிழக்காசிய அறி ஞர்கள் நேசிக்கும் சொத்தாகும் என வும் அமைச்சர் சொன்னார்.

தமிழர்களையும் சிங்களவர்களை யும் பிரித்து, அவர்களை நேர் விரோதி களாகக் கருதவைத்த நடவடிக்கை களில் இந்த நூலக எரிப்புச் சம்ப வம் முக்கியமானது.

சிங்களவர்கள் கொடூரமானவர் கள் என்று தமிழர்களைச் சிந்திக்க வைத்ததும் இந்தச் சம்பவம்தான். இந்த நூலகத்தை எப்படியாவது கட்டியெழுப்பவேண்டும் என்று முன் னைய அரசும் விரும்பியது. அப்போது இருந்த அமைச்சர் கதிர்காமர் 8 கோடி 80 லட்சம் ரூபா ஒதுக்கி நூல கத்தைக் கட்டியெழுப்பும் பணியில் இறங்கினார்.

அதைத் தொடர்ந்து பதவிக்கு வந்த எமது அரசு உடனடியாகப் பணி யில் இறங்கமுடியாத நிலையில் இருந்தது. நாம் ஆட்சியைப் பொறுப் பேற்றபோது திறைசேரி காலியாக இருந்ததே அதற்குக் காரணம்.

தற்போது மீண்டும் நூலகப் புனர மைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு அவை பூர்த்தியாகும் தறுவாயில் உள் ளன என்று கட்டடப்பணியில் ஈடுபட் டிருக்கும் பொறியியலாளர் திருச்செல் வம் தெரிவித்திருக்கிறார். இதுவரை யில் 9 கோடி 80 லட்சம் ரூபா நிதி கட்டடத் திருத்தப் பணிக்கு செலவு செய்யப்பட்டிருக்கிறது.

நூலகப்பணி பூர்த்தியடைய 12 கோடி ரூபா தேவைப்படும் எனத் தெரி விக்கப்பட்டுள்ளது. கடந்த வாரம் லொறி ஒன்றில் ஒருதொகுதி நூல் கள் யாழ். நூலகத்துக்கு அனுப்பப் பட்டுள்ளன. மேலும் புத்தகங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன. நூல் களை அன்பளிப்புச் செய்யவிரும்பு பவர்கள் அவற்றை எமது அமைச்சுக் காரியாலயத்துக்கு வழங்கலாம்.

வெளிநாட்டுத் தூதரகங்கள் மற் றும் நிறுவனங்கள் பெருந்தொகை யான நூல்களைத் தந்துதவுகின்றன. அண்மையில் 'யுனெஸ்கோ போர்ட் பவுண்டேஷன்' 2 கோடி ரூபா பெறு மதியான நவீன உபகரணங்களையும் பெறுமதி வாய்ந்த ஜெனரேட்டர் ஒன் றையும் யாழ்.நூலகத்திற்கு அன்ப ளிப்புச் செய்துள்ளது.

எனவே, நூலகத்தின் அனைத்து வேலைகளும் இந்த வருட இறுதிக் குள் பூர்த்தியடையும். அடுத்த வரு டம் ஜனவரி மாதம் அது திறந்து வைக்கப்படும் - என அமைச்சர் தனது உரையில் தெரிவித்தார்.

(ஐ)

நாட்டுமக்கள் எதிர்பார்ப்பது சமாதானத்தையே; வேறுபாடுகளை மறந்து அதற்காக இணையுங்கள்!

அரசியல் கட்சிகள் அனைத்திற்கும் றொனி டி மெல் அழைப்பு

ஐக்கிய இலங்கைக்குள் சமஷ்டி முறையிலோ அல்லது சுயாட்சி வழங்கியோ இனப் பிரச்சினைக்குத் தீவுகாணப்படுமானால் நான் அதற்கு எனது மனப்பூர்வமான ஆதரவை வழங்குவேன். இன்று நாட்டு மக்கள் எதிர்பார்ப்பது சமாதானத்தையே. அந்த சமாதானத்தை ஏற்படுத்த இப் பொழுது அரியதொரு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. இதைத் தவற விட்டுவிடக்கூடாது. அரசியல் கட்சி கள் தனிப்பட்ட கருத்து வேறுபாடு களை விட்டு இவ்விடயத்தில் பூரண ஆதரவை வழங்கவேண்டும் என பொதுஜன ஐக்கிய முன்னணி உறுப் பினரான றொனி டி மெல் நாடாளு மன்றத்தில் கோரிக்கை விடுத்தார்.

வரவு - செலவுத் திட்ட உரை மீதான இறுதிநாள் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இப்படிக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது:-

சாம்பல் மேட்டில் இருந்து இலங் கையை மீட்டெடுக்கவேண்டும். சீர ழிந்துபோன நட்புறவும் பொருளாதார சீரழிவுகளும் கட்டி எழுப்பப்படவேண் டும்.

இன்று எமது கட்சிகள் மத்தி யில் கூடிய அரசியல் முரண்பாடுக ளும் குறைந்த மனப் பக்குவமும்தான் காணப்படுகின்றன. இந்தநிலை மாற வேண்டும். கூடுதலான மனப்பக்குவ மும் குறைந்த அரசியல் முரண்பாடு களும் இருக்கவேண்டும். தேர்தல் முறை மாற்றியமைக்கப்பட வேண்டும். மக்கள் சுயாதீனமாகச் செயற்படும் நிலை உருவாக்கப்படவேண்டும்.

கட்சிகள் இன்று வரும் நாளை அழிந்துபோகும். தலைவர்கள் வரு வார்கள் போவார்கள். ஜனாதிபதியும் பிரதமரும் மாறலாம். ஆனால், நாடு நிலைத்து நிற்கும். எனவே, நாட்டின் பொருளாதாரமும் அபிவிருத்தியும் பாது காக்கப்படல்வேண்டும். அதற்கு நாட்டுமக்கள் மத்தியில் சமாதானம் அவசியம். எனவே இந்தச் சந்தர்ப் பத்தை தவறவிடக்கூடாது.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தொடர்பாக முன்னைய ஆட்சியின்போது இரண்டு பிரதான கட்சிகளும் இணைந்து தெரிவுக்குழு ஒன்றை அமைத்தன. அதை விட்ட இடத்திலிருந்து ஏன் தொடரக்கூடாது.

புதிய அரசியல் கலாசாரம் ஒன்று உருவாக்கப்பட வேண்டும்.

இப்பொழுது வடக்கு - கிழக்கு பிரதேசத்தில் மூன்று உப குழுக் கள் நியமிக்கப்பட்டு செயற்படுகின் றன. இவைபற்றி நாடாளுமன்றத் திற்கு அறிவிக்கப்படவில்லை. இந்தச் சபைக்கும் அவற்றிற்கும் தொடர் பில்லை. என்ன செய்கின்றனர் என் பதும் புரியவில்லை.

இவ்வாறு செயற்படுவது எந்த விதமான தொடர்புகளும் அற்ற நடுத் தர அரசை புலிகள் அமைத்துக் கொள்வதற்கு வழிவகுக்கும். எனவே, எல்லா விடயங்களும் இந்தச் சபைக்கு அறிவிக்கப்பட வேண்டும்.

எந்தவொரு தீவும் இந்தச் சபைக்கு வெளியில் தீர்மானிக்கப்படக்கூடாது.

வரவு - செலவுத் திட்டம் பற்றி நாம் ஒன்றும் அலட்டிக் கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. இது நிதி அமைச்சரின் தன்னடக்கமான ஒரு வரவு - செலவுத் திட்டம். படிப் படியாகவே வளர்ச்சியைக் காட்டும்.

சமாதானத் திட்டத்தினால் எந்த வொரு பொருளாதார அபிவிருத்தி யும் ஏற்படவில்லை. ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்கு வந்தால் வெளி நாட்டு முதலீட்டாளர்கள் கோடிகோடி யாக இங்குவந்து கொட்டுவார்கள் என்று பெருமையடித்துக்கொண்டனர்.

ஆனால், நிலைமை தலைகீழா கவே இருக்கின்றது. கடந்த - ஒரு வருடத்தில் 160 வெளிநாட்டு முத லீட்டு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப் பட்டுள்ளன. ஆனால், இதுவரை ஆறு திட்டங்கள் மட்டுமே ஆரம்பிக்கப்பட் டுள்ளன. ஏனைய முதலீட்டாளர்கள் ஏன் வரவில்லை? ஏன் பின்னடிக்கி றார்கள்?

எமது நாட்டின் பிரதான தேசிய ஏற்றுமதிகளான தேயிலை உற்பத்தி மற்றும் கைத்தொழில் வளர்ச்சி என்ப வற்றில் பெரும் வீழ்ச்சி காணப்படு கின்றது. ஆடைத் தொழில் வீழ்ச்சிய டைந்துவிட்டது. பல தொழிற்சாலை கள் மூடப்பட்டுள்ளன. வேலையில் லாத் திண்டாட்டம் அதிகரித்துள்ளது.

நிதி அமைச்சர் சர்வதேச நாணய நிதியத்தை திருப்திப்படும் வகை யில் மட்டுமே வரவு - செலவுத் திட் டத்தைத் தயாரித்துள்ளார். அது பொதுமக்களுக்கு பெரும் ஏமாற்றத் தையே கொடுத்துள்ளது - என்றார் றொனி டி மெல். (ஐ)

யாழ். மாவட்ட விவசாய பயிற்சி பாடசாலையில் அண்மையில் நடை பெற்ற சிறந்த விவசாயிகளைக் கௌரவிக்கும் நிகழ்வில் விவசாயி ஒரு வருக்கு யாழ். அரச அதிபர் செ.பத்மநாதன் பரிசில் வழங்குவதைப் படத்தில் காணலாம்.

வேலணை பிரதேச செயலர் எஸ்.இரத்தினம், கால்நடை அபிவி ருத்தி உதவிப் பணிப்பாளர் பொ.இராமநாதன், உதவி விவசாய பணிப் பாளர் (விரிவாக்கம்) ச.சின்னத்துரை, கமநல அபிவிருத்தித் திணைக் கள உதவி ஆணையாளர் க.சுந்தரேசன் ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர். (எ-10)

புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு

கொழும்பு,நவ.16

புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்கு எதி ராகத் தாக்கல் செய்யப்பட்ட மனுக் களின் விசாரணை நேற்றுமுன்தினம் நடைபெறவிருந்தது. எனினும், நீதி யரசர் விஜயரட்ண நீதிமன்றத்துக்கு சமுகமளிக்கத் தவறியதால் விசா ரணை எதிர்வரும் ஜனவரி மாதம் 27ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட் டது.

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக் கும் இடையே செய்துகொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு எதிராக சிஹல உறுமய, மக்கள் விடுதலை முன்னணி ஆகியன தாக்கல் செய்த மனு, மூன்று நீதியரசர்கள் முன்னி லையில் விசாரணை செய்யப்பட்டு வருகின்றது. மேன்முறையீட்டு நீதி மன்ற நீதியரசர்கள் ஷிராணி திலக வர்த்தன, சிறிபவன, விஜயரட்ண ஆகி யோர் இந்த மனுக்களை விசாரணை செய்கின்றனர்.

இந்த மனுவில் எதிர் மனுதாரர் களாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன், சட்டமா அதிபர் ஆகியோர் குறிப்பிடப்பட்டுள் ளனர்.

மனுவை ஆதரித்து சட்டத்தரணி எஸ்.எல்.குணசேகரவும், மனுவை எதிர்த்து சட்டமா அதிபர் கே.சி.கமல சபேசனும் ஆஜராகினர். (எ)

சமாதான விளையாட்டு விழா இன்று களுத்துறையில் ஆரம்பம்

பேருவளை,நவ.16

வடக்கு - தெற்கு சமாதான விளையாட்டுப் போட்டி இன்று களுத்துறை பொது விளையாட்டரங்கில் ஆரம்பமாகிறது. 19ஆம் திகதி வரை பல்வேறு போட்டி நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன.

இன்று மாலை 4 மணிக்கு ஆரம்ப வைபவம் நடைபெறவுள்ளது. இவ்வைபவத்தில் மேல் மாகான ஆளுநர் எஸ்.அலவி மௌலானா பிரதம அதிதியாகக் கலந்துகொள்வார். மேல் மாகாண முதலமைச்சர் ரெஜினோல்ட் குரே கௌரவ அதிதியாகப் பங்குபற்றவுள்ளார்.

காணி அமைச்சரும், களுத்துறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான டாக்டர் ராஜித சேனாரத்னவின் ஏற்பாட்டில் இவ்விழா நடைபெறுகிறது. வடக்கு - கிழக்கு மாகாணத்தில் ஏழு மாவட்டங்களில் இருந்து 1500 வீர வீராங்கனைகளும், களுத்துறை மாவட்டத்திலிருந்து 500 வீர வீராங்கனைகளும் இவ்விழாவில் பங்குபற்றவுள்ளனர்.

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார், வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய பகுதிகளில் இருந்து விளையாட்டு வீர, வீராங்கனைகள் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தென்பகுதியில் நடைபெறும் விளையாட்டு விழாவொன்றில் மிகக் கூடுதலான வடபகுதி தமிழ் வீர வீராங்கனைகள் பங்குபற்றுவது இதுவே முதல் தடவையாகும். இந்த விளையாட்டுப் போட்டிக்கு ஒரு கோடி ரூபா செலவாகிறது எனத் தெரிய வருகிறது.

தொடர்ந்து நான்கு நாள்கள் நடைபெறவுள்ள இந்த விளையாட்டுப் போட்டிக்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக அமைச்சர் ராஜித சேனாரத்ன கூறினார்.

தேவை

COREL DRAW, INTERNET, E-MAIL இல் அனுபவமுள்ள, ஆங்கில அறிவுள்ள COMPUTER OPERATER தேவை.

விளம்பர இல. 1700,
C/o உதயன்,
யாழ்ப்பாணம்.

(C/24890)

பணியாளர் தேவை

யாழ்ப்பாணம், 43, கண்டிவீதியில் அமைந்துள்ள APAT தங்குமிட விடுதிக்கு பணியாளர் (Room Boy) தேவை. உடன் தொடர்புகொள்ளவும். கிராம சேவையாளரின் அத்தாட்சிப் பத்திரத்துடன் சமுகந்தரவும். சம்பளம் நேரில் பேசித்தீர்க்கப்படும்.

தொடர்பு:
APAT தங்குமிட விடுதி,
43, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.

(10647)

கண்ணீர் அஞ்சலி

எமது நலன்புரிச் சங்கத் தலைவர் திரு.ந.சசீகரன் அவர்களின் அன்புத் தந்தையும் நலன்புரிச் சங்க போசகர் திரு.ஆ.பா.சித்திரவடிவேல் அவர்களின் அன்பு மாமனாருமாகிய

க.நடராசா

அவர்கள் காலமானதையிட்டு துயருறும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

4ஆம் வட்டாரம்,
வேலணை கிழக்கு.

ஊழியர் நலன்புரிச் சங்கம்,
பலை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், வேலணை.

(10654)

நாவற்குழி களஞ்சிய திருத்த வேலைகளுக்கான பொருள்களை பெறுவதற்கான கூறுவிலை கோருதல்

இதன் கீழ்க் குறிக்கப்படும் பொருள்களை விநியோகிப்பதற்கான கூறுவிலை மனுக்கள் 22.11.2002 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக புனர்வாழ்வு கிளை செயலகம், யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பப்படுதல் வேண்டும். கடித உறையின் மேல் மூலையில் "நாவற்குழி களஞ்சியதிருத்த வேலைக்கான பொருள்களைப் பெறுவதற்கான கூறுவிலை கோரல்" என்று எழுதப்படல் வேண்டும். விவரங்களை வேலைநாள்களில் புனர்வாழ்வுக் கிளையில் பெற்றுக்கொள்ளலாம்.

பொருள்கள்

01. Cement
02. 2"x2"x1/4" Angle Iron
03. 18G.Iron Sheet
04. G.I Sheet 18G -8'x4'
05. G.I Sheet 22G -8'x3'
06. PVC Pipe 6" Dia Type 400
07. PVC "L" Bow 6"Dia
08. Welding Rods No.12
09. Welding Rods No.10
10. Tor Steel 3/4" (Steel Co-opratation)
11. Anticorrosive Paint Black
12. Dulux Paint
13. Brush 2"
14. 0.47 mm Corodek (Met Roof)Zn/Al Colour Bond Roofing Sheet 19'-0'Lenth
15. 0.47 mm Zn/Al/(Met Roof) Colour Bond Standard Roll Top Ridge Caps 6m Lenth
16. Fasteners 12x45
17. 5/8" M.S.Bar
18. Fibber Glass Translucent Sheet 10'-0"

புனர்வாழ்வுப் பகுதி,
செயலகம்.
15.11.2002

அரசாங்க அதிபர்,
யாழ்ப்பாணம்.

(C/24895)

ஆசிரியர்களுக்கு சதுரங்கப்போட்டி

யாழ்ப்பாணம்,நவ.16

இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கம் யாழ்மாவட்ட ஆசிரியர்களிடையே சதுரங்கப் போட்டியை நடத்தவுள்ளது.

ஆண், பெண் இருபாலார்களுக்குமிடையே தனிநபர் போட்டியாக இது நடத்தப்படவுள்ளது. இதில் கலந்துகொள்வுள்ள ஆசிரியர்கள் இன்று முற்பகல் 9 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரிக்கு சமுகமளிக்கு மாறு இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்க யாழ்.மாவட்டச் செயலாளர் க.குமாரசாமி கேட்டுள்ளார். (ம-5)

முன்பள்ளி விளையாட்டு விழா

யாழ்ப்பாணம்,நவ.16

கெருடாவில் சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்கத்தின் முன்பள்ளி விளையாட்டுப் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு இகுணசேகரம் தலைமையில் முன்பள்ளி முன்றலில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதமவிருந்தினராக யாழ். மாவட்ட போருட் நிகழ்ச்சித்திட்ட முகாமையாளர் மாறன் பிறன்ஸ்விக்கும், சிறப்பு விருந்தினர்களாக பருத்தித்துறை பிரதேச சபை சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி யோபர மேஸ்வரி, வடமராட்சி கல்வி வலய முன்பள்ளி உதவிக்கல்விப் பணிப்பாளர் துரை சத்தியசீலன் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர். (ம-5)

திருமுறை பாராயணம்

யாழ்ப்பாணம்,நவ.16

அகில இலங்கைத் திருமுறை மன்றம் மாதாந்தம் பௌர்ணமித் தினத்தில் நடத்திவரும் அகத்தியர் தேவாரத்திரட்டு முற்றோதல் பன்னிரு திருமுறைப்பாராயணம் என்பன எதிர்வரும் 19ம் திகதி செவ்வாய்க் கிழமை காலை 8.00 மணிக்கு நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் மணிமண்டபத்தில் மன்றத் தலைவர் பண்டிதர் வ.பேரின்பநாயகம் தலைமையில் நடைபெறும். (எ)

பாலர் பாடசாலை வெள்ளிவிழா

அச்சுவேலி,நவ.16

அச்சுவேலி தெற்கு கஜமுகன் பாலர் பாடசாலை வெள்ளிவிழாவும், ஸ்தாபகர் செல்வி மகேஸ்வரி பொன்னையாவின் பிரிவுபசார விழாவும் நாளை ஞாயிற்றுக்கிழமை பாடசாலை மண்டபத்தில் அச்சுவேலி பிரதேசசபை உப அலுவலகப் பொறுப்பதிகாரி எஸ்மாணிக்கவாசகர் தலைமையில் நடைபெறும். பிரதமவிருந்தினராக வலி.கிழக்கு பிரதேச சபையின் தலைவர் பூ.குணசிங்கம் கலந்துகொள்வார். (ம-11)

நல்லின போஞ்சிவிதை விநியோகம்

வலிகாமம்தெற்கு,நவ.16

நல்லின போஞ்சி விதைகள் உடுவில் கமநல கேந்திர நிலையத்தின் மூலம் கமக்காரர்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வருகின்றன.

ஏழாலை, புன்னாலைக்கட்டுவன், குப்பிளான் போன்ற இடங்களில் போஞ்சி நன்றாக விளைச்சல் கண்டதை அடுத்தே நல்லின விதைகள் காலபோக செய்கைக்கென கமநல கேந்திர நிலையத்தினரால் தருவிக்கப்பட்டு விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

அத்துடன், சகலவிதமான உள்நாட்டு மரக்கறி விதைகளும் உடுவில கமநல கேந்திர நிலையத்தில் உள்ளன என்றும் -

மரக்கறி விதைகள் தேவையான கமக்காரர்கள் அவற்றை வேண்டிய அளவில் தம்மிடம் பெற்றுக்கொள்ளலாம் என்றும் - கமநல கேந்திர நிலையப் பெரும்பாக உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார். (எ-152)

அளவெட்டிக்கு விரைவில் மின்சாரம்

வலிகாமம்தெற்கு,நவ.16

அளவெட்டிக் கிராமத்துக்கு மின்சாரம் வழங்குவதற்கு மின்சார சபையினர் துரித நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றனர்.

சுமார் 12வருடங்களுக்குப் பின்னர் அளவெட்டிக் கிராம மக்களுக்கு மின்சாரம் வழங்கப்படவுள்ளது.

மின்சாரத்தை விரைவில் வழங்குவதற்கு ஏற்றமுறையில் மின்சாரக் கம்பங்கள் நாட்டப்பட்டு, மின்சார இணைப்பு வயர்கள் பொருத்தும் நடவடிக்கைகளை மின்சாரப்பகுதியினர் மேற்கொண்டுவருகின்றனர்.

(எ-152)

இளைஞர், யுவதிகளுக்கான விளையாட்டுப் பயிற்சி நெறி

யாழ்ப்பாணம்,நவ.16

யாழ்.மாவட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட இளைஞர், யுவதிகளுக்கான விளையாட்டுப் பயிற்சி முகாம் ஒன்று இம்மாத இறுதிப் பகுதியில் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

18 வயதுக்கும் 29 வயதுக்கும் இடைப்பட்ட இளைஞர், யுவதிகள் கலந்துகொள்ளும் இப்பயிற்சி முகாமில் வலைப்பந்தாட்டம், கரப்பந்தாட்டம் மற்றும் மெய்வன்மை தொடர்பான பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

மூன்று தினங்கள் நடைபெறவுள்ள இப்பயிற்சி முகாமில் கலந்துகொள்ள விரும்பும் இளைஞர், யுவதிகள் இளைஞர் சேவை மன்றத்தின் யாழ். மாவட்ட அலுவலகத்துடன் தொடர்புகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

(ம-5-10)

உதைபந்தாட்ட இறுதியாட்டம்

வலி.வடக்கு,நவ.16

கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி விளையாட்டு அபிவிருத்திச் சங்கத்தினால் நடத்தப்படும் நட்சத்திரங்களின் உதைபந்தாட்டப்போட்டியின் இறுதி ஆட்டமும் மற்றும் 3 ஆம் இடத்திற்கான ஆட்டம் என்பன இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு ஸ்கந்தவரோதயக் கல்லூரி அதிபர் க.சிவாஜி தலைமையில் கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ளன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக ஸ்கந்தாவின் பழைய மாணவனும், சுன்னாகம் வர்த்தகர் சங்கத் தலைவருமான நசண்முகவேல் கலந்துகொள்வார்.

இன்று இடம்பெறவுள்ள ஆட்டங்களில் கலந்துகொள்ளவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

3ஆம் இடத்துக்கான ஆட்டத்தில் ஸ்கந்தவரோதயக் கல்லூரியை எதிர்த்து தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மோதும்.

இறுதியாட்டத்தில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியை எதிர்த்து தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மோதும். (ம-86)

PRIMA

கோழித்தீன், மாட்டுத்தீன், பொதிசெய்யப்பட்ட கோழி இறைச்சிகள், கோழி இறைச்சிப்பாகங்கள், பிறிமா நூடில்ஸ் வகைகள், எண்ணை வகைகள் மற்றும் பிறிமா தயாரிப்புக்களைப் பெற்றுக்கொள்ளலாம். குறைந்த விலையில் கூடிய கழிவுகள் தரப்படும்.

யாழ்.நகரின் ஏக விநியோகஸ்தர்கள்:
பிறிமா (Prima) நிறுவனம்,
144, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(10661)

பாராட்டி வாழ்த்துகின்றோம்

நயினாதீவு பெற்றெடுத்த G.P.S. வீதி, கல்வியங்காடு வளர்த்த யாழ்ப்பாண பிரதம அஞ்சல் அலுவலர் உயர்திரு.

சுந்தரமூர்த்தி நவநேசன் (நசன்)

அவர்கள் 15.11.2002 வெள்ளிக்கிழமை யாழ்.மாவட்ட மேலதிக நீதிவான் திருமதி இளங்கோவன் முன்னிலையில் சமாதான நீதிவானாகப் பதவிப்பிரமாணம் செய்து பதவியேற்றதையிட்டு அவரை மனமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
அம்மா, பேரின்பநாயகம் குடும்பத்தினர்,
உமாசுதன் குடும்பத்தினர்.

(10665)

மரண அறிவித்தல்கள்

திருமதி எஸ்தாக்கி பெர்ணாட்டம்மா

அல்வாய் தெற்கு, தச்சவயல், வதிரியைச் சேர்ந்த திருமதி எஸ்தாக்கி பெர்ணாட்டம்மா அவர்கள் 15.11.2002 வெள்ளிக்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் எஸ்தாக்கியாரின் அன்பு மனைவியும் கரோஸ்மலர், ஞானரத்தினம், தேவராசா, மரியதாஸ், சம்மிக்கேல், தேவமலர் ஆகியோரின் அருமைத் தாயாரும் நேசராசா, யேசுராசா, திவ்வியராசா, ஞானசூரி, றோசம்மா, மங்களம், தவனேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (16.11.2002) சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் வதிரி பங்குவம்படி மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தச்சவயல்,
வதிரி,
அல்வாய்தெற்கு,
அல்வாய்.

தகவல்:
ஏ.மரியதாஸ் (மகன்)
(பவுண்)

(C/24896)

தம்பிப்பிள்ளை சபாரட்ணம்

வேலணை மேற்கைச் (புளியங்கூடல்) சேர்ந்த தம்பிப்பிள்ளை சபாரட்ணம் அவர்கள் நேற்று(15.11.2002) வெள்ளிக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை - கனகம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வரும் காலஞ்சென்றவர்களான ஏரம்பு - செல்லமுத்து தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற இராசம்மாவின் அன்புக் கணவரும் லீலாவதி, இரத்தினாம்பாள், இராஜதுரை (Accountant , S.Rajathurai & Co) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் காலஞ் சென்ற கோபாலபிள்ளை மற்றும் சுந்தரலிங்கம் (இலங்கையன் பதிப்பகம்), வனிதா ஆகியோரின் அன்பு மாமனாரும் பொன்னுத்துரை காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை, சிவசுப்பிரமணியம் (கனடா), தம்பிஐயா (கனடா), தெய்வானைப்பிள்ளை (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் கோணேஸ்வரி, கோணேஸ்வரன், கணேஸ்வரன், கணேஸ்வரி, ஜெகதீஸ்வரன், சிவதீஸ்வரி, மயூரன் (Singapoor Informatics, Col.), சிந்துஜா, சுகன்ஜா, சிவஜா (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவிகள்) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.11.2002) சனிக்கிழமை பி.ப. 2மணிக்கு 20, இராசாவின் தோட்டத்திலுள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் கோம்பையன் மணல் மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகிறோம்.

20, இராசாவின்தோட்டம் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
ச.இராஜதுரை
(மகன்)

(10664)

இந்த வார இராசி பலன்

17.11.2002 ~ 23.11.2002

சந்.		சனி ரா.	
	இராசிச் சக்கரம்		வியா.
	சூரி. ▲ கேது புத.	வெள்.	செவ்.

மாற்றம்:

17.11.2002இல் - ரேவதி - சந்திரன் மீனத்தில் நிற்கும்.

குழப்புபவர்கள் குழம்புவார்கள். தெற்கே அரசியல்வாதிகளிடையே கருத்து வேற்றுமை ஏற்படும். இடைக்கிடையே மோதல்கள் தொடரும். 40 வருஷங்களாக ஊறிய மடடைகள் நைந்து போகும்பொழுது கலக்கம் இருக்காதா? நண்ட பிரயாணங்கள் தொடர்ந்தபடி இருபபது போன்று இருந்தாலும் ஒரு இலக்கை அடைய முற்படும். இந்தியாவில் அரசியலில் குழப்ப நிலை தோன்றும். மத்திய கிழக்கில் அமெரிக்காவின் கடும் போக்கால் அரசியலில் மாற்றம் - அழிவுகள் தொடர இடம் உண்டு. அரே பியா, இந்து பசுபிக் பிராந்திய நாடுகளில் இயற்கையின் சீற்றத்தால் மழை, காற்று அதிகரிக்க இடமுண்டு.

மேடம்

மனிதர்களின் ஆசைகளின் விரிவாக்கமே -அவனை பாவம் செய்யத் தூண்டுகின்றது. - பாவங்கள் மலிய வாழ்வு குறுகி மரணம் சம்பவிக்கின்றது. மின்சாரம், மின்னல், விபத்து, பிறசர் ஏன் அதிகரிக்கின்றன. மருந்து இல்லாமல் எத்தனையோ பேர் வாழுகின்றார்கள் - மறந்து செய்யும் பல பிழைகள் உங்களுக்கு தொழில் பீடத்தில் ஏன் வருகின்றது? பெரியவர்களின் உதவிகள், பணவரவு, சகோதரர்களுக்குச் சிறப்பு, அரசியல் வாதிகளின் உதவிகள், எதிர்பாலாரால் உபத்திரவம், இடமாற்றங்கள் ஏற்படுதல் என்பன ஏற்படும். பித்தம், சளி மாறிமாறி வரும், கால்வருத்தம் கண்கூச்சம் வரும், மாணவர்களுக்கு நண்பர்கள் உதவுவர். சட்டத்துறை, குருத்துறை எண்ணெய்த்துறை, மருந்துத்துறை போன்ற துறையினர்கள் நன்மை அடைவர். சொன்ன சொல்லைக் காப்பாற்றமாட்டீர்கள்.

அதிர்ஷ்டநாள்கள்: புதன், வெள்ளி, சனி

இடபம்

உதயத்தில் வெள்ளி ஒருவருக்கு இருந்துவிட்டால் கண்டவர்கள் மயக்கும் கண்ணழகு - அருகில் வந்தால் மணக்கும் வாசனை - கனிவான வாக்கு, இலகுவில் எதிர்பாலாரால் காரியங்கள் இலேசில் நிறைவேறும் இராசிக்காரர். தொழில்ஸ்தானத்தில் வாக்குக்கலகம், நண்பர்கள் உதவுவார்கள், எதிரிகளை வெல்லல், அதிகாரிகள் உதவுதல், உறவினர்கள் உதவுவார்கள், குடும்பத்தினருடன் வாக்குவாதப்படல், பிறசர் - சளி, நாரிநோ வரும். மாணவர்களுக்கு எதிர்பார்த்தது கிடைக்காது. ரீவி, டெக், சினிமாத்துறைகளால் நன்மை வரும், ஹோட்டல்துறை, வங்கித்துறை, போக்குவரத்துத்துறை, நகை, புடைவைத்துறை போன்ற துறையினர்களுக்கு இலாபங்கள் அதிகரிக்கும்.

அதிர்ஷ்டநாள்கள்: புதன், வெள்ளி, சனி

மிதுனம்

பொருள், பெண் அல்லது ஆண் அடுத்து காணி நிலம், புகழ் என்ற ஆசைகள் தொடர்ந்து இறுதியில் தத்துவார்த்தம் பேசி ஞானம் வந்து திரும்பவும் வாழ்வு குழந்தைப் பருவத்திலிருந்து திரும்பி தொடர்கதையாகின்றது. எத்தனை வருடம் இந்தத் தொழிலைச் செய்கின்றேன் மாற்றமில்லையே என்ற ஏக்கம், கருத்துக் கலகம், தூரத்துச் செய்திகள், பணக்கஷ்டம், மருந்துச் செலவுகள் என்பனவும் வாய்வுத்தொல்லை, சளி என்பனவும் ஏற்படும். மாணவர்களுக்கு நன்மையான செய்திகள் கிடைக்கும். ஆசிரியர்களின் உதவிகள் கிடைக்கும். படத்துறை, செய்தித்துறை, புத்தகத்துறை, கம்பியூட்டர் துறை, வியாபாரத்துறை, தோட்டத்துறை போன்ற துறையினர்கள் நன்மையடைவர்.

அதிர்ஷ்டநாள்கள்: புதன், வெள்ளி, சனி.

கடகம்

மனதில் ஒருவருக்கு இடமளித்து விட்டால் அதை மாற்ற முடியாமல் பாச அலையில் துடிப்பவர்கள் அனேகராகும். தொழில் ஸ்தானத்தில் பேதமற்று நடக்கவும் அல்லது வீண் பிரச்சினைகள் ஏற்படும். காலை ஒரு செய்தி மாலை ஒரு மாற்றம் - தூர தேசச் செய்திகள் வரும். எதிர்ப்பாலாரால் அவமானம் ஏற்படும், வீண் பழி பிறர் மீது சுமத்தல் - மறதி, சளி, வாய்வு என வருத்தும் - இடமாற்றம் - பிரயாணங்களைத் தவிர்க்கவும், மாணவர்களுக்கு இழப்புக்கள் வரும், மின்சாரத்துறை - பாதுகாப்புத்துறை அரசியல்துறை போன்ற துறையினர்களுக்கு நன்மைகள் ஏற்படும்.

அதிர்ஷ்டநாள்கள்: புதன்,வெள்ளி, சனி

சிங்கம்

சரித்திரங்கள் மாறி மாறித்தான் வந்தபடியிருக்கும். பீடத்தில் இருப்பவர்களை விட புகழ்படைத்தவர்கள், அரசியல்வாதிகள், உச்ச அமைச்சர்களின் தொடர்புடையவர்களின் வலிமை அதிகளவானதாகும். எனவே தொழில் ஸ்தானத்தில் வலிமைகளைக் கவனித்து செயற்படுங்கள். பணவரவு இருக்கும், பிறருக்கு ஆலோசனை சொல்வீர்கள், சகோதரர்களுக்கு நன்மைகள், தூரத்துச் செய்தி மகிழ்ச்சி தரும். மாணவர்களுக்குள் போட்டிகள் ஏற்படும். பொறுமையாக இருக்கவும். கை,கால்உளைவு, சளித் தொல்லை, உஷ்ணபீடைகள் என்பன கொடுக்கும். சட்டத்துறை, குருத்துறை, அரசியல்துறை, வியாபாரத்துறை போன்ற துறையினர்கள் நன்மையடைவார்கள்.

அதிர்ஷ்டநாள்கள்:புதன், வெள்ளி, சனி.

கன்னி

வேண்டாத வேண்டுதல் நிகழ்த்தும் சிலர் காரியம் நிறைவேறி விட்டால் கடவுளை - மறந்துவிடுவர். நிறைவேறாவிட்டால் கண்கெட்ட கடவுள் என ஆலயப்பக்கம் திரும்பாத உள்ளங்கள் அதிகமாகும். தொழில் ஸ்தானத்தில் கருத்துவேற்றுமை கொடுக்கும். புதிய வருவாய், நண்பர்களின் உதவிகள் பெற்றோர் சகோதரர்களுக்காக ஓடியாடித்திரிதல் என்பனவும் கை,கால், வாதப்பிடிப்பு, தொண்டை, நாரி நோ, கிருமித்தாக்கம் என்பன கொடுக்கும். மாணவர்களுக்கு இடமாற்றமும் கல்விச்சித்தியும் கொடுக்கும். வியாபாரத்துறை, எண்ணெய்த்துறை, குருத்துறை போன்ற துறையினர்கள் நன்மை அடைவர்.

அதிர்ஷ்டநாள்கள்: புதன், வெள்ளி, சனி.

துலாம்

தகுதி, அரசியல் செல்வாக்கு அதிகாரவர்க்கத்தின் கண் அசைவுகள் என்பன ஒருவருக்கு புகழ் தேடித் தரும். ஆனால் வீட்டிலேயோ தொழில் ஸ்தாபனத்திலேயோ ஏட்டிக்குப் போட்டி கொடுக்கும் சமாளித்துக் கொள்ளுங்கள் மாணவர்களுக்கு புதிய சிந்தனை ஏற்படும். வீடு - வாகனசுகம் கொடுக்கும். புதிய செய்தி மன உற்சாகத்தைத் தரும். அரச உதவிகள் கிடைக்கும். அதிக யோசனை, அடிக்கடி உஷ்ண, குளிர்ப்பீடைகள், நரம்புப் பலவீனம், நாரிநோ, கை, கால் படிப்பு என்பன ஏற்படும். குருத்துறை, ஆராய்ச்சித்துறை, சட்டத்துறை, மருத்துவத்துறை போன்ற துறையினருக்கு நன்மைகள் அதிகரிக்கும்.

அதிர்ஷ்டநாள்கள்:புதன், வெள்ளி, சனி.

விருச்சிகம்

பன்னிரண்டு வயதிலிருந்து இருபத்தினான்கு வயது மட்டும் எவர் சொல்லியும் இளம் உள்ளங்கள் கவனிக்கவோ மதிக்கவோ மாட்டார்கள். எத்தனையோ பெற்றோர்கள் தம் பிள்ளைகள் பற்றி வேதனைப்படுகின்றார்கள் என்பதைப் பிள்ளைகள் கருத்தில் கொள்ளவேண்டும். தொழில் ஸ்தானத்திலும் மேலதிகாரிகளின் சொல்லைக் கேட்காமல் உங்களுக்குப் பிரச்சினை வரலாம். அயலவர்கள் பிரச்சினை தருவர். மாணவர்களுக்கு சித்திகளும் பெரியவர்களின் உதவிகளும் கிடைக்கும். சகோதரங்களுக்கு நன்மை ஏற்படும் சங்கீதப்பிரியம் தானே வரும் வழக்கெழு காரணங்கள் பூமியில் அல்லது கொடுக்கல், வாங்கல்களால் ஏற்படலாம். நெஞ்சு வருத்தம், மூக்கு, தொண்டைநோ, நரம்புப் படிப்பு வரும். இரும்புத்துறை, சட்டத்துறை, பாதுகாப்புத்துறை, வியாபாரத்துறை, போன்ற துறையினர்களுக்கு நன்மைகள் அதிகரிக்கும்.

அதிர்ஷ்டநாள்கள்: புதன், வெள்ளி.

தனுசு

வெளிநாட்டு ஆசை - விக்டர் மோட்டார் சைக்கிள் - கலர் ரிவி, கம்பியூட்டர் எனக் காலம் இளவட்டங்களில் உள்ளத்தில் அலைமோதியபடி இருக்கின்றது. தொழில் இடத்தில் திடீர் விரோதங்கள் வந்து போகும். அடித்துவிட்டு அணைப்பீர்கள். உடல் நிலையை பாதுகாக்கவும், வீடு வாகன சுகம் ஏற்படும். புத்திரரோ - இன ஜனங்களோ உதவிகள் செய்வார்கள். அரச அதிகாரிகள் உதவிகள் செய்வார்கள். எலும்புநோ, நரிப்பிடிப்பு, கால்வருத்தம், சளித் தொல்லைகள் என்பன வரும் மாணவர்களுக்கு பெரியவர்கள், ஆசிரியர்களின் உதவிகள் கிடைக்கும். சித்திகள் கிடைக்கும். எண்ணெய்த்துறை - வியாபாரத்துறை - குருத்துறை - மருந்துத்துறை - புடைவை வியாபாரம் என்பன செய்வோருக்கு நன்மைகள் அதிகரிக்கும்.

அதிர்ஷ்டநாள்கள்: புதன், வெள்ளி.

மகரம்

தகப்பனும் பிள்ளையும் எடுக்கும் ஒரே சோதனை வாகனப் பரீட்சையாகும். எல்லாம் காலத்தின் கோலமாகும். எந்தப் பரீட்சைக்கும் தயார் நிலையில் நிற்பீர்கள். தொழில் ஸ்தானத்தில் போட்டிகள் சகஜம் - மனப்பயம் அடிக்கடி ஏற்படும் - பணக்கஷ்டம் வரும் - கொடுக்கல் வாங்கல்களில் பிரச்சினைகள் ஏற்படும் - அதிகாரிகளின் உதவிகள் கிடைக்கும் - மாணவர்களுக்கு பல நன்மைகள் ஏற்படும். குருத்துறை, மருந்துத்துறை, தோட்டத்துறை போன்ற துறைகளைச் சேர்ந்தவர்களுக்கு நன்மைகள் அதிகரிக்கும்.

அதிர்ஷ்டநாள்:சனி

கும்பம்

எட்டுமுழவேட்டி வாங்கிய காலம் போய் - எட்டடித்து வாகன லைசன்ஸ் பெறும் காலம் இது. தொழில்ஸ்தானத்திலும் புதிய திட்டங்கள் எட்டடிப்பதுபோல் வந்து தடுமாறச் செய்யும். எதிர்ப்பாலார்கள் பகைப்பர். இடமாற்றம் - புதிய நண்பர்கள் வருகை, அயலவர்கள் உதவுவர். தொழில் பீடத்தில் சிறியவர்களால் தொல்லைகள் என்பன ஏற்படும். கால் வருத்தம், சளித் தொல்லை - பிடிப்புக் கொடுக்கும் - குருத்துறை, வியாபாரத்துறை, சட்டத்துறை போன்றவர்களுக்கு நன்மைகள் ஏற்படும். மாணவர்களுக்கு நன்மைகள் அதிகரிக்கும்.

அதிர்ஷ்டநாள்:சனி

மீனம்

மனித உரிமைகள் மீறப்படுவது தவிர்க்கப்படவேண்டும். எந்தவித பயமற்ற சூழ்நிலையில் மக்கள் வோட்டுக்களைப் போடவோ, நடமாடவோ தம்கருத்துக்களை தெரிவிக்கவோ வேண்டும். வன்முறையால் எதையும் எவரும் அதிக காலம் சாதித்துவிட முடியாது. தொழில்ஸ்தானத்தில் சிலர் உரிமைமீறிச் செயற்பட முற்பட்டு கலகம் வரும். தூரத்துநற் செய்தி, இடமாற்றம். எதிரிகள் ஓடுவர், பணவரவு வரும். நாரிநோ - கால்பிடிப்பு - சளிவருத்தம் வரும். பிரயாணத்துறை - குருத்துறை நன்மை அடைவர்.

அதிர்ஷ்டநாள்:சனி

மகாதேவா ஜோதிடம்

ஈழத்து நவீன இலக்கிய வளர்ச்சி கருத்தரங்கு 2ஆம் நாள் நிகழ்வுகள்

தமிழ் இலக்கிய கலாசாரத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் இலங்கை கலைக்கழக தமிழ் இலக்கியக் குழு நடத்தும் ஈழத்து நவீன இலக்கிய வளர்ச்சி பற்றிய கருத்தரங்கின் இரண்டாம் நாளான இன்று நடைபெறவுள்ள நிகழ்ச்சிகள் வருமாறு:-

காலை 9 மணிமுதல் முற்பகல் 10.30 மணிவரை இடம்பெறும் கவிதை அமர்வு பேராசிரியர் சி.தில்லைநாதன் தலைமையில் நடைபெறும்.

இதில் 'ஈழத்து நவீன தமிழ்க் கவிதை வளர்ச்சி' என்ற தலைப்பில் யாழ்.பல்கலைக்கழகத் தமிழ்த்துறை விரிவுரையாளர் கலாநிதி சி.சிவலிங்கராசா, பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் கலாநிதி எம்.ஏ.நுஃமான், கிழக்குப் பல்கலைக்கழக மொழித்துறை விரிவுரையாளர் கலாநிதி செ.யோகராசா ஆகியோரும்-

"மலையகத் தமிழ்க் கவிதை வளர்ச்சி" என்ற தலைப்பில் பிரபல ஆய்வாளர் அந்தனி ஜீவாவும் -

'முஸ்லிம் சமூகத்தைப் பிரதிபலிக்கும் தமிழ்க்கவிதை' என்ற தலைப்பில் கவிஞர் மேமன் கவியும் உரை நிகழ்த்துவர். இது தொடர்பான கருத்துரையை கவிஞர் சோபத்மநாதன் வழங்குவார்.

பிற்பகல் 1.00 மணிமுதல் பிற்பகல் 3.00மணிவரை நடைபெறும் 'தமிழ் நாடகம்' பற்றிய அமர்வு கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைத் துறைத் தலைவர் பேராசிரியர் எஸ். மௌனகுரு தலைமையில் இடம்பெறும்

இதில் 'ஈழத்து நவீன தமிழ் நாடக வளர்ச்சி' என்ற தலைப்பில் யாழ்பல்கலைக்கழக நுண்கலைத்துறை விரிவுரையாளர் கலாநிதி எஸ்.சிதம்பரநாதன், கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைத்துறைத் தலைவர் பேராசிரியர் சி.மௌனகுரு, வவுனியா வளாக முதுநிலை விரிவுரையாளர் க.ஸ்ரீகணேசன் ஆகியோரும் -

'மலையகத் தமிழ் நாடகம்' என்ற தலைப்பில் பத்தளை கல்வியியற் கல்லூரி தலைவர் சு.முரளிதரனும் உரையாற்றுவர்.

இது தொடர்பான கருத்துரையை பிரபல எழுத்தாளர் கலாநிதி சொக்கன் வழங்குவார்.

இவற்றைத் தொடர்ந்து பிற்பகல் 5.00மணிமுதல் பேராசிரியர் சிவஞானசுந்தரம் (நந்தி) தலைமையில் கலை நிகம்வகள் இடம்பெறும். (ம-5)

ஒலி, ஒளி அமைப்பாளர்களுக்கு

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த அனைத்து ஒலி,ஒளி அமைப்பாளர்களுக்குமான அவசர கலந்துரையாடல் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொக்குவில் நாமகள் வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் அனைத்து ஒலி, ஒளி அமைப்பாளர்களையும் கலந்துகொள்ளுமாறு யாழ். மாவட்ட அரசியல்துறையினர் கேட்டுள்ளனர். (ம-ரி)

சாவகச்சேரி நீதிமன்றுக்கு நீதிவான் நியமனம்

யாழ்ப்பாணம்,நவ.16

சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றுக்கு நீதிவான் ஒருவர் நீதி அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

தற்பொழுது வவுனியா மாவட்ட நீதிமன்றில் பயிற்சியில் ஈடுபட்டுவரும் இவர் அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் தனது கடமையைப் பொறுப்பேற்கவுள்ளார்.

கடந்த கால யுத்த சூழ்நிலையை அடுத்து சாவகச்சேரி நீதிமன்றம் பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில் ஒரு பகுதியில் தற்பொழுது இயங்கி வருகின்றது. ஜனவரி மாதம் தொடக்கம் சாவகச்சேரி நகரப்பகுதியில் உள்ள தனியார் கட்டடம் ஒன்றில் இது இயங்கவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஒ-10-5)

அதிபர்களுக்கான வதிவிடப் பயிற்சி

குருநகர்,நவ.16

1ஏபி 1சி பாடசாலை அதிபர்களுக்கான முகாமைத்துவ வதிவிடப் பயிற்சிநெறி பாதுக்கையில் அமைந்துள்ள தேசிய கல்வி நிறுவனத்தின் தேசிய முகாமைத்துவ வாண்மை அபிவிருத்தி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 18ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் 26 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரை இப்பயிற்சி நடைபெறும். உலக வங்கி, கல்வி அமைச்சுடன் இணைந்து இப்பயிற்சி நெறிக்கு அனுசரணை வழங்கியுள்ளது. (எ-51)

மரியன்னை பேராலய புனரமைப்பு நிதியம்

குருநகர்,நவ.16

யாழ்.மரியன்னை பேராலயத்தின் புனரமைப்பு வேலைகளை தொடர்ந்து மேற்கொள்ள வசதியாக பங்குத்தந்தை வண.பிதா மைக்கல் சௌந்தரநாயகம் தலைமையில் ஆலய பராமரிப்பு நிதியம் ஒன்று ஆரம்பிககப்பட்டுள்ளது.

வெளிநாடுகளில் உள்ள பேராலய பங்கைச் சேர்ந்த மக்களிடமிருந்து கிடைக்கும் நிதிகள் மூலம் ஆலயத்தைப் புனரமைப்புச் செய்வதும் ஆலயத்தைத் தொடர்ந்து பராமரிப்பதுமே நிதியத்தின் ஆரம்ப நோக்கம் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்நிதியத்தின் போஷகராக யாழ்.ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை செயற்படுவார். தலைவர், செயலாளர், நிதிமுகாமையாளர் உட்பட மேலும் இருவர் நிர்வாக உறுப்பினராகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். (எ-51)

2002ஆம் ஆண்டு பனம் விதை நடுகைத் திட்டத்தின் கீழ் பொருண்மிய மேம்பாட்டு நிறுவன அனுசரணையுடன் கொடிகாமம் பனை, தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் மூவாயிரம் பனம் விதைகளை கொடிகாமம், மந்துவில், வரணி ஆகிய இடங்களில் நட்டுள்ளது. தலைவர் கி.பூபாலசிங்கம் நடுகையை ஆரம்பித்து வைப்பதையும் பொதுமுகாமையாளர் சி.இரத்தினசிங்கம், மேற்பார்வையாளர் க.நடராசலிங்கம், அங்கத்தவர் வ.ஐயா, பணியாளர்கள் ஆகியோர் அருகில் நிற்பதையும் படத்தில் காணலாம். (ஐ)

வணக்கம்

உலகத்தலைவர்கள்
யாழ்நகரில்
ஒன்றுகூடுகிறார்கள்

சிங்கர் (ஸ்ரீ லங்கா) நிறுவனம் தனது புதிய காட்சியறையை
யாழ்ப்பாணம் இல.1, ஸ்ரான்லி றோட்டில்
இன்று(16.11.2002) சனிக்கிழமை கோலாகலமாக
திறந்து வைக்கின்றது.

SINGER SISIL AKAI SANSUI
TCL JVC National KENWOOD HITACHI
Whirlpool Welling TEFAL Prestige

சிங்கர்

தையல் இயந்திரங்கள், துணிதுவைக்கும் இயந்திரங்கள், குளிர்சாதனப் பெட்டிகள், மின்சார நீர் இறைக்கும் இயந்திரங்கள், கதிர் அடிக்கும் இயந்திரம், இரண்டு சக்கர உழவு இயந்திரம், சமையலறைப் பாவனைப் பொருள்கள், மரத்தளபாடங்கள், துவிச்சக்கரவண்டிகள், கைத்தொழில் சம்பந்தமான தையல் இயந்திரங்கள், சக்தி வேகம் இவற்றை உண்டாக்கும் இயந்திரம், கணனி இயந்திர ஆகியனவும்.

சிசில்

குளிர்சாதனப்பெட்டிகள், துணிதுவைக்கும் இயந்திரங்கள் உறை குளிர்சாதனப்பெட்டிகள், Bottle Coolers,
ஆகியனவும் காட்சியறையில் விற்பனைக்குண்டு

Web: www.singersl.com

(C/24888)

சிங்கர்®
மாசற்ற மேன்மை

எந்திரவியல் டிப்ளோமா விண்ணப்பப்படிவம்

இலங்கை திறந்த பல்கலைக்கழகம் யாழ்.பிராந்திய நிலையம், பிறவுண் வீதி கொக்குவிலில் 7 நாள்களும் பெற்றுக்கொள்ளலாம்.

விஞ்ஞானமாணி பதிவு செய்த புதிய மாணவர்கள், **சட்டமாணி** புதிய, பழைய மாணவர்கள் அனைவரையும் விரிவுரைகள் சம்பந்தமாக 17.11.2002 ஞாயிறு காலை 9.00 மணிக்கு அலுவலகத்திற்கு தவறாது சமுகம் கொடுக்கவும்.

பிராந்திய இயக்குநர்,
எந்திரி ச.ஆ.ஞானேந்திரன்

(10670)

இந்து அன்னையின் இதயஅஞ்சலி

யாழ்.இந்துக் கல்லூரியின் முன்னாள் சிரேஷ்ட மாணவமுதல்வன்
செல்வன் க.யதுநந்தன் (2002-உயர்தரப்பிரிவு)
அவர்களின் அன்புத் தந்தையார்

திரு.க.கணேசலிங்கம்

அவர்கள் சென்ற 13.11.2002 அன்று காலமாகிவிட்டார். அவரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி,
யாழ்ப்பாணம். (10669)

மாணவ முதல்வர்சபை
(2003-2004)

யாழ்ப்பாணம் நகர்மைய றோட்டரக்ட் கழகம்

நடத்தும்
க.பொ.த. (சா/த) மாணவர்களுக்கான
இலவச முன்னோடிக் கருத்தரங்கு -2002

இடம் :- யா/இந்துக் கல்லூரி ஆரம்பப் பாடசாலை
காலம் :- 16.11.2002 சனி காலை 10.30 தொடக்கம் 4.00 மணி வரை
17.11.2002 ஞாயிறு காலை 8.30 தொடக்கம் 2.00 மணி வரை

தமிழ் :- திரு. வா.சிவராசா,
ஆசிரியர் யாழ். இந்துக் கல்லூரி

கணிதம் :- திரு.மகேசன் ஸ்ரீதரன்
ஆசிரியர் யாழ். இந்துக் கல்லூரி

விஞ்ஞானம் :- திரு. G.ரட்ணசிங்கம்
சேவைக்கால ஆசிரிய ஆலோசகர், யாழ். கோட்டம்.

சமூகக்கல்வி :- திரு. சுதாகரன்
யாழ். பல்கலைக்கழகம்.

ஆங்கிலம் :- திரு .K.சுப்பிரமணியம்.
பொறுப்பாசிரியர் - பிராந்திய ஆங்கிலம் -
ஆதார நிலையம்.

வர்த்தகமும் கணக்கியலும் :- திரு பா.செயரட்ணராசா.
ஆசிரியர், யாழ். இந்துக் கல்லூரி.

அன்றைய தினம் மட்டும் மாதிரிக் கையேடுகள் வழங்கப்படும்.

நகர்மைய றோட்டரக்ட் கழகம்
யாழ்ப்பாணம்.

(சி24882)

தையல் இயந்திரம் வழங்கும் நிகழ்வு

அரியாலை,நவ.16

கட்டைவேலி-நெல்லியடி பல நோக்குக் கூட்டுறவுச்சங்க ஏற்பாட்டில அன்பளிப்பு நிதி ஊடான சுழற்சிமுறை இலகு கடனில் பயனாளிகளுக்கு 12 தையல் இயந்திரங்களை வழங்கும் நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நெல்லை முருகன் திருமண மண்டபத்தில் நடைபெறும்.

சங்கத்தலைவர் த.சிதம்பரப் பிள்ளை தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பட்டயக் கணக்காளர் கலாநிதி ஆ.சோமசுந்தரம்பிள்ளை பிரதம விருந்தினராக கலந்துகொண்டு பயனாளிகளுக்கு தையல் இயந்திரங்களை வழங்குவார்.

(ஓ-17)

லஷ்சுமி இணுவில்

விஜய், சிம்ரன், மணிவண்ணன்
நடிப்பில்
துள்ளாத மனமும் துள்ளும்
(ரீல்ஸ்)
காட்சிகள்: 10.30, 2.30, 6.30 (ப.நே)

நாகம்ஸ் சுன்னாகம்

M.G.R., சரோஜாதேவி, நம்பியார் நடித்த
கலங்கரை விளக்கம் (ரீல்ஸ்)
காட்சிகள்: 11.00, 3.00
வெள்ளி, சனி, ஞாயிறு: விசேட காட்சி 6.30 (புதிய நேரம்)
(10662)

நிறைஞ்சனாஸ் சங்கானை

விஜய், சந்தியா, சிம்ரன், விவேக் நடித்த
யூத் (ரீல்ஸ்)
காட்சிகள்: 11.00, 2.45, 6.00 (பு.நேரம்)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 மட்டும்
UNIVERSAL SOLDIER (ஆங்கிலப்படம்)
(C/24617)

ராஜா யாழ்ப்பாணம்.

அஜித் (இருவேடங்களில்), மீனா நடித்த
வில்லன் (ரீல்ஸ்)

கா.நே.: 10.30, 2.30, 6.30
விசேட காட்சி: 9.30
(புதிய நேரம்)
(C-24617)

முஸ்லிம் எம்.பி. தொடர்பான நீதிமன்ற தடைஉத்தரவு ரத்து

கொழும்பு,நவ.16

முஸ்லிம் காங்கிரஸிலிருந்து ஹாபிஸ் நசீர் அஹமத் இடைநிறுத்தப்பட்டதற்கு எதிராக விதிக்கப்பட்ட தடை உத்தரவை கொழும்பு மாவட்ட மேலதிக நீதிவான் லால் அபேவர்த்தன நேற்று ரத்துச் செய்து தீர்ப்பளித்தார்.

முஸ்லிம் காங்கிரஸ் தலைமையக விஸ்தரிப்புக்கான காணி பிரச்சினை ஒன்றையடுத்து இவர் கட்சியிலிருந்து இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்தார்.

நீதிமன்றத் தீர்ப்பின்படி, கட்சித் தலைவர் ரவூப் ஹக்கீம் அவரை இடைநிறுத்தி வைத்திருப்பது செல்லுபடியாகும் என்று மு.கா.ஊடாக ஆலோசகர் டாக்டர் ஏ.ஆர்.ஏ.ஹபீஸ் தெரிவித்திருக்கிறார். (ஓ)

வீடியோ படக்காட்சி

யாழ்.பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகும் திரைப்பட வட்டமும் இணைந்து வழங்கி வரும் திரைப்படக் காட்சித்தொடரில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு அபர்வாசன் இயக்கிய வங்காள மொழிப்படமான "பராமா" எம்சண்முகம் இயக்கிய "உயிர் பெறும் சிற்பங்கள்" எனும் விவரணப் படம் ஆகியவை காண்பிக்கப்படும்.

WALK IN INTERVIEWS

எமது உலகப் புகழ் பெற்ற பின்வரும் மோட்டார் கார்களையும் அதன் உதிரிப்பாகங்களையும் யாழ்.மாவட்டத்தில் விநியோகிப்பதற்கு தகுதி வாய்ந்த விநியோகஸ்தர்களை நாம் நியமிப்பதற்காக பொருத்தமானவர்களை 18.11.2002 திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு இல.361, கஸ்தூரியார் வீதி, உதயன் பணிமனையிலுள்ள கேட்போர் கூடத்திற்குச் சமுகமளிக்கும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

(I) PEUGEOT
(II) VOLKSWAGEN
(III) MAZADA

(C/24900)

CAR MART LTD.
424, UNION PLACE, COLOMBO - 02

சாமியே சரணம் ஐயப்பா

அருள்மிகு சபரீச ஐயப்ப தேவஸ்தானம் - கோண்டாவில்

மகர ஜோதி மண்டல விரத ஆரம்பம்

17.11.2002 ஞாயிறு காலை கணபதி வழிபாடுகளுடன் ஆரம்பமாகும். மாலை அணியும் பக்தர்களுக்கு மாலைஅணிவித்து தொடர்ந்து விசேட வழிபாடுகள் நடைபெறும். 17.11.2002 தொடக்கம் 15.01.2003 வரை தினமும் மாலை 5மணி தொடக்கம் 8மணிவரை விசேட பஜனைகள் பாடி பூஜைகள் நடைபெறும். அனைத்து பக்தர்களும் வந்து கலந்துகொண்டு ஐயன் அருள் பெற்றுய்யும் வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம்.

குறிப்பு:-யாழ்ப்பாணத்தில் உள்ள பஜனை செய்யும் பக்தர்கள் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு வேண்டுறோம்.

சபரீச ஐயப்ப தேவஸ்தானம்,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

(C/24898)

சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்
செல்லுபடியாகும் டிக்கட்
தொடர் இல. 2194078 இருந்து
2211335 வரை
சீட்டிழுப்பு இல. 1349
திகதி 13.11.2002

வெற்றி எண்கள்

30 31 32 36 42

போனஸ் எண்
41

ஜக்பொட் பரிசு

ரூபா.1,500,000/- வெல்லப்படவில்லை.

பொருந்திய எண்கள்	வெற்றி பெற்றோர்	பரிசுத்தொகை	தொகை
5	..	1,500,000/-	-
4 எண்களுடன் (போனஸ் எண்	03	100,000/-	300,000/-
4	107	10,000/-	1,070,000/-
3	5,485	500/-	2,742,500/-
2	91,302	20/-	1,826,040/-
சீட்டிழுப்பில் ஆகக்குறைந்த 30ம் எண் (போனஸ் எண் தவிர்த்து)	111,946	10/-	1,119,460/-

வெல்லப்பட்ட மொத்த தொகை ரூபா.7,058,000.

இந்த சனிக்கிழமைக்கான ஜக்பொட்
ரூபா. 2,362,850/-

தொடர் இல. 3188854க்கு மேற்பட்ட பச்சை நிற டிக்கட்டுகள் 2002 நவம்பர் 16ம் திகதி சனிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 331, சென்ற் மைக்கேல் வீதி,
கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

சனிக்கிழமை அதிர்ஷ்ட சீட்டிழுப்பில்
பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில்
தங்கப்பரிசு வெற்றி பெறும்
5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

2199395-3-25
2194807-8-53
2196523-9-16
2203512-8-22
2198039-1-25

நல்லூர் பிரதேச சபை

2003 ஆம் ஆண்டுக்கான சந்தைகள், இறைசுசிக கடைகள்
கேள்விப்பத்திரம் வழங்கும் கால எல்லை நீடித்தல்

மேற்குறிப்பிட்ட கேள்வி அறிவித்தலின் பிரகாரம் படிவம் வழங்கும் கால எல்லை கீழ்க்கண்டவாறு நீடிக்கப்பட்டுள்ளது.

இது சம்பந்தமான மேலதிக விவரங்களை 30.10.2002 'வலம்புரி' பத்திரிகையிலும் 31.10.2002 'உதயன்' பத்திரிகையிலும் பார்த்தறிந்து கொள்ளலாம். அத்துடன் உரிய விவரங்களை நல்லூர், கொக்குவில் உப - அலுவலகங்களிலும், பிரதேச சபை தலைமைச் செயலகத்திலும் காரியாலய நேரத்தில் அறிந்துகொள்ளலாம்.

☆ கேள்விப்பத்திர விநியோகம் 22.11.2002 வெள்ளிக்கிழமை பகல் 12 மணிவரை
☆ கேள்விப்பத்திரம் ஏற்கும் திகதி 26.11.2002 செவ்வாய்க்கிழமை 10 மணிவரை
☆ கேள்விப்பத்திரம் திறக்கும் திகதி 26.11.2002 செவ்வாய்க்கிழமை 2 மணி

பிரதேச சபை,
நல்லூர்.
14-11-2002.

க.மணிபல்லவராஜன்
(ஜே.பி.யு.எம்.)
தலைவர்

(C/24899)

நீங்காத நினைவில் ஓராண்டு...

மலர்வு 20 - 08 - 1940

உதிர்வு 27 - 11 - 2001

அமரர் தம்பிப்பிள்ளை பரமசிவம்

(யாழ். கல்வித் திணைக்கள முன்னாள் ஆவண அறைப் பொறுப்பாளர்)

திதி- :- 16.11.2002

அன்பின் அப்பா!
உங்களை இழந்து ஓராண்டு கழிந்ததுவோ!
வாழ்விற்கும் சாவிற்கும் இடையே - ஓரே
எனும் ஓர் ஆறு கடந்து செல்ல வழியிருந்தும்
மருத்துவத்தின் மகத்தான சேவை - உங்கள்
உயிரைக் காப்பாற்ற முடியவில்லையே!
உங்கள் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கும்,

தற்காலிக முகவரி:
19/2, சாஸ்திரியார் லேன்,
அரியாலை.

பிரிவால் துயருறும்:
மனைவி :- திருமதி ப.பரமசிவம்
பிள்ளைகள் :- தங்கவேலி, வாசுகி, பாமினி

(10671)

புலிகள் தனிநாடு....

(முதலாம் பக்கம் பார்க்க)

வடக்கு - கிழக்கில் மத்திய அரசுக்குப் பொறுப்பில்லாத சமாந்தரமான ஓர் அரச அமைப்பை உருவாக்க புலிகள் இயக்கம் பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவே தெரிகிறது.

ஒஸ்லோவில் நடைபெறவிருக்கும் உதவி வழங்கும் நாடுகள் கூட்டத்தில் இலங்கை அரசுக்கு சமமானதாக புலிகள் இயக்கத்துக்கு இடமளிக்கப்பட்டிருப்பது கவலைக்குரியதானதாகும்.

நோர்வே அரசின் பங்களிப்பு நியாயமற்ற முறையில் பூதாகாரமாகியுள்ளது. விடுதலைப் புலிகளுக்கும் இலங்கையின் சட்டபூர்வமான அமைப்புகளுக்கும் இடையில் நோர்வே தொடர்ந்து நடுநிலைப் போக்கைக் கடைப்பிடிப்பதாகத் தெரியவில்லை.

இலங்கை நாட்டுமக்களின் நீண்டகால நன்மைகளை கவனத்தில் எடுப்பதை விடுத்து, பேச்சுக்களின் பெறுபேறு ஐ.தே.மு.அரசுக்கும் புலிகளுக்கும் பெரு வெற்றி என்பதை வெளிக்காட்டுவதிலேயே நோர்வே தரப்பு அதிக சிரத்தை எடுக்கின்றது.

நாங்கள் சமாதான முயற்சிகளுக்கு எதிரானவர்கள் அல்லர். சமாதானமான அரசியல் தீர்வு ஒன்றை பொ.ஐ.மு. முழுமையாக ஆதரித்து வரவேற்கின்றது. போர் மூலம் இப்பிரச்சினையைத தீர்த்துவிட முடியாது என்றும் அது நம்புகின்றது.

ஆனால், புலிகளுடனான பேச்சுக்கள் எந்த திசையில் நகருகின்றன என்பதை நாட்டுமக்களுக்கு அம்பலப்படுத்த வேண்டிய காலமும் கடப்பாடும் அரசுக்கு வந்துள்ளது என்பதையே வலியுறுத்த விரும்புகிறோம் என்றார் கதிர்காமர்.

இச்செய்தியாளர் மாநாட்டில் பேசிய சரத் அமுனுகம எம்.பி. "சமாதானப் பேச்சுக்கள் தொடர்பாக பொ.ஐ.முன்னணிக்கும் ஜனாதிபதிக்கும் அறிவிக்கப்படவில்லை என்றும் -

வருங்காலத்தில் நடைபெறவிருக்கும் பேச்சுக்களில் பரவலான பங்களிப்பு அவசியம் என்பது பொ.ஐ. முன்னணியின் கருத்தாகும் என்றும் -சொன்னார்.

(ஓ)

ஐந்து....

(முதலாம் பக்கம் பார்க்க)

மாவட்டங்கள் வருமாறு:- மேல் வலயம் - கொழும்பு, களுத்துறை, கம்பஹா மாவட்டங்கள் தென்வலயம் - காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை, மொனறாகலை, இரத்தினபுரி மாவட்டங்கள் மத்திய வலயம் - கண்டி, மாத்தளை, நுவரெலியா, பதுளை, அநுராதபுரம், பொலன்னறுவை மாவட்டங்கள் வடமேல் வலயம் - குருநாகல், புத்தளம், கேகாலை.

முதலீட்டுச்சபைத் திட்டங்களின்படி மேல்பொருளாதார வலயத்திற்கு மூன்று வருடவரிச்சலுகையும் ஏனைய பொருளாதார வலயங்களுக்கு ஐந்து வருட வரிச்சலுகையும் கிடைக்கும் எனவும் சபையின் அதிகாரி தெரிவித்திருக்கிறார். (ஓ)

தேர்தலைச் சந்திப்ப....

(முதலாம் பக்கம் பார்க்க)

ஒரு மாற்றம் கொண்டு வருவதற்காகவே 19 ஆவது திருத்தத்தை முன்வைத்தோம்.

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை பலம் இருக்கும் வரை நாடாளுமன்றத்தைக் கலைக்கமுற்படக்கூடாது. அது நாட்டு மக்களின் இறைமைக்கும் மக்களின் ஆணைக்கும் குந்தகம் விளைவிப்பதாக அமையும். எனவே, இன்றைய அரசமைப்பில் ஒரு மாற்றம் தேவை. நாடாளுமன்ற நிலையில் கட்டளைகளை மாற்றி அமைப்பதன் மூலம் நாடாளுமன்றத்தின் அதிகாரங்களைப் பலப்படுத்தமுடியும்.

இதன்படி, நாம் இன்று மக்களின் ஆணையைப் பெற்று நாடாளுமன்ற நிர்வாகத்தைக் கைப்பற்றியுள்ளோம்.

அதன்படி பிரதமர், அமைச்சரவை மற்றும் நீதி, நிர்வாகம் என்பன நாடாளுமன்றத்திடமே இருக்கின்றன. இதனை 1978 ஆம் ஆண்டில் கொண்டு வரப்பட்ட 13 ஆவது திருத்தம் ஊர்ஜிதப்படுத்துகின்றது. சட்டவாக்கமும், நீதி அதிகாரமும் மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசுக்கே உண்டு.

ஆனால், இன்று இந்த நிலைமை மாறுபட்டுள்ளது. நாடாளுமன்றம் ஒரு கட்சியிடமும், ஜனாதிபதி அதிகாரம் ஒரு கட்சியிடமும் தங்கியுள்ளன. எனினும், ஜனாதிபதி தான் நினைத்தபடி எதையும் செய்துவிட முடியும்.இது தொடர்பாக நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அனைத்துக் கட்சிகளுடனும் ஆலோசனையை நடத்தி ஆதரவைப்பெற விரும்புகின்றேன். பின்னர் ஜனாதிபதியுடனும் கருத்துப் பரிமாற நான் விரும்புகின்றேன்.

இரு கட்சிகளும் இணைந்தே அரசியல் அமைப்புச் சபையை நிறுவினோம். அச்சபை, பொலீஸ் ஆணைக்குழு, நீதி ஆணைக்குழு என்பனவற்றிற்கான உறுப்பினர்களின் பெயர்களைச் சிபார்சு செய்து, ஜனாதிபதிக்கு அனுப்பிவைத்துள்ளது. ஆனால், ஜனாதிபதி இதுவரை அவற்றை அங்கீகரிக்கவில்லை.

மேலும், இந்த நாடாளுமன்றத்திற்கு ஒரு செயலாள்நாயகம் இல்லை. பிரதிச் செயலாளர் நாயகமே இருக்கின்றார். இது நடைமுறைக்கு ஒவ்வாத ஒன்று. உடனடியாக நிரந்தரமான செயலாளர் நாயகம் ஒருவரை நியமிக்க சபாநாயகர், ஜனாதிபதியை வலியுறுத்தவேண்டும்.

நாட்டு மக்கள் எமக்கு அளித்துள்ள ஆணையை நிறைவேற்ற வேண்டியது எமது கடமை. நாடாளுமன்றத்தின் அதிகாரங்களைப் பலப்படுத்துவதின் மூலமே இதைச்செய்யமுடியும்.

எனவே, நாடாளுமன்றத்தின் அதிகாரங்களைப் பலப்படுத்த மீண்டும் மக்கள் முன்செல்ல நாம் தயார் என்று பிரதமர் குறிப்பிட்டார். (ஓ)

முக்கிய அறிவித்தல்

இந்துநாகரிக இந்து மெய்யியல் பயிலும் 2ஆம், 3ஆம் வருட மாணவா களை 18.11.2002ஆம் திகதி மதியம் 12.00 மணிக்கு இந்துநாகரிகத் துறையில் ஒன்றுகூடும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

இந்துநாகரிகத்துறை

3ஆம் வருட மாணவர்கள்,யாழ்.பல்கலைக்கழகம். (10653)

கண்ணீர் அஞ்சலி

சுபநாதனின் பாசமிகு உடன்பிறவாச் சகோதரன்

வை.அர்ஜன்

அவர்கள் நேற்று (15.11.2002) வெள்ளிக்கிழமை அகால மரணமானதையிட்டு துயருறும் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

யாழ் கல்வி நிலைய நிர்வாகி.

(C-24902) நல்லூர் பிரதேச செயலக சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர் (SDO J/99)

கண்ணீர் அஞ்சலி

எமது வித்தியாலய சிரேஷ்ட ஆசிரியை

திருமதி **கௌரி கணேசலிங்கம்** அவர்களின்

அன்புக் கணவர்

கணபதிப்பிள்ளை கணேசலிங்கம்

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்

யா/நாவாந்துறை றோ.க.வித்தியாலயம்

யாழ்ப்பாணம்.

(10643)

மூதூர் நீதிமன்றம் டிசெம்பர் முதல் இயங்க ஏற்பாடு

திருகோணமலை,நவ.16

மூதூர் நீதிவான் நீதிமன்ற அமர்வுகள் எதிர்வரும் முதலாம் திகதி முதல் சகல வேலை நாள்களிலும் மூதூரிலேயே இடம்பெறவிருக்கின்றன. இதற்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறு நீதிச்சேவை, ஆணைக்குழு ஏற்கனவே உரிய அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளது.

பல வருடகால இடைவெளிக்குப் பின்னர் மூதூர் நீதிவான் நீதிமன்ற அமர்வுகள் தொடர்ந்து மூதூரில் இப்பொழுதே இடம்பெறவிருக்கின்றன.

நீதிச்சேவை ஆணைக்குழுவின் சார்பில் அண்மையில் திருகோணமலைக்கு உத்தியோகபூர்வ விஜயம மேற்கொண்ட உயர் நீதிமன்ற நீதியரசர் அமீர் இஸ்மாயில் தலைமையிலான குழுவினரிடம், திருகோணமலை சட்டத்தரணிகள் சங்கத்தின் சார்பில் இதற்கான வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

உரிய நடவடிக்கை எடுக்கப்படுமென உயர் நீதிமன்ற நீதியரசர் அப பொழுது உறுதி அளித்திருந்தார். (ஓ)

7 புதிய டி.ஐ.ஜிகளை நியமிக்க நடவடிக்கை

கொழும்பு,நவ.16

ஏழு புதிய பிரதிப் பொலீஸ்மா அதிபர்களை (டி.ஐ.ஜி) நியமிக்க பொலீஸ் திணைக்களம் நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறது. மிகவிரைவில் இந்நியமனங்கள் மேற்கொள்ளப்படும்.

பிரதிப் பொலீஸ்மா அதிபர்கள் நியமனத்துக்கான நேர்முகப்பரீட்சைகள் கடந்த 9 ஆம் திகதி நடைபெற்றன. சிரேஷ்ட பொலஸ் அத்தியட்சகர்கள் 34 பேர் இதில் பங்குபற்றினர்.

உபகுழுவின்....

(முதலாம் பக்கம் பார்க்க)

பழையில் நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டிருந்தது. கூட்டத்தை நெலலிப்பழை பிரதேச செயலக மண்டபத்தில் நடத்துவதற்கு வேண்டிய ஏற்பாடுகளை யாழ்.செயலகம் மேற்கொண்டிருந்தது. இராணுவக்கட்டுப்பாட்டு பிரதேசங்களில் நடைபெறும் இது போன்ற கூட்டங்களில் புலிகளின முக்கிய தளபதிகள் கலந்துகொள்ள வேண்டியிருப்பதால் அவர்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் சில நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் என்று புலிகள் கேட்டிருந்தனர். இதனையடுத்து புலிகளின் தளபதிகள் தங்கள் பாதுகாப்புக்காக கைத்துப்பாக்கி, மெய்க்காவலர்கள் சகிதம் இராணுவக கட்டுப்பாட்டு பகுதிகளுக்குச் செல்ல வசதி செய்யும் உடன்பாடு ஒன்றை ஏற்படுத்த கண்காணிப்புக்குழு முயன்று வருகிறது.

இந்த உடன்பாடு எட்டப்படுவதில தாமதம் ஏற்பட்டிருப்பதாலேயே தெல்லிப்பழையில் கூட்டத்தை நடத்தும் திட்டம் கைவிடப்பட்டிருப்பதாகத் தெரியவந்தது.

இதை அடுத்து கூட்டத்தை முகமாலையில் நடத்த முடிவாகியுள்ளது.

இன்றைய கூட்டத்தில் அரசுதரப்புக் குழுவுக்கு பாதுகாப்பு அமைச்சுச் செயலர் ஒஸ்ரின் பெர்னாண்டோவும் விடுதலைப் புலிகள் தரப்புக்குழுவிற்கு வடமுனைக் கட்டளைத்தளபதி கேணல் தீபனும் தலைமைவகிப்பர்.

கடற்புலிகளின் தளபதிகள், அரசியல் பொறுப்பாளர்கள் பலரும் கூட புலிகள் தரப்பில் பங்குபற்றுவர்.

இராணுவத்தளபதிகள், கூற்படைத தளபதிகள் பலர் அரச தரப்புக்குழுவில் இடம்பெறுவர்.

அதிஉயர் பாதுகாப்பு வலயம், மக்கள் மீள்குடியமர்வு, கண்ணிவெடி அகற்றல் போன்ற விடயங்கள் குறித்து இன்றைய கூட்டத்தில் ஆராயப்படவிருக்கின்றன.

(ஐ-3)

நிரு

ரியூசன் சென்ரர்

கோண்டாவில்

A/L 2004

அலைகளும்

அதிர்வுகளும்

K.சிவலிங்கம்

(B.Sc. spl.)

சனி, ஞாயிறு 5 மணி

(10667)

பரபரப்பான போட்டியில் இந்திய அணி வெற்றி

மேற்கிந்திய அணியுடனான நான்காவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்திய அணி 5 விக்கெட்டுகளால் வெற்றிபெற்றது.

இந்தியாவின் அஹமதாபாத்தில் நடைபெற்ற இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்திய அணி 50 ஓவர்களில் 4விக்கெட் இழப்பிற்கு 324 ஓட்டங்களைப் பெற்றது.

கிறிஸ்கைல் 127 பந்துவீச்சுக்களில் 140 ஓட்டங்களைப்பெற்றார். ராம்நரேஷ்சர்வான் 104 பந்து வீச்சுக்களில் ஆட்டமிழக்காமல் 99 ஓட்டங்களைப் பெற்றார். பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 47.4 ஓவர்களில் 5 விக்கட்டுக்களை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

இந்தியா முதலிரு விக்கெட்டுகளையும் சொற்ப ஓட்டங்களில் இழந்து நெருக்கடிக்குள்ளானது.

எனினும் ராகுல்டிராவிட், லஷ்மன், பங்கார் ஆகியோர் அணியை வெற்றிப்பாதைக்கு இட்டுச் சென்றனர். டிராவிட் 124 பந்து வீச்சுக்களில் ஆட்டமிழக்காமல் 109 ஓட்டங்களைப பெற்றார். பங்கார் 41 பந்து வீச்சுக்களில் ஆட்டமிழக்காமல் 57 ஓட்டங்களைப் பெற்றார். கிறிஸ்கைல் இப்போட்டியின் சிறப்பாட்டக்காரராகத் தெரிவானார்.

இத்தொடரில் தற்போது இரு அணிகளும் 2-2 விகிதத்தில் சமநிலையில் உள்ளன. 5ஆவது போட்டி நாளை மறுதினம் நடைபெறவுள்ளது. (ஓ)

இலங்கைக்கு 263 ஓட்டங்கள்

தென்னாபிரிக்க அணியுடனான இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் முதல் நாளன்று இலங்கை 6 விக்கெட் இழப்பிற்கு 263 ஓட்டங்களைப் பெற்றது. இப்போட்டி செஞ்சூரியன் நகரில் நேற்று ஆரம்பமானது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்க அணித்தலைவர் ஷோன் பொலொக் இலங்கை அணியை முதலில் துடுப்பெடுத்தாட அழைத்தார்.

தனது இரண்டாவது டெஸ்ட் போட்டியில் விளையாடுகின்ற ஜேஹான முபாரக் 48 ஓட்டங்களைப் பெற்றார். சிரேஷ்ட வீரர் ஹசான் திலகரத்ன 82 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் உள்ளார். (ஓ)

மரண அறிவித்தல்கள்

வைகுந்தநாதன் அர்ஜன்

(கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை, யாழ் கல்வி நிலையம் ஆறுகால்மடம்)

கே.கே.எஸ். வீதி, கோண்டாவில் மேற்கைச் சேர்ந்த வைகுந்தநாதன் அர்ஜன் நேற்று 15.11.2002 அகால மரணமானார்.

அன்னார் கிருஷ்ணபிள்ளை வைகுந்தநாதன் (சிமெந்து கூட்டுத்தாபனம்) - ரஞ்சனிதேவி தம்பதிகளின் அன்பு மகனும் கோகுலன் (கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவன்), விதுசா (கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை), சதீஸ் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான கிருஷ்ணபிள்ளை - கனகம்மா தம்பதிகளின் பேரனும் காலஞ்சென்ற பசுபதிப்பிள்ளை மற்றும் இராசம்மா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.11.2002) சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக இணுவில், காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கே.கே.எஸ். வீதி,
கோண்டாவில் மேற்கு. (C/24901)

தகவல்:
சி.வைகுந்தநாதன்
(தகப்பன்)

நடராசா இராசம்மா

சங்கரத்தையைப் பிறப்பிடமாகக் கொண்ட நடராசா இராசம்மா அவர்கள் நேற்று (15.11.2002) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.11.2002) சனிக்கிழமை பி.ப.1.00 மணியளவில் ஆலங்குளாயில் உள்ள செல்லத்துரை இராசலிங்கம் என்பவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நணபர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆலங்குளாய் வீதி,
சண்டிலிப்பாய் (C/24903)

தகவல்:
இராசலிங்கம்
(பேறாமகன்)

கணபதிப்பிள்ளை கணேசலிங்கம்

(கணபதி கணேசன்)

(செம்பருத்தி பப்ளிக்கேசன் - மலேஷியா)

பிரபல ஈழத்து எழுத்தாளர் கணபதி கணேசன் அவர்கள் 13.11.2002 புதன்கிழமை இந்தியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை - செல்லம்மா தம்பதிகளின் கனிஷ்ட புதல்வரும் காலஞ்சென்ற பண்டிதர் திருநாவுக்கரசு (அதிபர்) - தங்கம்மா (ஓய்வுபெற்ற ஆசிரியை, நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயம்) தம்பதிகளின் மருமகனும் கௌரி (ஆசிரியை யாழ்.நாவாந்துறை றோ.க. வித்தியாலயம்) அவர்களின் அன்புக்கணவரும் யதுநந்தன் (உயிரியல் பிரிவு-2002, யாழ்.இந்துக் கல்லூரி), மதுரா (கலைப் பிரிவு-2003, யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி) ஆகியோரின் பாசமிகுதந்தையும் மயில்வாகனம் (கனடா), மகாலிங்கம் (வவுனியா), யோகநாதன் (வலம்புரி பத்திரிகை), காலஞ்சென்ற கனகலிங்கம், ஜெகதீஸ்வரி ஆகியோரின் அருமைச்சகோதரரும் தேவமனோகரி (சிலாபம்), முருகானந்தன் (நோர்வே), பிறைகுமார் (நோர்வே), துளசிமனோகர் (Music Therapist-இந்தியா), லில்லி (கனடா), தனபாக்கியலட்சுமி, சிவமலர், கதிர்வேல் (கதிர்வேல் நகைமாடம்) ஆகியோரின் அன்புமைத்துனரும் ஸ்ரீதரன் (நில அளவையாளர்-சிலாபம்), உமா (நோர்வே), சுகிர்தா (நோர்வே), Dr.கணேஷ் (இந்தியா) ஆகியோரின் உடன்பிறவாச்சகோதரரும் காலஞ்சென்ற நிமலராஜன் (பத்திரிகையாளர்), கனடாவைச் சேர்ந்த பிறேமராணி, கமலராணி, செல்வராணி, நிமலராணி, ஆனந்தவதனி, மகாலட்சுமி (இந்தியா), கமலவாணி, மங்களரூபி, மணவாளதாசன், கமலதாசன், பிரமாதீசன் (சுப்பேஷா), கமலவதனி (நுண்கலைப்பிரிவு-யாழ்பல்கலைக்கழகம்) ஆகியோரின் சிறியதந்தையும் கார்த்திகா (கணிதப்பிரிவு-2002, கொழும்பு சைவ மங்கையர் கழகம்), அபிராமி (சென் பெனடிக் கல்லூரி, சிலாபம்) ஆகியோரின் பெரியதந்தையாரும், சசிதரன் (U.K), விஜிதரன் (விளை.அலுவலர் நெடுந்தீவு), ஜெகதரன் (பொறியியல்பிரிவு-பேராதனை பல்கலைக்கழகம்) ஆகியோரினதும் நோர்வேயைச் சேர்ந்தவர்களான திவ்யா, சிநேகா, அபிஷேக் ஆகியோரின் அன்புமாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.11.2002) ஞாயிற்றுக்கிழமை 70, சிவன்கோவில் தெற்கு வீதி, திருநெல்வேலியில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் கோம்பையன்மணல் இந்துமயானத்திற்கு தகனக்கிரியைக்காக மு.ப.11 மணிக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

70, சிவன்கோயில் தெற்குவீதி,
திருநெல்வேலி. (10656)

தகவல்:
கௌரி-கணேசலிங்கம்
(மனைவி)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361அம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 16.11.2002இல் அச்சிட்டு, வெளியிடப்பெற்றது.